Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 37 கதிர் : 282 | ஞாயிற்றுக்கிழமை 04 செப்ரெம்பர் 2022 | ஆவணி 19 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16+08 | விலை: 60/=



"ஆள் நாட்டுக்க வந்து இறங்க முதலே பாண் விலை பறங்கத் தொடங்கிட்டுது பாருங்கோ, எல்லாம் கோத்தாராசி போல"

## மோ.சைக்கிள் மதிலுடன் மோதுண்டு ஒருவர் சாவு!

### தலைக்கவசம் அணியாததால் விபரீதம்

யாழ்ப்பாணம், செப். 4 நண்பருடன் மோட்டார் சைக்கிளில் பின்னாலிருந்து பயணித்தவர் விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார். வேலணை 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஜெகதீபன் 14

## மொட்டு இன்னும் சிதறும் டலஸ் அணி பலம்பெறும்

கொழும்பு, செப். 4 சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் மேலும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் டலஸ் ஆதரவு அணியில் 04

தமிழர் பிரச்சினைகளைத் தீர்க்குமாறு

## ரெலோ கோரிக்கை; நமுவினார் ரணில்!

யாழ்ப்பாணம், செப். 4 ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான 04

# ராஜபக்சக்களின் மீளெழுச்சி இலங்கையில் விரைவில் நடக்கும்!

### கோத்தாவின் வருகையோடு மஹிந்த, பஸில் எக்காளம்

கொழும்பு, செப்ரெம்பர் 4

ராஜபக்சக்களை கீழ்த்தரமாக விமர்சிக்கவேண்டாம். ராஜபக்சக்களின் எழுச்சி விரைவில் நடக்கும். உள்நாட்டு ,வெளிநாட்டு சக்திகளின் சூழ்ச்சிகளால் ராஜபக்சக்களின் அரசியல் பயணத்துக்கு ஒருபோதும் முடிவு கட்ட முடியாது – இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ச ஆகியோர் தெரிவித்துள்ளனர். 04

சிறப்புரிமைகள் விலக்கப்பட்டுள்ளதால்

## கைது செய்யுங்கள் கோத்தாபயவை!

### போராட்டக்காரர்கள் கோரிக்கை

கொழும்பு, செப். 4 முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நாடுதிரும்பியுள்ள நிலையில் அவரைக் கைது செய்ய 14

## தொண்டைமானாறில் முதலை அடியவர்களே, அவதானம்!

யாழ்ப்பாணம், செப். 4

தொண்டைமானாறு ஆற்றில் முதலைகள் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளதால் ஆற்றில் 04

## முள்ளுகுத்தியதால் குடும்பஸ்தர் சாவு!

யாழ்ப்பாணம், செப். 4 முள் கிளுவை கதியால் குத்தியதால் ஒருவர் உயிரிழந்துள்ளார். அனலைதீவு 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த குமாரசாமி தம்பிராசா (வயது - 70) 04

துன்னாலையில்

## இரு கிராமங்கள் இடையே தொடர் மோதலால் பதற்றம்

### 15 வீடுகள் சேதம், 25 பேர் தேடப்படுகின்றனர்

### எஸ்.ரி.எவ். களமிறக்கம்

விரிவு - பக். 14

சர்ச்சைக்குரிய சாமியார்

## நித்தியானந்தா இலங்கையில் தஞ்சம் கோரினாரா?

### இந்திய ஊடகங்கள் பரபரப்பு தகவல் ஜனாதிபதி ஊடகப் பிரிவு மறுப்பு

கொழும்பு, செப். 4 இந்திய சாமியார் நித்தியானந்தா இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் எழுதியதாக 14

## தொலைபேசி, இணையம்; கட்டணங்கள் எகிறின

கொழும்பு, செப். 4 கைத்தொலைபேசி, நிலையான தொலைபேசி மற்றும் புரோட்பாண்ட் (இணையம்) சேவைகளுக்கான கட்டணத்தை அதிகரிக்க இலங்கை 14

## பாண் விலை என்ன? பாதில் குழப்பம்

விரிவு - பக். 14




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழர் மீதான அடக்குமுறைக்கு வழிவகுத்தவர் பிரேமதாஸதான்!

## சஜித்துக்கு நினைவிருக்கட்டும் சாடுகிறார் பிரசன்ன ரணதுங்க



கொழும்பு, செப். 4

தமிழ் மக்களின் வீடுகளையும் சொத்துக்களையும் எரித்து 30 வருட போருக்கு வழிவகுத்தவரும் 60 ஆயிரம் இளைஞர்களைக் கொன்று குவித்தவரும் தனது தந்தை பிரேமதாஸதான் என்பதை மறந்து அடக்குமுறைகளைப்பற்றி அவரது மகனான சஜித் பிரேமதாஸ அதிகமாகவே பேசுகின்றார்– இவ்வாறு பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இடைக்கால வரவு -செலவுத் திட்டத்தின் மீதான மூன்றாவது நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதற்கெடுத்தாலும் ராஜபக்ச குடும்பத்தினர் மீது குற்றஞ்சாட்டும் எதிர்க்கட்சியினர் உக்ரைன் போரால் இதைவிட மோசமான பொருளாதார நிலைமையை எதிர்காலத்தில் எதிர்கொள்ள நேரும் போதும் அதற்கும் ராஜபக்சக்கள் மீதுதான் பழிபோடுவார்கள்.

நாட்டின் இன்றைய நெருக்கடி நிலை இன்று, நேற்று ஏற்பட்டதல்ல. இது தொடர் பொருளாதார நெருக்கடி. அந்தவகையில் எதிர்க்கட்சியில் உள்ள சிலர், மொட்டுக் கட்சியைக் குறைகூறுவது எந்த விதத்திலும் ஏற்க முடியாது.

அரச செலவினங்கள் அதிகரித்தமை எமது ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட ஒன்றல்ல. கடந்தகால அரசாங்கங்களின் ஆட்சியிலும் அது தொடர்ந்தது.

அடக்குமுறைகளைப்பற்றி பேசும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தமிழ் மக்களின் வீடுகளையும் சொத்துக்களையும் எரித்து 30 வருடப் போருக்கு வழிவகுத்தவர் அவரது தந்தை பிரேமதாஸ என்பதை மறந்து பேசுகின்றார்.

அதேவேளை, நாட்டில் 60 ஆயிரம் இளைஞர்களைக் கொன்று குவித்ததும் அவரது தந்தை பிரேமதாஸவே. எனவே, எரியும் நெருப்பில் குளிர்காய முற்பட வேண்டாம். கண்ணாடி வீட்டில் இருந்து கொண்டு கல்லெறிவது நல்லதல்ல- என்றார். (ம-14,22)

# ஜீவந்த பீரிஸின் மனு மீளப்பெறப்பட்டது

கொழும்பு, செப். 4

அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் போராட்டத்தின் முன்னணி செயற்பாட்டாளராகக் கூறப்படும், அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் சார்பில் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனு மீளப்பெறப்பட்டுள்ளது.

ஜீவந்த பீரிஸுக்கு எதிரான மனு உயர் நீதிமன்றில் நீதியரசர்கள் பிரியந்த ஜயவர்தன, யசந்த கோதாகொட மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் முன்னிலையில் வியாழக்கிழமை பரிசீலனைக்கு வந்தது.

இதன்போது மனுதாரர் சார்பில் மன்றில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரியன்சி அர்சகுலரத்னவின் கோரிக்கையை ஏற்று ஜீவந்த பீரிஸின் மனுவை மீளப்பெற உயர்நீதிமன்றம் அனுமதியளித்தது. (ம-14,இ)



# பிரதமராக கோத்தாபய: திரைமறைவில் சூழ்ச்சி!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 4


கோத்தாபய ராஜபக்ச நாடு திரும்பியுள்ள நிலையில், அவரை நாடாளுமன்றத்துக்கு அழைத்து வந்து பிரதமராக்கும் அரசியல் சூழ்ச்சி இடம்பெற்று வருகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2018ஆம் ஆண்டு இடம்பெற்றதைப் போன்றே தற்போதும் அரசியல் சூழ்ச்சி இடம்பெற்று வருகின்றது.

தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்த்தனவைப் பதவி நீக்கிவிட்டு அந்த இடத்துக்கு கோத்தாபய ராஜபக்சவை பிரதமராக்குவதற்கு முயற்சிக்கப் பட்டு வருகின்றது. ராஜபக்ச குடும்பத்தைப் பாதுகாப்பதற்காக இந்த அரசியல் சூழ்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன - என்றார். (ம-22)



# எம்.பி.க்கள் வீடு எரிப்பு; மேலும் நால்வர் கைது

கொழும்பு, செப். 4

கடந்த மே மாதம் 9 ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர்களான சமன்பிரிய ஹேரத் மற்றும் கோகிலா ஹர்ஷனி குணவர்தன ஆகியோரின் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் 4 சந்தேக நபர்களை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

குளியாப்பிட்டியவில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சமன் பிரிய ஹேரத்தின் கட்சி அலுவலகத்துக்குத் தீவைத்த குற்றச்சாட்டில் 42 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், மேல் எலத்தலாவ, மஹலந்த பிரதேசத்தில் வைத்தே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

லோலுவாகொடவில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் கோகிலா ஹர்ஷனி குணவர்தனவின் வீடு மற்றும் அலுவலகத்துக்குத் தீவைத்த குற்றச்சாட்டில் சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். 19, 22 மற்றும் 30 வயதுடைய மீரிகம மற்றும் லோலுவாகொட பிரதேசத்தைச் சேர்ந்த மூவரே கைது செய்யப்பட்டுள்ளனர். (எ-இ)

# பாதாளக் குழுவினரால்தான் நாட்டில் துப்பாக்கிச் சூடுகள்!

கொழும்பு, செப். 4

போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய, பாதாள உலகக்குழுவினரால்தான் நாட்டில் தொடர்ந்து துப்பாக்கிச்சூடுகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் கடந்த சில மாதங்களாகத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. கடந்த மே 31 ஆம் திகதி தொடக்கம் நாட்டின் பல பகுதிகளில் பதிவாகும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள், வெளிநாடுகளில் இருந்து நாட்டில் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் தரப்பினரால் வழிநடத்தப்படுகின்றன என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கடந்த மே 31ஆம் திகதி தொடக்கம் செப்ரெம்பர் முதலாம் திகதி வரை 30 பேர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் இளைஞர்களாவர் - என்றார். (ம-22)

# தமிழகத்தால் உணவுக்கப்பல்; சீனாவால் உளவுக்கப்பல்

## கோவிந்தன் கருணாகரம் எம்.பி சுட்டிக்காட்டு



கொழும்பு, செப். 4

இலங்கைக்கு தமிழகம் உணவுக்கப்பல்களை அனுப்பும்போது, சீனா உளவுக் கப்பலையே அனுப்புகின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் நேரத்தில் உதவிய நாடு இந்தியா மட்டுமே. கடந்த பொருளாதார நெருக்கடியில் 4 பில்லியன் டொலரை இலங்கைக்குக் கடனாக இந்தியா வழங்கியுள்ளது. குறைந்த வட்டியில் 800 மில்லியன் டொலர் உணவுக்காகவும் மருந்து மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்காகவும், கடனடிப்படையில் 700 மில்லியன் டொலர் எரிபொருளுக்கும், இரசாயன உரத்துக்கு 55 மில்லியன் டொலரும் வழங்கி இந்தியா உதவியிருக்கின்றது. அத்துடன் மீனவர்களுக்கு மண்ணெண்ணெயும், அதற்கு மேலாக தமிழகத்திலிருந்து அன்பளிப்பாக உணவு, பால்மா, மருந்துப்பொருள்களும் வழங்கப்பட்டுள்ளன.

நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இந்தக் காலகட்டங்களில் இந்தியா எங்களுக்கு உதவிக் கப்பல்களை அனுப்புகின்றது. உணவுக்கப்பலை அனுப்புகின்றது. ஆனால், இலங்கைக்கான கடனைக் கூட மறுசீரமைக்க முடியாது எனக் கூறும் சீனா இலங்கைக்கு உளவுக் கப்பலையே அனுப்புகின்றது.

இந்த நாடாளுமன்றத்திலே செங்கோல் வரும்போது எழுந்து நிற்க முடியாத அத்துரலிய ரத்தின தேரர், சீனாவிலிருந்து உளவுக்கப்பல் அம்பாந்தோட்டைத்துறைமுகத்துக்கு வரும்போது அங்கு சென்று அந்த உளவுக்கப்பலுக்கு மரியாதை கொடுத்து எழுந்து நிற்கின்றார். இதுதான் இந்த நாட்டின் சாபக்கேடு- என்றார். (ம-14,22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உயரிய செல்வந்தர்

பலரும் ஒரு மனிதனின் செல்வத்தைக் கணிப்பது அவரிடம் உள்ள பணத்தைப் பொறுத்தே. ஆனாலும் பழங்காலந்தொட்டே பாரம்பரியத்தின் பெறுமதிகளாலும், குண நலன்களாலும் போஷிக்கப்பட்ட இலங்கையரான எமக்கு, பணத்தாலும், செல்வத்தாலும் ஒரு மனிதனின் செல்வத்துவத்தை அளவீடு செய்வது சிறப்பல்ல.

அதனை இலங்கையரின் சிறப்பம்சங்களோடு திகழும் சம்பத் வங்கியான நாம் என்றும் மறக்கவில்லை. எமது இந்த பிணைப்பானது

**கொடுக்கல் வாங்கல்களுக்கு அப்பால் இன்றும் என்றும் நிலைத்திருப்பதாகும்.**

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

0112 30 30 50 www.sampath.lk Sampath Bank Fitch Ratings AA- (lka)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
07 . 06 . 1947



மறைவு
31 . 08 . 2022

## தங்கராஜா சறோஜா (சிவமலர்)

இல.81, றக்கா வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா சறோஜா (சிவமலர்) கடந்த (31.08.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, கனகமணியின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற தம்பிஜயா தங்கச்சியம்மாவின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற தம்பிஜயா தங்கராஜா (C.T.B சாரதி) அவர்களின் அன்பு மனைவியும் றமேஸ் (கொலண்ட்), சுறேஜினி (பிரான்ஸ்), றணேஸ், நரேஸ் (கனடா), கரேஸ் (இலத்திரணியல் திருத்துனர், கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்), சிறாஞ்சினி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாரும் விஜயராஜன் (பிரான்ஸ்), ரவிக்குமார் (நோர்வே), சைலஜா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சிவலிங்கம், மோகனா, வேலுப்பிள்ளை, விஜயதாஸ் (மெக்கானிக் செல்வராஜா), கோமளா, காலஞ்சென்ற ஜெயதாஸ், சுகுணா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான இராசமலர், கனகமலர், யோகமலர், ஜெயராஜா, றெஜீஸ், ரஞ்சிதமலர் ஆகியோரின் மைத்துனியும் ந.யஸ்மின் (கனடா) அவர்களின் அப்பம்மாவும் விதுஷா, சந்தோஷ் (நோர்வே) ஆகியோரின் அம்மம்மாவும் சானுஜா (மாணவி, யாழ்.இந்து மகளீர் கல்லூரி), பவித்திரன் (மாணவன், யாழ்/புனித ஜோன் பொஸ்கோ), கர்ஷாந் (ஹார்மல் பாலர் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.09.2022) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் சித்துபாத்தி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 2030 304
021 222 4517

தகவல்: குடும்பத்தினர்,
த.கரேஸ்

## தொண்டைமானாறில்...

அடியவர்கள் அவதானமாக நீராடுமாறு ஆலய நிர்வாகத்தினரால் அறிவிக்கப் பட்டுள்ளது.

வரலாற்றுப் பிரசித்திபெற்ற செல்வச்சந் நிதி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா தற்போது நடைபெற்று வருகின்றது.

செல்வச்சந்நிதி ஆலயத்தின் பின்புறமுள்ள ஆற்றில் முதலைகள் அவதானிக்கப்பட்டுள்ளன. எனவே ஆற் றில் நீராடும் அடியவர்கள் அதில் அடை யாளமிடப்பட்டுள்ள மிதப்பு எல்லை யைத்தாண்டி நீராட வேண்டாம் என ஆலய நிர்வாகத்தினர் மேலும் அறிவித் துள்ளனர். (அ-ஒ-ச-26-27)

## ராஜபக்சக்களின்...

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜ பக்ச நேற்றுமுன்தினம் நள்ளிரவு நாடு திரும்பியுள்ளமை ராஜபக்சக்களின் மீளெழுச்சிக்கு வழிவகுக்கும் என்று அர சியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ள நிலையிலேயே அவரின் சகோதரர்கள் இருவரும்மேற்கண்டவாறு கூறியுள்ளனர்.

**மஹிந்த**

'ராஜபக்சக்கள் தோற்கவும் இல்லை, தோற்கடிக்கப்படவும் இல்லை. சுயமாகப் பதவிகளிலிருந்து விலகிய அவர்கள் விரைவில் மீளெழுச்சி பெறுவார்கள். எதிரணியினர் ராஜபக்சக்களைக் கண்ட படி வசைபாடுகின்றனர்; குறைத்து மதிப் பிடுகின்றனர். ராஜபக்சக்களின் அரு மையும், திறமையும் , எமக்கு ஆணை வழங்கிய மக்களுக்கு நன்றாகப் புரியும். உள்நாட்டு, வெளிநாட்டு சூழ்ச்சிகளால் ராஜபக்சக்களின் அரசியலுக்கு முடிவு கட்ட முடியாது.

தேர்தல் ஒன்று நடந்தால் அதில் ராஜபக் சக்களினதும் 'மொட்டு'க் கட்சியினரின தும் கைகள் மீண்டும் ஓங்கும். அந்தத் தேர்தலில்எதிரணியினர்வழமைபோன்று தோல்வியையே தழுவுவார்கள்.

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜ பக்ச நாடு திரும்பியதை நான் வரவேற் கின்றேன். தனது மீள் அரசியல் பிரவேசம் தொடர்பில் அவர் சிறந்த முடிவை எடுப் பார்' என்று மஹிந்த தெரிவித்துள்ளார்.

**பஸில்**

'கோத்தாபய ராஜபக்ச, நாட்டைவிட்டுத் தப்பியோடவும் இல்லை. அவர் விரட்டிய டிக்கப்படவும் இல்லை.

நாட்டில் சில தரப்புக்களின் சதி முயற்சி யால் திடீரென எழுந்த கொந்தளிப்பு நிலைக்குத் தீர்வுகாணவே அவர் சுய மாக நாட்டைவிட்டு வெளியேறி ஜனாதி பதி பதவியிலிருந்து விலகியிருந்தார்.

நாட்டில் தற்போது அமைதி நில[illegible]வதால், அவர் மீண்டும் இங்கு வந்துள்ளார்.

அவர் இலங்கைப் பிரஜை. ஒரு முன் னாள் ஜனாதிபதி. இந்நிலையில், அவர் வெளிநாடுகளில் தங்க வேண்டிய அவ சியம் இல்லை.

நாடு திரும்பியுள்ள அவருக்கு முன் னாள் ஜனாதிபதிக்குரிய சிறப்புரிமை களை அரசு வழங்குகின்றது.

அவர் விரும்பினால் மீண்டும் 'மொட்டு'க் கட்சி ஊடாக அரசியலுக்குள் நுழைய லாம். இது தொடர்பில் அவரே முடிவு எடுக்க வேண்டும்' - என்றார் பஸில் ராஜ பக்ச. (அ-ஒ-22)

## மொட்டு...

இணையக்கூடும் என மொட்டுக் கட்சி யின் உள்ளகத் தகவல்களை மேற் கோள்காட்டி சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கான பேச்சுகள் வெற்றியளித்துள் ளன எனவும், விரைவில் தாவல் அரங் கேறும் எனவும் தெரியவருகின்றது.

பெரமுனவில் இருந்து டலஸ் அழகப் பெரும, பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் உட் பட 13 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளியேறியுள்ளனர். அவர்கள் தற் போது புதியதொரு அரசியல் இயக் கத்தை உருவாக்கியுள்ளனர்.

இந்நிலையில் டலஸ் தரப்பை இணைத் துக்கொள்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி யும், விமல் தரப்பும் முயற்சித்து வருகின் றன. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே மொட்டுக் கட்சி உறுப்பினர்கள் சிலர் டலஸ் பக்கம் சாயவுள்ளனர். (அ-ஒ-44)

## ரெலோ...

ரெலோ நேற்றுச் சந்திப்பு நடத்தியுள்ளது. அவர்கள் பல்வேறு விடயங்கள் தொடர் பில் ஜனாதிபதி ரணிலுக்குச் சுட்டிக்காட்டிய போதும் , ரணில் பிடிகொடுக்காமல் நழு வல் போக்கில் பதிலளித்துள்ளார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் ரெலோ அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் செல்வம் அடைக்க லநாதன், செயலர் கோவிந்தன் கருணா கரம் மற்றும் தேசிய அமைப்பாளரும் ஊடகப் பேச்சாளருமான சுரேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**அரசியல் கைதிகள்**

முதலாவதாக குரல் அற்றோர் குரல் அமைப்பினரின் வேண்டுகோளை சுட் டிக்காட்டி அவர்களால் கையளிக்கப்பட்ட அரசியல் கைதிகள் விவரம் ஜனாதிபதியி டம் வழங்கப்பட்டது. 24 கைதிகள் தண் டனை வழங்கப்பட்டு இருப்பதனாலே நேரடியாக ஜனாதிபதியின் உத்தரவில் விடுதலை செய்யப்பட முடியும் என்றும் காலதாமதம் இன்றி அவர்களை விடு விக்குமாறும் கோரப்பட்டது.

மேலும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 22 கைதிகள் ஜனாதிபதியின் விசேட மன் னிப்பால் விடுதலை செய்ய முடியும். நல்லாட்சி அரசின் காலத்தில் புனர் வாழ்வு அளிக்கும் முறைமையின் கீழ் கைதிகள் விடுதலை செய்யலாம் என்ற திட்டத்தை அப்போது பிரதமராக இருந்த தற்போதைய ஜனாதிபதி நடைமுறைப்ப டுத்த முற்பட்டதும் நினைவு கூரப்பட்டது. இந்த அரசியல் கைதிகளை விரைந்து விடுதலை செய்யும் பொறிமுறை, அது குறுகிய காலப் புனர்வாழ்வின் அடிப்ப டையாக இருந்தாலும், ஏற்றுக்கொள்ள லாம் என்று தெரிவிக்கப்பட்டது.

தண்டனை வழங்கப்பட்ட 24 அரசியல் கைதிகளையும்உடனடியாகவிடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் மற்றவர்களு டைய விடுவிப்பு சம்பந்தமாக நீதி அமைச்சருடன் கலந்தாலோசித்து விரை வான நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி உறுதியளித்தார்.

மேலதிகமாகத் தடுப்பில் உள்ள 38 அர சியல் கைதிகளுக்கு எதிராக எந்தக் குற் றங்களும் இல்லாததால் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரையின்படி அவர்களை விடுவிக்க முடியும் என்றும் ரெலோவால் சுட்டிக் காட்டப்பட்டது.

**காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்**

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சம் பந்தமான தகவல்களை திரட்டுவதற்கு சர்வதேச மேற்பார்வையுடனான பொறி முறையே அவசியம் என்பதை கூட்ட மைப்பு தொடர்ந்தும் வலியுறுத்தி வந் தது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோ ரின் உறவுகளும் அதையே வலியுறுத்தி போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். அதற்கு அரசாங்கம் இணங்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

ஐ.நா. அமர்வுகளுக்கு பின்னராக நீதி அமைச்சருடன் அதற்கான குழு ஒன்றை அமைத்து தமிழர் தரப்புடனும் கலந்தா லோசித்து நடவடிக்கை எடுக்க ஆவன செய்வதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

**கல்முனை பிரதே செயலகம்**

மூன்றாவதாக கல்முனை வடக்கு பிர தேச செயலகத்தை தரம் உயர்த்துகின்ற வேலைத்திட்டத்தை இனிமேலும் பின் போடாது நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. ஏற்கனவே நல்லாட்சிக் காலத்தில் அதற்கான அமைச்சரவை பத்திரம் தயாரிக்கப்பட்டி ருந்தது. அது நிறைவேற்றப்படாமல் போனது துரதிர்ஷ்டவசமானது. ஒரு நிர்வாக ரீதியான தரம் உயர்த்தலுக்கு அரசியல் காரணங்களைக் காட்டிப் பிற் போடுவது அந்த மக்களை துன்பத்தில் ஆழ்த்துவதாக அமையுமே தவிர எத் தரப்புக்கும் நன்மை பயக்காது என்று எடுத்துரைக்கப்பட்டது. அதை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி விரைந்து அதை செயற்படுத்தி தருவதாக உறுதியளித்தார்.

**மீனவர் - விவசாயிகள் விவகாரம்**

எரிபொருள் தட்டுப்பாட்டால் குறிப்பாக வடக்கு - கிழக்கு மீனவர்கள், தொழில் செய்ய முடியாமல் படும் தொடர் துன்ப நிலையும் அவர்களுடைய பிரச்சினை உடனடியாகத் தீர்த்து வைக்கப்பட வேண் டும் என்றும் கோரப்பட்டது.

விதைப்புக் காலம் ஆரம்பித்திருக்கும் இவ்வேளையில், ஏற்கனவே உரங்க ளுக்கு விதிக்கப்பட்ட தடைகளாலும் எரி பொருள் விலையேற்றத்தாலும் விவசா யிகள் பெரும் பாதிப்படைந்துள்ளனர். அவர்களுக்கான உரம் மற்றும் கிருமிநா சினிகள் என்பவை சரியான நேரத்துக்கு வழங்கப்படாத விடத்து எதிர்வரும் போகத்தில் பெரும் சிக்கலை அவர்கள் எதிர்நோக்க வேண்டியிருக்கும். சர்வ தேச தொண்டு நிறுவனங்களிடமாவது உதவிகளைப் பெற்று, இந்தப் பிரச்சி னைக்கு அவசர முடிவு காண வேண்டிய அவசியம் என வலியுறுத்தப்பட்டது.

**படைக்குறைப்பு**

காணி அபகரிப்பை தடுத்து நிறுத்தல், இராணுவ பிரசன்னத்தைக் குறைத்தல் என்பவற்றை பிரஸ்தாபித்த பொழுது காணி கையகப்படுத்தலை உடனடியாக தடுத்து நிறுத்துவதாகவும் இராணுவப் பிரசன்னத்தை பாதுகாப்புச் சபையின் ஊடாக கட்டம்கட்டமாக குறைக்கும் நட வடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி தெரி வித்தார். புலம்பெயர் அமைப்புக்களின் தடைகளை நீக்குவதோடு, புலம்பெயர் முதலீட்டாளர்கள் சம்பந்தமான அரசி யல் அதிகார ரீதியான மற்றும் பாதுகாப் பான கட்டமைப்புக்களை உருவாக்குவ தன் மூலமே அவர்களை நம்பிக்கை கொள்ள வைக்க முடியும் என்று சுட்டிக் காட்டப்பட்டது - என்றுள்ளது. (அ-ஒ-7)

## முள்ளுக்குத்தியதால்...

என்பவரே இவ்வாறு உயிரிழந்துள் ளார்.

கடந்த 31ஆம் திகதி அவருக்கு முள்ளு குத்தியுள்ளது. காலில் கொதி வலியாக இருப்பதாக அனலைதீவு மருத்துவம னையில் அவர் சிகிச்சை பெற்றுள்ளார். அங்கிருந்து ஊர்காவற்றுறை மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டு சிகிச்சையளிக் கப்பட்டுள்ளது. மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்து வமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ஒ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பாண் எனும் பணப்பொருள்

**கோ**துமை மாவின் விலையேற்றத்தை அடுத்து, பாண் ஒன்றின் விலை 300 ரூபாவாக எகிறியிருக்கின்றது. இலங்கை பொருளாதாரப் பேரிடருக்குள் தள்ளப்பட்ட நாள்முதல் பாணின் விலையேற்றம் சர்வ சாதாரணமான ஒன்றாகவே மாறியிருந்தது. எனினும், இந்த விலையேற்றத்தின் உச்சபட்ச வதையாக அமைந்திருக்கின்றது 'பாணின் விலை இனி 300 ரூபா' என்ற அறிவிப்பு.

பாண் ஒன்றும் ஆடம்பர உணவு அல்ல. அது இலங்கையில், பொருளாதாரத்தில் அடித்தட்டில் உள்ள மக்களின் தவிர்க்க முடியாத உணவுப்பொருள். வாழ்தலுக்கான ஓர் ஆதாரம். இப்படியிருக்கையில், நால்வரைக் கொண்ட சராசரிக் குடும்பமொன்று நாளொன்றின் ஒரு வேளைப் பொழுதை ஒரு இறாத்தல் பாணை வைத்துச் சமாளிப்பதாக இருந்தால், அதற்கு மட்டும் இனி மாதாந்தம் 10 ஆயிரம் ரூபாவுக்கும் அதிக தொகையைச் செலவிட வேண்டியிருக்கும். அதேநேரம் இது இத்துடன் முடிந்துவிடப்போகும் கதையுமல்ல.

இலங்கையில் உணவுப் பணவீக்கம் ஒவ்வொரு வாரமும் அதிகரித்து வருகின்றமை யாவரும் அறிந்த விடயம்தான். தற்போது உணவுப் பணவீக்கம் சுமார் 95 வீதமாகப் பதிவாகியுள்ளது. இதனால், 63 லட்சம் மக்கள் தாம் உட்கொள்ளும் உணவின் அளவைக் குறைத்து போசணைக் குறைபாட்டுக்கு ஆளாகியுள்ளனர். சில குடும்பங்கள் மூவேளை உணவுக்குப் பதிலாக இருவேளை உணவையே உள்ளெடுக்கின்றன. இலங்கையில் உள்ள குழந்தைகள் தொடர்பில் சர்வதேசம் அபாய ஒலி எழுப்பியிருக்கின்றது. இவ்வாறாக ஒட்டுமொத்தமாக இந்த முழுத் தீவும் உணவுப் பற்றாக்குறைக்கும் ஊட்டச்சத்துக் குறைபாட்டுக்கும் முகம் கொடுத்திருக்கும் பின்னணியில், பாணின் விலை அதிகரித்துள்ளமையானது – அதி அபாயமான பல செய்திகளையே பறைசாற்றுகின்றது.

'தக்கன பிழைக்கும்' என்ற டார்வினின் கோட்பாடுதான் இனி இலங்கையின் எதிர்காலமா? என்ற கேள்வி இங்கு எழுவது தவிர்க்க முடியாததாகின்றது. 300 ரூபாவுக்குப் பாணைக் கொள்வனவு செய்ய முடியாத குடும்பங்கள் இனி போசணைக் குறைபாட்டை எதிர்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்படும். அடுத்ததாக இன்னொரு விலையேற்றம் நடைமுறையாகும். அது, இன்னொரு பொருண்மிய மட்டத்தைச் சேர்ந்தோரை இரையாக்கும். பின்னர் ஒன்றன் பின்னர் இன்னொரு விலையேற்றமாக, இது தொடர்கதையாகும். ஒரு மரத்தை ஆக்கிரமித்து கொஞ்சம்கொஞ்சமாக அதை வழித்துத்துடைக்கும் கறையான்கள்போல இந்த விலையேற்றங்களும் கொஞ்சம் கொஞ்சமாக இந்தத் தீவில் உள்ள வெவ்வேறு பொருண்மிய மட்டத்தைச் சேர்ந்தோரையும் அழித்தொழிக்கத்தான் போகின்றது.

தற்போது சர்வதேச சந்தையில் எரிபொருள்களின் விலை குறைவடைந்த போதிலும், இலங்கையில் எரிபொருள்களின் விலை மறுமதிப்பாய்வுக்கு உட்படவில்லை. 'எழுதியது எழுதியதே' என்பதைப்போன்று ஏறிய விலைகள் ஏறியதுதான். கோதுமைக்கு விலை அதிகரித்ததால் பாணின் விலைகள் அதிகரிக்கின்றன என்றால், சர்வதேச சந்தையில் ஏற்பட்ட விலை மாற்றத்துக்கு ஏற்ப எரிபொருள்களை வெதுப்பகங்களுக்கு வழங்கினாலேனும் இந்த விலையுயர்வை ஓரளவேனும் சமாளிக்க முடியும். கோதுமைக்கான விலையேற்றத்தை எரிபொருளின் விலைகளைக் குறைத்து ஈடுசெய்வதற்கான சூழ்நிலை தற்போது இருக்கவே செய்கின்றது. ஆனால், இந்தச் சிந்தனையை – செயற்பாட்டை – அரசாங்கம் நிச்சயம் வெளிப்படுத்தப்போவதில்லை. அதற்குத் தெரிந்ததெல்லாம், மக்களை வதைப்பதும் சுமையேற்றுவதும்தான்.

ஒன்றுமட்டும் உண்மை. ரொட்டித் துண்டுக்காகவும், பாணுக்காகவும் வெடித்த போராட்டங்கள் அதன் உச்ச இலக்கை அடையாமல் ஓய்ந்ததில்லை. ஏனெனில் அந்தப் போராட்டங்கள் 'வாழ்தலுக்கான போராட்டத்தின்' வெளிப்பாடு. கோத்தாபய அரசாங்கத்துக்கு எதிரான கொதிநிலையின் ஆரம்பப்புள்ளிகூட பாணின் விலையேற்றம்தான் என்பதை ரணில் புரிந்து கொள்வாரா?

நாளொரு நல்வார்த்தை

"நல்லொழுக்கம் என்பது உனக்கு நீயே அளித்துக் கொள்ளும் நன்மதிப்பாகும்"

- பெர்னாட்ஷா




# தமிழ் மக்களை நசுக்கிவிட்டு சிங்களவர்களைக் காக்கும் சஜித்!

## கஜேந்திரகுமார் எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, செப். 4

**அரசாங்கம் தமிழர்களை நசுக்கினால் பரவாயில்லை. சிங்களவர்களை நசுக்கக்கூடாது என்பதா எதிர்க்கட்சித் தலைவரான சஜித்தின் நிலைப்பாடு என்று கேள்வி எழுப்பியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டை ஆட்சி செய்த அரசுகளால் தமிழ் மக்கள் மீது அடக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டமை, தமிழ் மக்கள் நசுக்கப்பட்டமை தொடர்பில் விவாதிக்கப்படும் ஜெனிவாக் கூட்டத் தொடரில் அரசுக்கும் நாட்டுக்கும் சார்பாகவே நிற்போம் என அறிவித்துள்ள எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ, சிங்களவர்கள் மீதான அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக சர்வதேசத்தை நாடப்போவதாகக் கூறியுள்ளமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. தமிழர்கள் நசுக்கப்படலாம், சிங்களவர்கள் நசுக்கப்படக்கூடாது என்ற சிந்தனையின் வெளிப்பாடே இதுவாகும்.

பொருளாதார மீட்சிக்காகப் பல்வேறு வழிமுறைகளை தேடிக்கொண்டிருக்கும் பின்னணியிலும்கூட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தின் ஆக்கிரமிப்பு தேவைக்கு அதிகமாக உள்ளது. நாட்டில் யுத்த சூழல் இல்லாத நிலையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 14 பேருக்கு ஒரு இராணுவம் என்ற வகையில் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது.

போரின்போதும், போரின் பின்னரான காலத்தின்போதும் இராணுவத்தினர் மோசமான குற்றங்களில் ஈடுபட்டார்கள் என வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் கடுமையாகக் குற்றஞ்சாட்டும்போது அவர்கள் மத்தியில் தொடர்ந்து இராணுவத்தினரைக் குவிப்பது எந்தளவுக்கு நியாயமானது?

மக்கள் முழுமையாக அரச கட்டமைப்பை வெறுக்கின்றார்கள். தேர்தலை நடத்துமாறு ஜனநாயக ரீதியில் போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள். ஆனால், தேர்தலுக்குச் செல்ல தயாரில்லாத அரசு, இராணுவத்தைக் கொண்டு ஜனநாயகத்துக்கு முரணாகச் செயற்பட முயற்சிக்கின்றது.

இம்முறை ஜெனிவாக் கூட்டத் தொடரில் இலங்கை பெரும் நெருக்கடியை எதிர்கொள்ளும். இருப்பினும் அரசையும், நாட்டையும் பாதுகாக்கும் வகையில் செயற்படப்போவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் குறிப்பிட்டதை அறிந்து ஆச்சரியமடைந்தேன். மறுபுறம் அவர் அரசு அடக்குமுறையை நிறுத்தாவிடின் சர்வதேசத்தை நாடுவதாகவும் குறிப்பிட்டிருந்தார். எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவிப்பார் என்று எதிர்பார்க்கவில்லை.

தமிழ் மக்கள் மீது அடக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டபோது, தமிழ் மக்கள் நசுக்கப்பட்டபோது எமது உறவுகளுக்காக நாங்கள் சர்வதேசத்தை நாடினோம். அப்போது எவரும் அரசின் அடக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுக்கவில்லை. ஆனால், சிங்களவர்களுக்கு எதிராக தற்போதைய அரசின் அடக்குமுறைகளுக்கு மாத்திரம் சகலரும் எதிர்ப்புத் தெரிவித்து, சர்வதேசத்தை நாடுவதாகத் தெரிவிக்கின்றார்கள் - என்றார்.

(ம-22)

நாளை 05.09.2022 திங்கட்கிழமை ஆவணி 20
சுபநேரம் : 12.05 - 01.35
ராகுகாலம்: 07.35 - 09.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைநலன் பாராட்டு விழா



யாழ்ப்பாணம், செப். 4
அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய நடராசா சபாரத்தினசிங்கியின் சேவைநலன் பாராட்டு விழாவும் மணிவிழாவும் அண்மையில் வித்தியாலய முருகேசு சதாசிவம் மண்டபத்தில் இடம்பெற்றது.
நிகழ்வில் விழாநாயகன் நடராசா சபாரத்தினசிங்கியும் அவரது மனைவியும் மாலை அணிவிக்கப்பட்டு பொன்னாடை போர்த்தி வாழ்த்துமடல் வழங்கி விருந்தினர்களாலும் வித்தியாலய நிர்வாகத்தாலும் கௌரவிக்கப்பட்டனர். (ம-14)

# மன். மருத்துவமனைக்கு வளிச்சீராக்கி கையளிப்பு




மன்னார் பொது மருத்துவமனைக்கு மன்னார் றோட்டறிக் கழகத்தினூடாக சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான வளிச்சீராக்கி இயந்திரம் அண்மையில் கையளிக்கப்பட்டுள்ளது.
மன்னார் மாவட்ட பொது மருத்துவனையின் கதிரியக்கப்பிரிவில் கதிரியக்க மற்றும் ஆய்வுக்கான கருவிகள் காணப்பட்ட போதிலும் அவ்வறைக்கு வளிச்சீராக்கி வசதி இல்லாத காரணத்தால் மக்களுக்கு தொடர்ச்சியாக சேவைகள் வழங்க முடியாத நிலை காணப்பட்டது. இதனால், அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் முன்னுரிமையளிக்கப்பட்டது.
இந்நிலையில் மக்களுக்கான சேவையை தொடர்ச்சியாக முன்னெடுக்கும் விதமாக அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த விக்னேஸ்வரன் கந்தையா என்பவரின் நிதிப்பங்களிப்பில் மன்னார் றோட்டறிக் கழகத்தால் மேற்படி வளிச்சீராக்கி கையளிக்கப்பட்டுள்ளது. (ச-60)



# மாணவர்களின் சத்துணவுக்கு பொருள்கள் வழங்கல்

ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் 53 மாணவர்களுக்கு ஒரு மாதத்துக்கான சத்துணவு வழங்குவதற்கு உலர் உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன.
பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் பூமணி அம்மா அறக்கட்டளையின் ஸ்தாபக தலைவர் விசுவாசம் செல்வராசாவின் நெறிப்படுத்தலில், பூமணி அம்மா அறக்கட்டளையின் இலங்கை நிர்வாகிகளால் பாடசாலை நிர்வாகத்திடம் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.
நிகழ்வில் ஊர்காவற்றுறை பிரதேசசபை உறுப்பினர் மடுத்தீன் பெனடிற், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ம-14-20)



ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்ட இரட்ணம் பவுண்டேசன் மற்றும் இராமலிங்கம் பவுண்டேசன் என்பனவற்றின் நிதிப்பங்களிப்பில் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறையில் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் கடந்த புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டன. (ய-ச-27)




# மயிலிட்டி - பருத்தித்துறை வீதி முழுநேரமும் மக்கள் பாவனைக்கு

யாழ்ப்பாணம், செப். 4
மயிலிட்டி - பருத்தித்துறை வீதி 24 மணி நேரமும் மக்கள் பாவனைக்காகத் திறந்து விடப்பட்டுள்ளது.
கடந்த 30 வருடங்களுக்கு மேலாக குறித்த வீதி பாதுகாப்புக் காரணங்களுக்காக இரவு 10 மணிக்கு மூடப்பட்டு அதிகாலை 4 மணிக்கு திறக்கப்பட்டு வந்தது.
இந்த நிலையில் பாதுகாப்பு கட்டளைத் தளபதி மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகளுடன் ஆளுநர் அண்மையில் நடத்திய கலந்துரையாடலில் இணக்கம் காணப்பட்டதையடுத்து குறித்த வீதியை 24 மணிநேரமும் திறந்துவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-27)

# நுணாவில் பகுதியில் பேருந்து மீது கல்வீச்சு

சாவகச்சேரி, செப். 4
யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணிகளுடன் சென்ற சொகுசு பஸ் மீது நுணாவில் பகுதியில் கல்வீச்சுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.
இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. இதன்போது பேருந்தின் கண்ணாடி சேதமடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் நுணாவில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-9)

# பயனாளிகளுக்கு தென்னங்கன்றுகள்



யாழ்ப்பாணம், செப். 4
சர்வதேச தேங்காய் தினத்தை முன்னிட்டு, வலி.மேற்கு பிரதேசசபையில் 100 பயனாளிகளுக்கு 200 தென்னங்கன்றுகள் கடந்த வியாழக்கிழமை வழங்கப்பட்டன.
வலி.மேற்கு பிரதேசசபையின் ஏற்பாட்டில் 'கனடா ஓராயிரம்' அமைப்பின் நிதி அனுசரணையுடன் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன.
இதன்போது தென்னைகளை எவ்வாறு நடுகைசெய்ய வேண்டும் என்ற பயிற்சியும் எவ்வாறு பராமரிக்க வேண்டும் என்ற விளக்கங்கள் உள்ளடங்கிய கையேடும் நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் வழங்கப்பட்டது.
அத்தியாவசிய வளமான தென்னைவளம் அழிவடையக்கூடாது என்னும் நோக்கில் ஆண்டுதோறும் செப்ரெம்பர் 2ஆம் திகதி சர்வதேச தேங்காய் தினம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-14-27)



கொடிகாமம் டேவிட் பீரிஸ் நிறுவனத்தால் இலவசமாக நடத்தப்பட்ட பெண்களை வலுவூட்டல் தொழில்நுட்ப பயிற்சிநெறியின், இறுதி வழிகாட்டல் பரீட்சை டேவிட் பீரிஸ் நிறுவனத்தின் தொழில் பயிற்சி நிலையத்தின் ஆசிரியர் ஜெகநேசன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. (ய-159)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இராஜாங்க அமைச்சர்கள் 20 பேரை நியமிக்க முடிவு?

## பெரமுனவின் அழுத்தத்தை அடுத்து ஜனாதிபதி ரணில் நடவடிக்கை

கொழும்பு, செப். 4

**நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளின் இணக்கப்பாட்டுடன் சர்வகட்சி அரசாங்கத்தை உருவாக்குவதில் இழுபறி ஏற்பட்டுள்ள நிலையில் பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்களை உள்ளடக்கிய வகையில் 20 இராஜாங்க அமைச்சுக்களை நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார் என்று ஆளும்தரப்பின் உறுப்பினர் ஒருவரை மேற்கோள்காட்டித் தகவல்கள் வெளியாகியுள்ளன.**

20 இராஜாங்க அமைச்சுக்களுக்கான நியமனம் இன்று அல்லது எதிர்வரும் வாரமளவில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது சாத்தியமற்றதாயின் பொதுஜன பெரமுன தலைமையில் நிலையான அமைச்சரவையை எதிர்வரும் வாரத்துக்குள் நியமிக்க வேண்டும் என்று பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளனர். அதையடுத்தே இராஜாங்க அமைச்சர்களை நியமிப்பது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது என்று தெரியவருகின்றது.

அதேவேளை, சர்வகட்சி அரசாங்கம் ஒன்று அமைக்கப்படுமாயின் அதன் அமைச்சரவையில் முக்கியமான அமைச்சுக்கள் சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்கு வழங்கப்படவேண்டும் என்றும், நாடாளுமன்றில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவே பெரும்பான்மையைக் கொண்டுள்ளது என அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் ஊடக சந்திப்புகளில் கருத்து வெளியிட்டுள்ளார். பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களுக்கு முக்கியமான அமைச்சுப் பதவிகளை வழங்குவது தொடர்பில் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச ஜனா திபதியிடம் முன்வைத்த கோரிக்கைக்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவிக்கவில்லை எனக் கூறப்படுகின்றது.

மறுபுறத்தில், அரசாங்கத்தின் தற்போதைய செயற்பாடுகளை கருத்திற்கொண்டு சர்வகட்சி அரசாங்கத்தில் இணையப் போவதில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றில் தெரிவித்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், பொதுஜன பெரமுனவுக்கும் மக்களாணை கிடையாது. பொருளாதார நெருகடிக்கு தீர்வு காண வேண்டுமாயின் மக்களாதரவு அவசியம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

மக்களாணையைப் பெற உடன் தேர்தலை நடத்த வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவும் வலியுறுத்தியுள்ளார். மக்களால் வெறுக்கப்படும் தரப்பினருடன் சர்வகட்சி அரசாங்கத்தில் ஒன்றிணைய முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## நாடு திரும்பிய கோத்தாவுக்கு கொழும்பில் அரசாங்க வீடு!

### சிறப்பு பாதுகாப்புப் படையணியும் உருவாக்கம்

கொழும்பு, செப். 4

மக்களின் எதிர்ப்பை அடுத்து நாட்டை விட்டு வெளியேறிச் சென்ற முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நேற்றுமுன்தினம் இரவு நாடு திரும்பியுள்ள நிலையில், அவருக்கு கொழும்பு - 7, பௌத்தாலோக மாவத்தைக்கு முகப்பாக மலலசேகர மாவத்தையில் அமைந்துள்ள அரச வீடு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ச வசிக்கும் வீட்டுக்கு அருகே இந்த வீடு அமைந்துள்ளது. இந்த வீடானது முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ அமைச்சராக இருந்தபோது பயன்படுத்திய வீடாகும்.

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, நாடு திரும்பி தனது மீரிஹானை இல்லத்தில் தங்க விரும்பியபோதும், அவரது பாதுகாப்பை கருத்திற் கொண்டு, முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்கு வழங்க வேண்டிய வரப்பிரசாதம் என்ற அடிப்படையில் இந்த வீட்டை வழங்க அரசாங்கம் முடிவெடுத்துள்ளது.

கோத்தாபய ராஜபக்சவின் பாதுகாப்புக்கு என சிறப்பு பொலிஸ் படையணியொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின் கீழ், அதிரடிப் படையினரையும் உள்ளடக்கியதாக இந்தச் சிறப்புப் படையணி அமைக்கப்பட்டுப் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

கோத்தாபய ராஜபக்ச நாடு திரும்பி, அவர் மலலசேகர மாவத்தையில் உள்ள வீட்டுக்கு வரும் வரை சிறப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள் கம்பஹா மற்றும் கொழும்பு மாவட்ட பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களைக் கொண்டு, நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணி முதல் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

கடந்த 23ஆம் திகதி, முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பாதுகாப்பாக நாடு திரும்பத் தேவையான நடவடிக்கைகளை அவருக்குச் செய்து கொடுக்கவேண்டும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பரிந்துரைத்தமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)



மக்கள் எதிர்ப்பை அடுத்து நாட்டில் இருந்து தப்பிச் சென்ற முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச 50 நாள்களின் பின்னர் நேற்று முன்தினம் இரவு நாடு திரும்பினார். தாய்லாந்தில் இருந்து விமானம் மூலம் நாடு திரும்பிய அவரை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று விமான நிலையம் சென்று வரவேற்றுள்ளது. (எ)

## குற்றச்செயல்கள் புரிந்த 80 பேர் வெளிநாடுகளில்

கொழும்பு, செப். 4

போராட்டம் இடம்பெற்ற காலப்பகுதியில் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய பிரபல வர்த்தகர்கள் உள்ளிட்ட 80 பேர் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

தங்களுக்கு அச்சுறுத்தல் காணப்படுவதாகப் போலியான தகவல்களை தூதரகங்களில் கூறி பல்வேறு வழிகளில் இவ்வாறு வெளிநாட்டுக்குச் சென்றுள்ளனர். ஜனாதிபதி மாளிகைக்குள் அத்துமீறி பிரவேசித்து புகைப்படம் எடுத்து அதை சமூக ஊடகங்களில் பிரசுரித்த பிரபல வர்த்தகர் ஆபிரிக்காவுக்கு தப்பிச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றவர்கள் தொடர்பில் பாதுகாப்புத் தரப்பினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த நபர்களை கைது செய்வதற்கு இன்டர்போல் போன்றவற்றின் உதவிகளும் பெற்றுக்கொள்ளப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை இந்தப் போராட்டத்துடன் தொடர்புடைய சுமார் 200 பேர் வெளிநாடுகளுக்குச் செல்ல தூதரகங்களிடம் விண்ணப்பம் செய்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-14.இ)

## கோத்தாபய எம்.பியாவதற்கு சீதா பதவிவிலகத் தயாராம்

கொழும்பு, செப். 4

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நாடாளுமன்றத்துக்கு வர விரும்பினால், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகத் தயார் என பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சீதா அரம்பேபொல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:-

சிறிலங்கா பொதுஜன பெரமுனவோ அல்லது வேறு எவருமோ இவ்வாறான கோரிக்கையை முன்வைக்கவில்லை. முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நாடாளுமன்றத்துக்கு வருவார் என்ற நம்பிக்கை இல்லை. அவர் நாடாளுமன்றத்துக்கு வரவுள்ளார் என்ற செய்தி சமூக ஊடகங்களால் வெளியிடப்பட்ட பொய்யாக இருக்கவேண்டும் - என்றார். (எ-இ)

## ஐ.எம்.எப். உடன்பாடு

# ஐரோப்பிய ஒன்றியம், ஆஸி. வரவேற்பு

கொழும்பு, செப்.4

சர்வதேச நாணய நிதியத்துக்கும் (ஐ.எம்.எப்.) இலங்கைக்கும் இடையிலான ஊழியர் மட்ட ஒப்பந்தத்தை இலங்கையில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழு மற்றும் அவுஸ்திரேலியா என்பன வரவேற்றுள்ளன.

'பொது நிதி மேலாண்மை மறும் ஏற்றுமதி தொழில்கள் உட்பட பசுமைப் பொருளாதாரம் ஆகியவற்றில் தொடர்ந்து ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம்' என்று இலங்கையில் உள்ள ஐரோப்பிய ஒன்றியம் நேற்று வெளியிட்டுள்ள ருவிற்றர் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - இலங்கையிலுள்ள அவுஸ்திரேலிய தூதரகம் தனது ருவிற்றர் பதிவில், சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளமையை வரவேற்றுள்ளதுடன், முடிந்த வரை அனைத்து வழிகளிலும் இலங்கைக்கு ஆதரவை வழங்கத் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளது. (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வடக்கு மாகாண

# உள்ளூராட்சிச் சபைகளின் செயலாளர்கள் இடமாற்றம்

**யாழ்ப்பாணம், செப். 4**
**வடமாகாண உள்ளூராட்சிச் சபைகளில் கடமையாற்றும் செயலாளர்கள் பலர் விரைவில் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர் என்று தெரியவருகின்றது.**

குறித்த செயலாளர்களுக்கு இந்த வருடத்தின் முற்பகுதியில் வழங்கப்பட்ட இடமாற்றம் இடைநிறுத்தி வைக்கப்படிருந்தது. எனினும், தற்போது புதிதாகக் கடமைகளைப் பொறுப்பேற்ற மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் இடமாற்றலை நடைமுறைப்படுத்த உத்தரவிட்டுள்ளார். இதனால் செப்ரெம்பர் முதல் வாரத்தில் (நாளை) உள்ளூராட்சி மன்றச் செயலாளர்களுக்கு வழங்கப்பட்ட இடமாற்றல் நடைமுறைக்கு வரும் எனவும் தெரியவருகின்றது.

இதுதொடர்பில், உள்ளூராட்சி ஆணையாளர் செல்லத்துரை பிரணவநாதனிடம் தொடர்புகொண்டு கேட்டபொழுது, "வழமையான வருடாந்த இடமாற்றலாகவே இது இடம்பெறுகின்றது. வடமாகாண பிரதி பிரதம செயலாளர் மூலம் வழங்கப்படுகின்ற கடிதத்தையே நாம் நடைமுறைப்படுத்துகின்றோம்" எனத் தெரிவித்தார்.

இதனையடுத்து இது குறித்து வடமாகாணப் பிரதி பிரதம செயலாளர் (நிர்வாகம்) பொன்னுத்துரை குகநாதனை தொடர்புகொண்டு கேட்டபொழுது அவர் தெரிவித்ததாவது:
வடமாகாணத்தில் 103 நிர்வாக உத்தியோகத்தர்களுக்கான பதவி நிலை காணப்படுகின்றது. இருப்பினும் 81 பதவி நிலைகளுக்கே நிர்வாக உத்தியோகத்தர்கள் காணப்பட்டார்கள். இந்த நிலையிலேயே ஏனைய 22 பதவிநிலை வெற்றிடங்களை கருத்திற்கொண்டு இவ்வருட ஆரம்பத்தில் முன்னெடுக்கப்பட்ட இடமாற்றம் இடைநிறுத்தப்பட்டிருந்தது. இந்நிலையில் 22 பதில் நிர்வாக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு 103 நிர்வாக உத்தியோகத்தர்கள் பதவிவெற்றிடங்களும் பூர்த்தியாக்கப்பட்டு, தற்பொழுது கிடைக்கப்பெற்ற விணப்பங்களுக்கு அமைவாகவும் வருடாந்த அடிப்படையில் சேவையை பூர்த்தி செய்தவர்களுக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது - என்றார். (ம-125)



## சாரதி அனுமதிப்பத்திரத்துக்கும் கியூ.ஆர். குறியீட்டிலான அட்டை

கொழும்பு, செப். 4
சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கு 'கியூ.ஆர்' குறியீடு கொண்ட புதிய அட்டையை அறிமுகப்படுத்த மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.
இது தொடர்பான திட்டம் சட்டவரைவு திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது என்று மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாட்டில் ஏறக்குறைய 57 லட்சம் பேர் சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுள்ளனர். அவர்களின் அடையாளம், வாகன வகைகள் மற்றும் செல்லுபடியாகும் காலம் போன்றன இலத்திரனியல் தரவுக் காப்பகம் ஒன்றில் பதிவு செய்யப்படுகின்றன.
இந்த அட்டைகள் ஒஸ்ரியாவில் இருந்து யூரோக்களில் பணம் செலுத்தி இறக்குமதி செய்யப்பட்டன. ஆனால் தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியால் திறைசேரியில் யூரோ இல்லாததால் அட்டைகளின் இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளது.
இதன் காரணமாக 10 லட்சத்துக்கும் மேற்பட்ட சாரதி அனுமதிப்பத்திரங்கள் அச்சிடப்படாமல் உள்ளன. வெளிநாடுகளுக்கு செல்பவர்களுக்கு மட்டும் அச்சடித்து அவர்களுக்கு தற்காலிக அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இந்த அச்சிடப்பட்ட அட்டைகளை இறக்குமதி செய்ய அதிக செலவாகும் என்பதால், அதில் பாதிக்கும் குறைவான விலையில் சைபர் ஸ்டிக்கர் ஒட்டப்பட்ட அட்டைகளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது- என்றார். (ம-14,இ)

## கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

சாவகச்சேரி, செப்.4
தென்மராட்சி கல்வி வலய தகவல், தொழில்நுட்பம் மற்றும், தொலைக்கல்வி மத்திய நிலையத்தால் இரு கற்கைநெறிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கான விண்ணப்பங்கள் க.பொ.த. வகுப்புகளில் கற்றவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.
கணினி பிரயோகத்தில் தேசிய சான்றிதழ் (National Certificates in Computer Application ), இணைய வலையமைப்புடனான நிகழ்ச்சித் திட்ட சான்றிதழ் (Certificate in Programming with Web Development) ஆகிய கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
கற்கைநெறிகளில் பங்குபற்ற விரும்புவோர் தென்மராட்சி கல்வி வலய அலுவலகத்தின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைக்கல்வி மத்திய நிலையத்தில் அலுவலக நாள்களில் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
நிலையத்தில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள கற்கைநெறி முடிவடையும் நிலையில் உள்ளதால் கற்கைநெறிகளுக்கு புதிய மாணவர்கள் இணைக்கப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## அத்தியாவசிய சேவைகள் மீண்டும் வர்த்தமானி



கொழும்பு, செப். 4
மின்சாரம், கனிய எண்ணெய் உற்பத்தி, எரிபொருள் விநியோகம் மற்றும் சுகாதார சேவை என்பனவற்றைத் தொடர்ந்தும் அத்தியாவசிய சேவைகளாக அறிவித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

## சுற்றுலாவிகளின் வருகை இயல்புக்குத் திரும்பலாம்

*சுற்றுலா அதிகாரசபை தெரிவிப்பு*

கொழும்பு, செப். 4
சுற்றுலாப் பயணிகளின் வருகை ஜூன் முதல் ஜூலை வரை அதிகரித்துள்ளதாகவும், சுற்றுலாத்துறை மெல்ல மெல்ல இயல்புக்குத் திரும்பலாம் என்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.
இதுதொடர்பில் இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மேலும் தெரிவித்ததாவது:
இந்த வருடத்தில் ஜூலையில் சுமார் 47 ஆயிரம் சுற்றுலாவிகள் நாட்டுக்கு வந்துள்ளனர். சுற்றுலாப் பயணிகளின் வருகை இயல்புக்குத் திரும்புகின்ற போதிலும், மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் 55.5 வீதம் வீழ்ச்சியையே தரவுகள் காட்டுகின்றன.
இந்த வருடத்தில் 4 லட்சத்து 58 ஆயிரத்து 670 சர்வதேச சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர். ஐக்கிய இராச்சியம், டென்மார்க், நோர்வே மற்றும் சுவீடன் உட்பட பல நாடுகள் இலங்கைக்கு விதிக்கப்பட்ட பயண ஆலோசனைகளை அண்மையில் தளர்த்தியுள்ளன. இதனால் சுற்றுலாவிகளின் வருகை இனிவரும் காலங்களில் அதிகரிக்கும் - என்றுள்ளது. (ம)

## பொலிஸ் வீரர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.4
சிறிலங்காவின் 156 ஆவது பொலிஸ் வீரர் தினம் நாடுமுழுதும் உள்ள பொலிஸ் நிலையங்களில் நேற்று நடைபெற்றது. வடக்கு மாகாணத்திலும் பொலிஸ் நிலையங்களில் இந்த நிகழ்வு நடைபெற்றது.
அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற பொலிஸாரைக் கௌரவிக்கும் நிகழ்வில் காங்கேசன்துறைப் பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பண்டார கலந்துகொண்டார். கடமையைச் சரியாக முன்னெடுத்துக் குற்றங்களைத் தடுத்த பொலிஸாருக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

**வவுனியா**
வவுனியாவில் வன்னிப் பிராந்திய பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் உள்ள பொலிஸ் நினைவுத்தூபி முன்பாக இந்த நிகழ்வு நடைபெற்றது. வவுனியா தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி ஜே.ஏ.ஏ.எஸ்.ஜெயக்கொடி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுபத் கல கமகே, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.பி எதிரிசிங்க, பொலிஸ் அதிகாரிகள், பொலிஸார், உயிரிழந்த பொலிஸாரின் குடும்ப உறுப்பினர்கள், ஓய்வுபெற்ற பொலிஸார், மாவட்ட பொது அமைப்புக்களின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-26,27,110)



## பணுவில்—8 மலருக்கு ஆக்கங்கள் கோரல்!

யாழ்ப்பாணம், செப். 4
வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகமும் பிரதேச கலாசார பேரவையும் இணைந்து கடந்த 2015ஆம் ஆண்டு தொடக்கம் 'பணுவில்' என்ற பிரதேச இதழை வெளியிட்டு வருகின்றது.
அதற்கமைய இந்த வருடத்துக்கான 'பணுவில் -8' பிரதேச மலருக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.
பல்சுவை ஆண்டிதழாக வெளிவரும் இந்த மலருக்காக பிரதேசம்சார் தொல்லியல், வரலாறு, ஆன்மிகம், சமூகவியல், மானிடவியல், கலை மரபுகள், வாழ்வியல், மரபுரிமைகள் வழக்காறுகள், மற்றும் பொதுவிடயங்கள் சார் ஆவணப்படுத்தல்கள் சார்ந்த ஆக்கங்கள் ஆய்வுக்கட்டுரைகளாகவும் கட்டுரைகளாகவும் பத்தி எழுத்துக்களாகவும் புனைகதைகளாகவும் கவிதைகளாகவும் கோரப்படுகின்றன.
ஆக்கங்கள் யாவும் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர், 'தலைவர், பிரதேச கலாசாரப் பேரவை, வலிகாமம் மேற்கு, சங்கானை' என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அன்றி தபால் மூலமோ அனுப்பி வைக்கமுடியும். (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணெண்ணெய் விநியோகத்தால் மீன்களின் விலைகளில் திடீர் சரிவு

## மானியம் வேண்டும் என்று மீனவர்கள் வலியுறுத்து

யாழ்ப்பாணம், செப். 4

**யாழ்ப்பாணத்தில் மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் சுழற்சி முறையில் பகிர்ந்தளிக்கப்பட்டதையடுத்து முன்னெடுக்கப்பட்ட மீன்பிடி நடவடிக்கையால் மீன்களின் வரத்து அதிகரித்துள்ளது. அதனால், அவற்றின் விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.**



மண்ணெண்ணெய் வரத்து இல்லாத காலப்பகுதியில் மீன்பிடி நடவடிக்கைகள் மிகவும் அரிதாக இடம்பெற்றமையால், மீன்களின் விலைகள் உச்சம் தொட்டிருந்தன. உதாரணமாக ஒரு கிலோ சூடை மீன் 400 ரூபாவுக்கு மீனவர்களிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டு கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. தற்போது சுழற்சி முறையில் மீனவ சங்கங்களுக்கு மண்ணெண்ணெய் பகிர்ந்தளிக்கப்பட்டதை அடுத்து, மீன்பிடி நடவடிக்கைகள் சற்று அதிகமாக இடம்பெறுவதால் மீன்களின் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் மீன்களின் விலைகள் குறைவடைந்துள்ளன.

முன்னர் 400 ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட சூடை மீன் தற்போது 250 ரூபாவுக்கே கொள்வனவு செய்யப்படுகின்றது. அத்துடன், இதர மீன்களின் கொள்விலைகளிலும் சுமார் 40 வீதமான சரிவு ஏற்பட்டுள்ளது என்று மீனவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மீன்களின் விலைகளில் கணிசமான அளவுக்குச் சரிவு ஏற்படும் வகையில் மண்ணெண்ணெயின் விலை இல்லை. மண்ணெண்ணெயை மானிய விலையில் தந்தால் மட்டுமே இந்தக் கொள்வனவு விலை தமது வாழ்வாதாரத்துக்குப் போதுமாக இருக்கும் என்று மீனவர்கள் சுட்டிக்காட்டுகின்ற அதே நேரம், மண்ணெண்ணெய்க்கான மானிய விலை தொடர்பில் அதிகாரிகள் விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர். (ம-17)

# வியட்நாம் - இந்தியா கூட்டுப் பயிற்சி முடிவு

புதுடில்லி, செப். 4

'வின்பொக்ஸ்' எனப்படும் வியட்நாம் - இந்தியா இருதரப்பு இராணுவப் பயிற்சி சண்டிமந்திரில் நிறைவுக்கு வந்துள்ளது.

இதன்போது, பேரிடர் நிவாரணத்தில் பல்முகவராக மனிதாபிமான உதவி, 'மேக் இன் இந்தியா' மற்றும் 'ஆத்மநிர்பார் பாரத்' ஆகிய முன் முயற்சிகளைக் காண்பிக்கும் உபகரணக் காட்சியும் இடம்பெற்றிருந்தது.

இந்தப் பயிற்சியின்போது, ஐ.நா. அமைதி காக்கும் நடவடிக்கைகளில் இராணுவப் பொறியியலாளர் மற்றும் மருத்துவக் குழுக்களை ஈடுபடுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டது என பாதுகாப்பு அமைச்சக செய்திக் குறிப்பு தெரிவித்துள்ளது.

வியட்நாம்இராணுவம் களப் பயிற்சியை மேற்கொள்வது இதுவே முதல் முறையாகும்.

எந்தவொரு வெளிநாட்டு இராணுவத்துடனும் கூட்டுப் பயிற்சி செய்யாத வியட்நாம் தனது கூட்டுப்பயிற்சிக்காக இந்திய இராணுவத்தை முதற்றடவையாகத் தெரிவு செய்திருந்தது.

மூன்று வார காலப்பகுதியில், இருபடைகளின் வீரர்களும் புரிந்துணர்வுடன் பல விடயங்களைக் கற்றுக் கொண்டதோடு, சிறந்த நடைமுறைகளையும் பகிர்ந்துகொண்டனர்.

இரு நாடுகளைச் சேர்ந்த குழுக்களும், முதலில் கோட்பாட்டு வகுப்புகளைத் தொடர்ந்து நடைமுறைப் பயிற்சிகளை மேற்கொண்டன.

இந்தப் பயிற்சியின் நிறைவு விழாவில் இந்தியாவுக்கான வியட்நாமின் தூதுவர் பாம் சான் சாவ் மற்றும் வி.பி.ஏவின் உயர்மட்ட பார்வையாளர் குழுவும் கலந்துகொண்டனர்.

இந்தியத் தரப்பில், லெப்டினன்ட் ஜெனரல் நவ் குமார் கந்தூரி, தலைமை தாங்கினார்.

விழாவில் பேசிய உயரதிகாரிகள் வியட்நாமுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நெருங்கிய உறவு மற்றும் நலன்களின் ஒருங்கிணைப்பை வலியுறுத்தினர்.

இந்நிலையில் இக்கூட்டுப் பயிற்சியின் அடுத்த அங்கம் 2023 இல் வியட்நாமில் நடத்தப்படவுள்ளது.

இந்தியாவின் கிழக்கு கொள்கை மற்றும் இந்தோ பசுபிக் மூலோபாயம் ஆகியவற்றில் வியட்நாம் முக்கியமான பங்காளியாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)

# நாடகமும் அரங்கியலும் இருநாள் பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், செப்.4

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இருநாள் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 10 ஆம், 11 ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) காலை 8.30 மணி தொடக்கம் பி.ப.2 மணி வரை பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள 'மறைநதி' ஊடக மைய மண்டபத்தில் (மறைக்கல்வி நடுநிலைய வளாகம்) நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்பாக தமது பெயர், விவரங்களை யாழ். திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# தென்மராட்சியில் படையெடுக்கும் விஷ ஜந்துக்கள்

சாவகச்சேரி, செப்.4

தென்மராட்சியில் பாம்பு உள்ளிட்ட விஷ ஜந்துகள் மற்றும் கருங்குளவிகளால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அண்மைய நாள்களாக அதிகரித்துள்ளது.

கடந்த புதன்கிழமை பெய்த கடும் மழையால் விஷ ஜந்துகள் குடியிருப்புகளுக்குள் புக ஆரம்பித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. அதனால் விஷ ஜந்துகளால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

அதேவேளை, தற்போது வீசும் காற்றால் பனையோலைகள் வீழ்வதால், அவற்றில் உள்ள கருங்குளவிகள் மக்களைத் தாக்கும் சந்தர்ப்பங்கள் அதிகரித்துள்ளன. அதனால் மக்கள் அவதானத்துடன் செயற்படவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-9)



திருகோணமலையில் இருந்து தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்துக்கு கடந்த 19ஆம் திகதி ஆரம்பமான பாதயாத்திரை நேற்று கொடிகாமத்தை அடைந்தது. (எ-27)

# தென்மராட்சியில் நாளை 'பைஸர்'

சாவகச்சேரி, செப். 4

தென்மராட்சிப் பிரதேச மருத்துவமனைகளில் நாளை தொடக்கம் பைஸர் தடுப்பூசி ஏற்றப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய சாவகச்சேரி ஆதார மருத்துவமனை, வரணி பிரதேச மருத்துவமனை, கொடிகாமம் பிரதேச மருத்துவமனை, கைதடி ஆரம்ப சுகாதார மருத்துவமனை மற்றும் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகம் போன்ற மருத்துவமனைகளில் பைஸர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளலாம்.

எனவே பொதுமக்கள் அருகிலுள்ள மருத்துவமனையில் தடுப்பூசி யைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-14,9)


**விற்பனைக்கு**

யாழ்.சென் ஜோன்ஸ் பாடசாலைக்கு முன்பாக 7 பரப்புக் காணியும். யாழ்.இந்துக்கல்லூரிக்கு முன்பாக 4 பரப்புக் காணியும். யாழ. CTB BUS தரிப்பிடத்திற்கு முன்பாக இரண்டு கடைகளும். கொழும்பு வெள்ளவத்தையில் 12 Perch யில் அமைந்துள்ள 12 வீடுகள் கொண்ட தொடர்மாடி வீடுகள் (Luxury Apartment) யாழ்.பருத்தித்துறை வீதியில் (Signal சந்திக்கு அண்மையில்) 4 பரப்பு புதிய வீடும், காணியும். யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக் கட்டடத்திற்கு முன்பாக 20 அடி அகலமும் 200 அடி நீளம் கொண்ட கடையும். காரைநகர் Keshuna Beach ற்கு அண்மையில் 200 பரப்புக் காணியும். யாழ் விக்டோரியா வீதியில் 16 பரப்புக்காணியும். 12 பரப்புக் காணியும் யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் மரக்கறிச்சந்தைக்கு முன்னால் 2 கடைகளும் விற்பனைக்கு உண்டு.

185, காலி வீதி வெள்ளவத்தை | 0777 2325 35 | கனகசபை தர்மகுலசிங்கம் 185, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்



**வேலையாட்கள் தேவை**

யாழ்.நகரில் இயங்கி வரும் தனியார் நிறுவனத்திற்கு பின்வரும் பதவி நிலைகளுக்கு வேலையாட்கள் தேவை. (ஆண், பெண்)

1. Account Assistant
(கணினி அறிவுடைய கணக்கு உதவியாளர்)
2. Designer
(Photoshop, Corel draw செய்யக்கூடியவர்கள்)

வருகின்ற 6ம் 7ம் திகதிகளில் நேர்முகப்பரீட்சை நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

077 120 8482


**யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் யாப்பு சீர்திருத்தம்**

எமது சங்கத்தின் யாப்பானது கடந்த பொது கூட்டத் தீர்மானத்திற்கமைய சீர்திருத்தம் செய்யப்பட உள்ளது. அதற்கான முன் மொழிவுகளை சங்க உறுப்பினர்கள் 19.09.2022 இற்கு முன்னராக பதிவுத் தபால் மூலம் செயலாளர், பழைய மாணவர் சங்கம், யாழ்.இந்துக்கல்லூரி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மருத்துவர் கோ.றஜீவ்
04.09.2022 செயலாளர்.

# சிறுவர் பூங்கா கிணற்றில் தவறிவிழுந்த சிறுமி மீட்பு

சாவகச்சேரி, செப். 4

சிறுவர் பூங்காவில் காணப்பட்ட பாதுகாப்பற்ற கிணற்றில் தவறி விழுந்த 8 வயதுச் சிறுமி, அங்கு நின்றவர்களால் மீட்கப்பட்டார். இந்தச்சம்பவம் சாவகச்சேரி வடக்கு மடத்தடிப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. பாதுகாப்பற்ற குறித்த கிணற்றின் கட்டை உயரமாக அமைக்கவேண்டும் என்றும் அதுவரை சிறுவர்கள் உள்நுழைவதை தடைசெய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-14,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆவது நாள் நினைவேந்தலும் அந்தியேஷ்டி அழைப்பும்

மண்ணில்
18 . 03 . 1935



விண்ணில்
06 . 08 . 2022

## அமரர். ஞானலக்ஷ்மி நவரெத்தினம்
(முன்னாள் வயலின் ஆசிரியை, உடுவில் மகளிர் கல்லூரி)

அன்பினால் அரவணைத்து.
அன்னைக்கு இலக்கணமாய்
ஆற்றலுடன் வழிநடத்தி
புன்முறுவல் பூத்த உங்கள் முகம்
எம்முன்னே நிழலாட. - நம்
கண்கள் குளமாகிட
காலனடி சேர்ந்ததேனோ?

கடந்த 06.08.2022 அன்று இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவி ஞானலக்ஷ்மி நவரெத்தினம் அவர்களின் 31ஆவது நாள் அந்தியேஷ்டி கிரியைகள், நாளை திங்கட்கிழமை அதிகாலை 4 மண்ணியளவில் போக்காலை வீதி, உடுப்பிட்டியில் உள்ள எமது இல்லத்தில் இடம்பெறும். அதையடுத்து, காலை 10.30 மணியளவில் எமது இல்லத்தில் இடம்பெறும். ஆத்மசாந்திப் பிரார்த்தனை மற்றும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

**குடும்பத்தினர்**
**தகவல்: கணவர்- நவரெத்தினம் (மெம்பர்)**
**(077- 6699166)**

# 31 ஆம் நாள் நெஞ்சை விட்டு அகலா அஞ்சலி

தோற்றம்
09 . 02 . 1951



மறைவு
04 . 08 . 2022

## பத்தகுமார் ரஞ்சினி (கமலேஸ்வரி)

அன்பினால் எம்மை அகத்தினில்
பதிய வைத்த ஆருயிர்த்தங்கையே
உன்பிரிவுத்துயர் கேட்டு எம் இதயங்கள்
உடைந்ததம்மா வெளிநாட்டில்
இருந்தபொழுதும் அருகில் இருப்பது போல்
அண்ணா அண்ணா என்று உறவாடினாயே
இனி எப் பிறப்பில் காண்போம்
உன் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கும் அண்ணா குடும்பத்தினர்.



உரும்பிராய் வடக்கு.

சகோதரன்
கருணாகரன் ([illegible])
குடும்பத்தினர்

# யாழ் நகரில் உடனடி வேலை வாய்ப்பு

வாழ்வில் முன்னேறி சாதித்து காட்ட வேண்டும் என்ற எண்ணத்துடன் வாழ்பவரா நீங்கள்?
**வெளிநாட்டு சுற்றுலாக்கள் கார், வீடு வாங்கி ஆடம்பர வாழ்க்கை வாழ வேண்டுமா?**



மாத வருமானம் 50,000 தொடக்கம்

- O/L பரீட்சை சித்தி பெற்றவர்கள்
- பகுதி நேர வேலை வாய்ப்பு
- தகுதிக்கேற்ற உயர்பதவிகள்

உங்கள் வாழ்வை வளமாக்கி கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்
**077 560 2579, 076 890 3761**

(CS 206181)(3/6)

## வீடு வாடகைக்குண்டு

மல்லாகம் - தெ/புன்னாலைக்கட்டுவன். 764 Bus route இலுள்ள பெரிய வீடானது கௌரவமான குடும்பத்திற்கு /முன்பகுதி நிறுவனத்திற்கும் உடன் வாடகைக்குண்டு
**075 075 4802**

## வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கிவரும் எமது வியாபார நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை.
**0779911025, 0779398876**

## வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கிவரும் புடைவை வியாபார நிலையத்திற்கு வேலையட்கள் தேவை. பழக விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளலாம். ஆண், பெண் இருபாலரும் விரும்பத்தக்கது.
**077 879 9943**

## காணி விற்பனைக்கு

¾ பரப்பு கஸ்தூரியார் வீதி
விலை - 95 இலட்சம்
**071 313 6818**

## வேலையாட்கள் தேவை

கிளிநொச்சியில் உள்ள ரெஸ்ரோறன்ற் (Hotel) ஒன்றிற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

- சமையலாளர் (Chef)
- உதவி சமையலாளர்
- வெயிற்றர் (Waiter)

**076 034 3700**

## வேலையாட்கள் தேவை

கிளிநொச்சியில் உள்ள பன்சி (Fancy) மற்றும் பியூட்டி பாலருக்கு கீழ்வரும் பணியாளர்கள் உடன் தேவை

- முகாமையாளர்
- Beutician (அழகு கலை)
- விற்பனையாளர்

**077 720 2408**

## வேலையாள்கள் தேவை

No.36, K.K. தொழிற்சாலை, படித்த மகளிர்திட்டம் மிருசுவில் எனும் முகவரியில் இயங்கும் ஊதுபத்தி தொழிற்சாலைக்கு பெண் வேலையாள்கள் தேவை.
(cs 48302) (2.6) **077 602 3002**

## வீடு வாடகைக்கு நாள்/ கிழமை

Luxury வீடுகள் அனைத்து வசதிகளுடன் யாழ்.நகரில்
Lord's Palace
**076 313 6818**


## வேலையாட்கள் தேவை

கிளிநொச்சியில் உள்ள திருமண மண்டபம் ஒன்றிற்கு கீழ்வரும் வேலையாட்கள் தேவை

- Room Boy
- வெயிற்றர் (பரிமாறுபவர்)
- சுத்தம் செய்பவர்

**077 231 5521**

# மரண அறிவித்தல்



## துரைசிங்கம் பகீரதன்
(ஆசிரியர், யாழ்/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை / யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி)

வடலியடைப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் பகீரதன் நேற்று (03.09.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் (முதலியார்) இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் பாஜினியின் அன்புக் கணவரும் பாலசேகரம், பார்வதிதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், நித்திலன் (பல்கலைக்கழகம் - மொறட்டுவ), நிரூசன் (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 2021 கணிதப்பிரிவு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாரதா (லண்டன்), பரிமளா (வீடமைப்பு அதிகாரசபை - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கோவிந்தராஜன், பாமினி (கனடா), பாலறமணன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் பிரணவப்பிரியன் (பல்கலைக்கழகம் - சப்பிரகமுவ), சங்கீரணி (பல்கலைக்கழகம் - பெரதெனியா) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.09.2022) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்.**

[illegible] 2ம் ஒழுங்கை,
[illegible]டைப்பு,
பண்டத்தரிப்பு.

**077 227 7917**
(மகன் நிரூசன்)
**077 271 8387**
(சகோதரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

6 x 9 கண்டகல் கொண்டு வந்து பறிக்கப்படும்.

(CS 20617) (3/6) T.P 077 844 8775

## A/L இணைந்த கணிதம்

A/L 2022, A/L 2023, A/L 2024 மாணவர்களுக்கு தனியாகவோ or குழுவாகவோ கற்பிக்கப்படும்.

(CS 20620) (3/6) T.P 077 832 4002

## தேவை

பனாட்டு தொகையான விலைக்கு தேவைப்படுகின்றது விநியோகிக்க கூடியவர்கள் தொடர்புகொள்ளவும்.

072 733 2251 / 072 733 2246

## Angel International School

Jaffna Manipay Chavakachcheri

Admissions available for the Classes from 3+ to A/L for the New Academic Year 2022/2023 from 5th September 2022.

| School Location | Available Classes | Contact Number |
|---|---|---|
| Jaffna | 3+ to Grade 6 | 021 222 4118 |
| Manipay | 3+ to A/L | 021 225 5628 |
| Chavakachcheri | 3+ to Grade 6 | 0777065365 |

Call us for more information.

- School Administration

### ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை

யாழ்ப்பாணம் மானிப்பாய் சாவகச்சேரி

3+ தொடக்கம் உயர்தரம் வரையான புதிய கல்வியாண்டுக்குரிய வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

| பாடசாலை | வகுப்புக்கள் | தொடர்பு இலக்கம் |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 3+ to Grade 6 | 021 222 4118 |
| மானிப்பாய் | 3+ to A/L | 021 225 5628 |
| சாவகச்சேரி | 3+ to Grade 6 | 0777065365 |

மேலதிக விபரங்களிற்கு எம்மைத் தொடர்புகொள்ளவும்.

- பாடசாலை நிர்வாகம்

(cr.37124) (2.6)

## நெல் விற்பனைக்கு

15 மூடை நெல் (சிகப்பு) அரிசியாகவும் குத்தி தரலாம். (50kg மேல்) விலை 1kg கடை விலையிலும் 20 குறைவு. மா. அரைக்க நன்று இடம் : அரியாலை

077 786 5637 (CS 20613) (3/6)

## அனெக்ஸ் வீடு வாடகைக்குண்டு

ஒரு அறையும் ஒரு சமையலறையும் இராசவீதி, கோப்பாய் தலையான் ஹோட்டலுக்கு அருகாமையில் உள்ளது. சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.

(cs 463481) (2.6) 077 719 1432

## வாடகைக்கு

கோப்பாய் சந்தி கந்தசுவாமி கோயிலுக்கு அருகில் வீடு வாடகைக்கு உண்டு. சிறிய குடும்பம் அல்லது மாணவர்கள் விரும்பத்தக்கது.

077 402 9875

## தமிழ் பாட வகுப்புக்கள்

தரம், 09.10.க.பொ.த சாதாரண. க.பொ.த.உயர்தர வகுப்புக்களுக்கான தமிழ்மொழிப் பாடங்கள் யாழ்நகரின் அனுபம் மிக்க பெண் ஆசிரியரால் தனியாகவும், குழுவாகவும் கற்பிக்கப்படுகின்றது.

(cs462951) (2/6)

077 532 7636

## விற்பனைக்கு

சிங்கர் தையல் மெசின் புதியது கோழி இறைச்சி, மீன் வகை சுடுவது மற்றும் சகல அளவுகளில் பிளாஸ்ரிக் கொள் கலன், மண்எண்ணை குக்கர் சகல அளவுகளில் விற்பனைக்குண்டு.

சூரியன் பல்பொருள் வாணிபம்
180, சிவன் பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.
கைபேசி எண் : 077 071 3048

(CS 20614) (3/6)

## உயர்தர பௌதீகவியல் வகுப்புக்கள்

குழுவாகவும் தனியாகவும் கற்பிக்கப்படும். கடந்த கால வினாக்கள் செய்துவிடப்படும்.

(cs 20621) (2.6)

சொ.துணவர்ஷன் BSc, PGDE

077 538 8670

## காணி விற்பனைக்கு

கொழும்பு நாவல, கொஸ்வத்த சுவர்ணதிசி பிரதேசத்தில் 8 பேர்ச்சஸ் வெற்றுக்காணி விற்பனைக்குண்டு.

01 பேர்ச்சஸ்சின் விலை - 50,00,000/-

077 303 9343

## மணமகள் தேவை

கொழும்பை பிறப்பிடமாகக் கொண்ட ஐரோப்பாவில் பிரஜாவுரிமை பெற்று வசிக்கும், இந்திய வம்சாவளி தமிழ் இந்து. 1982 இல் பிறந்த இளமை தோற்றமுள்ள மணமகனுக்கு படித்த, அழகிய 32 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. முழு விபரங்களுடன் **00351 961 869 985** அல்லது **0762000636** எனும் இலக்கத்தில் வட்ஸ் அப் மூலம் தொடர்புகொள்ளவும்.

## தேவை

பிரபல்யமான கடை ஒன்றிற்கு வேலைக்கு ஆட்கள் தேவை. சம்பளம் 20. 000 - 40,000

077 282 4648

வீட்டில் தங்கி நின்று வேலை பார்ப் பதற்கு பெண்கள் தேவை. வயது கூடிய கணவன்.மனைவி இருபாலாரும் விரும் பத்தக்கது. சம்பளம் 30,000-40,0000

077 375 3503 (CS 20611) (3/6)

## Government TVEC Approved தாதியர் பயிற்சிப்பாடசாலை FLORENCE NIGHHTINGAL

### தாதியப்பயிற்சி நெறி - 2022



**நுழைவுத்தகைமை**

- க.பொ.த.சாதாரண தரம் குறைந்தது 5 பாடங்கள் சித்தி பெற்றிருத்தல்
- விண்ணப்பதாரி 16 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல்
- பயிற்சிகால எல்லை 1 வருடம் (பகுதி நேரம்)
- பயிற்சி முடிவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்
- தனியார் வைத்தியசாலையில் நிரந்தர வேலைவாய்ப்புக்கள்

**கற்கை நிலையங்கள்**

- மருதனார்மடம் • சாவகச்சேரி

விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள தொடர்புகெள்ள வேண்டிய இலக்கங்கள்

Viber: T.P.No.: 077 718 6438 Whatsapp: 077 482 4473

நிர்வாகம், புளோரன்ஸ் நைற்றிங்கேல் தாதியர் பயிற்சிப்பாடசாலை


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 10 - 11 - 1955



மறைவு 05 - 08 - 2022

### அமரர் திருமதி
### துரைராசா மகேந்திரராணி

கண்ணெனவே காத்திருந்து கனகதைகள் உரைத்தாயே
எண்ணமெலாம் எம்முள்ளே வண்ணமான அம்மாவே
சொல்லரிய சோதனைகள் சொல்லாமற் சுமந்தாயே
வல்லமைகள் தந்துவிட்டு வான்வழியே சென்றாயே!

கடந்த 05.08.2022 அன்று இறைபதமடைந்த எங்கள் தாயாரின் பிரிவுச் செய்தி கேட்டு ஆறுதல் கூறியோருக்கும் இறுதிக் கிரியைகளில் பங்குகொண்டோருக்கும் பலவழிகளிலும் உதவியோருக்கும் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, 04.09.2022 ஞாயிறு அதிகாலை 5.00 மணிக்கு அல்வாய், செல்லையா வீதி, தனத்தியவத்தை ஞானவைரவர் ஆலய முன்றலில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் முற்பகல் 11.00 மணியளவில் எம் இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"பாமாலயம்", மயிலிட்டி,
கவிஞர் செல்லையா வீதி,
அல்வாய்.

குடும்பத்தினர்
0776664674
0769195630

(CR 37986) (3/6)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

### திருமதி அபிமினி சதீஸ்குமார்

(போதனாசிரியர் அஞ்சல் சேவை உத்தியோகத்தர், அஞ்சல் பயிற்சிக் கல்லூரி, யாழ்ப்பாணம்)



திதி: வளர்பிறை நவமி (04.09.2022)

மலர்வு 14.10.1979

உதிர்வு 15.09.2021

அமைதியான புன் சிரிப்போடு
கனிவு மொழி பேசும் கள்ளமில்லா
- வெள்ளை மனமும்
புன்னகை பூத்த பொன் வதனமும்
- மறைந்ததேனோ?
கண்களெல்லாம் கடல் அலையாய்ப்
- பொங்க
எம்மைக் கலங்கவிட்டு எங்கு
- சென்றீர்கள்....?

... வீதி,
அளவெட்டி மத்தி, அளவெட்டி.

உங்கள் பிரிவால் துயருறும்,
குடும்பத்தினர்

(CS 20619) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள்கள் தேவை

Hotel Room துப்பரவாக்குவோர் வேலைக்கு தேவை. இதற்கு அனுபவம் வாய்ந்த மற்றும் இப்பணியினை விருப்பமுடன் பணியாற்றக்கூடியவர்கள் விரும்பத் தக்கது. நேரம் : காலை 9.30 மதியம் 2.30
சம்பளம் : 18000/- இடம் சுண்டிக்குளி

**+ 94 770 773 842** (CS 46349) (3/6)

## துயர் பகிர்வு

எமது இசையாசிரியர் கழக அங்கத்துவ ஆசிரியை
திருமதி உதயமலர் சுரேஸ்குமார் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி தவமணி துரைராஜா**

அவர்கள் கடந்த 01.092022 அன்று இறைபதம் அடைந்தார். அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி! (CS 46345) (4/6)

**யாழ். கல்வி வலய இசையாசிரியர் கழகம்**

## UK / CANADA குடி பெயர்வதற்கான வாய்ப்பு!!!

குடும்பத்துடன் UK / Canadaவில் குடிபெயர்வதற்கான விசா

நீங்கள் 30 வயதிற்கு மேற்பட்ட திருமணமானவராயின், உங்களுக்கு உங்களது குடும்பத்தினருடன் ஐக்கிய இராச்சியத்திற்கு மற்றும் கனடாவிற்கு சட்டபூர்வமாக சென்று குடிபெயர்வதற்கான ஓர் வாய்ப்பு!!!

**நீங்கள் J B P VISA SOLUTION ஐ தெரிவு செய்வது ஏன்?**

- 100% சரியான தகவல்களை வழங்குதல் மற்றும் சரியான வழிகாட்டுதல்
- எந்தவொரு தரகரும் இன்றி, 15 வருடங்கள் ஐரோப்பாவில் தங்கியுள்ள இலங்கை Consultant உடன் நேரடியாக தொடர்பு கொள்ள கூடிய வாய்ப்பு
- குறைந்த பட்ச சேவை கட்டணத்தில் ஆரம்பித்து மிகுதி பணத்தை தங்களது தேவை பூர்த்தியானதன் பின் செலுத்தக்கூடிய வாய்ப்பு
- ஐரோப்பிய ஒன்றியத்தின் எந்நவொரு நாட்டிலும், அல்லது இங்கிலாந்து மற்றும் கனடாவில் ஏற்படும் எவ்வித பிரச்சனைகளுக்கும் தீர்வு பெற்று கொடுப்பது தொடர்பில் Solicitorsகளின் ஒத்துழைப்பு.

தொடர்புகளுக்கு: **0772 281 085**
E-Mail அனுப்புதல் : info@thevisasolution.com
**J B P VISA SOLUTIONS (PVT) LTD**
(Registered as a limited liability company in Sri Lanka PV 00203433)
SHIRDI Ads
www.thevisasolution.com

## AHAVOLI

**அகவொளி உள ஆற்றுப்படுத்தல், நிறுவனம், சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.**

**உள ஆற்றுப்படுத்தல் டிப்ளோமா பயிற்சிநெறி - 2022-2023**

அயர்லாந்து (கொல்வே) தேசிய பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் பெற்ற அகவொளி உள ஆற்றுப்படுத்தல் நிறுவனம் நடாத்தும் 'உள ஆற்றுப்படுத்தல் டிப்ளோமா' (Diploma in Psychological Counselling) கற்கை நெறிக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமை:**
அதிகுறைந்த தகைமையாக க.பொ.த. (உயர்தரம்) சித்தி.

**இலக்குக் குழுவினர்**: பல்கலைக்கழ மாணவர்கள், ஆசிரியர்கள், குருக்கள், துறவியர்கள், தாதியர்கள், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றுவோர் மற்றும் உள ஆற்றுப்படுத்தல் சேவையில் ஆர்வமுள்ளோர்.

**கற்கைநெறியின் தனித்துவங்கள்:** உளவியல் துறையில் தகைமை (M.Sc., M.Phil., B.A.) வாய்ந்த வளவாளர் குழாமினால் நெறிப்படுத்தப்படுகின்ற இக்கற்கைநெறியானது செயல்முறைப் பயிற்சிகளையும் உள ஆற்றுப்படுத்தல் சார்ந்த ஆய்வினையும் கொண்டுள்ளது. இதனை நிறைவு செய்தோர் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் உள ஆற்றுப்படுத்துநர்களாகப் (Counsellors) பணியாற்றி வருகின்றனர்.

**சான்றிதழ் வழங்கும் நிறுவனம்:** அயர்லாந்து தேசிய பல்கலைக்கழகம். கல்வே. அத்தோடு NVQ சான்றிதழும் வழங்குவதற்கான இறுதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**கற்கைநெறி மொழி : தமிழ்** **காலம்: ஒரு வருடம்**
**நாட்கள் : சனி, ஞாயிறு** **நேரம்: 09.00 - 02.15**
**விண்ணப்ப முடிவு திகதி: 25-09-2022 தொடங்கும் காலம்: ஒக்டோபர் 2022.**

**கட்டணம்:** ஐம்பத்தையாயிரம் (55,000) **பதிவுக் கட்டணம்:** ரூபா 1000.

**விண்ணப்பப் படிவம்:** நேரடியாகப் பெறுவதற்கு, **அகவொளி: உள ஆற்றுப்படுத்தல் நிறுவனம், சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.** ஏனையோர் தொலைபேசியில் தொடர்புகொண்டு இமெயில் I.D யைத் தருவதன் மூலம் அல்லது சுயவிலாசமிட்டு முத்திரை ஒட்டிய கடித உறையை அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பக் கட்டணம் ரூபா 100.

**மேலதிக விபரங்களுக்கு:**
**பணியகம் - 021 222 2856,**
**கற்கைநெறி ஒருங்கிணைப்பாளர் - 76 937 8476,**
**இயக்குநர் - 77 476 6891.**
**அருள்திரு இராசேந்திரம் ஸ்ரலின்**
(M.Sc.Guidance & Counselling, Manila)
**இயக்குநர்.** (cs.46316) (2.6)

## கட்டடம் வாடகைக்கு

நெல்லியடி சந்திக்கு அண்மையில் கொடிகாம வீதியில் அமைந்துள்ள 90' x 110' பரப்பளவுள்ள உயர்ந்த கட்டடம் வாடகைக்கு உள்ளது. சூப்பர் மார்க்கெட், ஸ்டோர்ஸ் போன்றவற்றிக்கு ஏற்றது. (CR 37987) (3/6)

**தொடர்பு : 077 784 5757**

## Holy Cross School of Health Science

767 /4 Beach Road, Jaffna.

**Care Giver (NVQ III)**
Qualification - G.C.E (O/L)
Duration - 6 - 9 months

**Nurse Assistant (NVQ L IV)**
Qualification - G.C.E (O/L)
Duration - 16 months.

**Diploma in Nursing**
Qualification - G.C.E (A/L) Completed
Duration - 3 Years (2 Years Studies, 1Year training with Salary)

இதற்கான விண்ணப்பங்களை 10.09.2022 திகதிக்கு முன்னதாக தங்களுடைய சுயவிபரக்கோவையுடன் (Bio Data) நேரடியாகவோ or தபால் மூலமாகவோ எம்மைத் தொடர்பு கொள்ளவும். (CS 20622) (3/6)

**077 427 0120, 076 088 6104**

## நிரந்தர வருமானத்தை ஈட்டித்தரும் சர்வதேச கற்கை நெறிகள்

**Crypto Currency/ Forex/ Stock Trdings**

Indroductions to Markets
Exchanges/ Broker Registrations
Candles, Charts, Patterns
Spot & Futures Trading
Trading Technics & Indicators
Online Trading & Many more


**Duration: 6 Weeks**
Sat : 10.00 am - 12.00 noon
Sun: 10.00. am -12.00 noon
Starting:10-09-2022

**முதல் 2 வகுப்புகள் இலவசமாக நடைபெறும்**

ஆசனங்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், முற்பதிவு செய்யவும்

முழு நேர, பகுதி நேரமாக இந்தத் துறையில் நீங்கள் பயணிக்கலாம்

**SRS TREND TRADING**
[British Collge of Higher Studies]
No.15, Sirambiyadi Lane, Jaffna
021-2224550, 0777585913



## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 08 – 08 – 1935



இறப்பு 07 – 09 – 2019

## அமரர் திலகவதி விஸ்வநாதன்

வேலணை மேற்கு (சிற்பனை)

**திதி : 04.09.2022**

ஆண்டு மூன்று ஆனதம்மா உங்கள் வதனம் தனைக் காணாமல்
நித்தம் நித்தம் வாடுகின்றோம் உங்கள் நினைவுகளை
- சுமந்தபடி அம்மா
அம்மா நீங்கள் இல்லாத இல்லமது களை இழந்து போனதம்மா
தாயே மறுபிறவி எடுத்து வந்து விடம்மா நான்
மடியில் இட்டு தாலாட்ட
அம்மா உங்கள் ஆத்மா சாந்தியடைய சிற்பனை வேலவரின்
பாதங்களை வேண்டுகின்றோம்.

10, இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம்.
(CS 46350 ) (3/6)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

## பெயர் மாற்றம்

துரையன் செம்பாடு, வல்வெட்டி.
வல்வெட்டித்துறையை வதிவிடமாக கொண்ட
**சதாசிவம் சதிஸ்வரராசா** என்ற
பெயரினை **சதாசிவம் சதீஸ்வரராஜா**
என மாற்றிக் கொள்வதோடு இன்றிலிருந்து சகல
ஆவணங்களிலும் அவ்வாறே கையொப்பம்
இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசிற்கு
அமைவாக அறியத்தருகின்றேன்.
**ச.சதீஸ்வரராஜா**

## மணமகள் தேவை

1989 கிறிஸ்தவ மணமகன்,
உத்திரட்டாதி, மாதகல். Assistant
Manager (UK) , பதிவு: 6489.
பதிவுக்கட்டணம் மட்டுமே.
தரகர் கூலி இல்லை.
(ACO IN 37990) (3/6)

www.EQMarriageService.com
Ensured Quality Lanka Pvt Ltd, Colombo - 04
அழையுங்கள் 076 664 9401

## மணமகன் தேவை

1980 இந்து மணமகள்,
ஸ்வாதி, திருநெல்வேலி, Doctor
(Jaffna), மணமகள், பதிவு: 6729.
பதிவுக்கட்டணம் மட்டுமே.
தரகர் கூலி இல்லை.
(ACO IN 37969) (3/6)

www.EQMarriageService.com
Ensured Quality Lanka Pvt Ltd, Colombo - 04
அழையுங்கள் 076 664 9401

## வேலையாட்கள் தேவை

திருநெல்வேலி, யாழ். நகரில் அமைந்துள்ள பிரபல்யமான வர்த்தக நிலையத்திற்கு பின்வரும் அனுபவம் உள்ள வேலையாள்கள் தேவை.

**1. கணக்காளர்**
**2. காசாளர்**
**3. சமையலாளர்.**
**4. விற்பனையாளர்.**
**சம்பளம் : 35 000/- க்கு மேல்**

**076 638 3861** (CS 20621) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### எரிபொருள் வழங்காததால்

# மாடுகளை பயன்படுத்தி பெரும்போகம் ஆரம்பம்

**கிளிநொச்சி, செப். 4**

**கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோகப் பயிர்ச்செய்கையை நிறைவுசெய்த விவசாயிகளுக்கு, பெரும்போகச் செய்கை ஆரம்பிப்பதற்கு நிலத்தைப் பண்படுத்துவதற்கு ரிய எரிபொருள் வழங்கப்படவில்லை. இதனால் மாடுகளைப் பயன்படுத்தி வயலைப் பண்படுத்தி பெரும்போகத்தை ஆரம்பித்துள்ளோம் என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.**



இது தொடர்பில் விவசாயிகள் தெரிவிக்கையில்,

முன்னையகாலம் போன்று அனைத்து விவசாயிகளும் இயந்திரத்தை நம்பாமல் வீட்டுக்கு ஒரு சோடி மாடுகளை வளர்த்தால் மட்டுமே தற்போது விவசாயம் மேற்கொள்ள முடியும். எனினும் இந்த நிலை எமக்குப் பெரும் சிரமத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே இவற்றைக் கருத்திற் கொண்டு உரிய நேரத்தில் பெரும்போக செய்கையை மேற் கொள்வதற்குத் தேவையான எரிபொருள் மற்றும் யூரியா உரம் ஆகியவற்றை வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுத்தால் மட்டுமே நாட்டில் ஏற்பட்டுள்ள அரிசித் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு விவசாயிகள் உதவமுடியும். அவ்வாறில்லாமல் இந்த நிலை தொடருமாயின் ஒருவேளை உணவுக்கே வழியின்றிப் போய்விடும் அபாயம் ஏற்படும் - என்றனர். (ம-14,113)

“விநியோகித்தல் பிரதிநிதிகள்”
(சகல பிரதேசங்களிலிருந்தும் உடனடியாக தேவை)

கமத்தொழில் திணைக்களத்தின் பரிந்துரைப்பின்படி நாட்டிலுள்ள பிரதான உர தயாரிப்பு நிறுவனமான கென்காரா ஹோல்டிங்ஸ் நிறுவனத்தினால் தயாரிக்கப்படும் Eco Vita காபனேற்று திரவ உரம், கொம்போஸ்ட், காபனேற்று உரக்கட்டி மற்றும் சிறப்பு உர வகைகளை நாடளாவிய ரீதியில் விநியோகிப்பதற்கு பிரதிநிதிகள் உடனடியாக இணைத்துக்கொள்ளப்படுகின்றனர்.

தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளுக்கு மேற்குறித்த தயாரிப்பு பற்றிய அறிவு பெற்றுக்கொடுப்பதோடு விசேட கமிஷன் மற்றும் வசதிகள் நிறுவனத்தால் வழங்கப்படும்.

சகல விண்ணப்பதாரிகளும் பின்வரும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

1. தேவையானளவு / பொருத்தமான களஞ்சியப்படுத்தல் வசதிகள் காணப்படல்.
2. உர போக்குவரத்திற்கு பொருத்தமான அளவு லொறி வண்டி காணப்படல்.
3. பொருட்களை விநியோகித்தல், ஏற்றுதல், காசு சேகரித்தல் போன்ற பணிகளுக்கு உதவியாளர்கள் காணப்படல்.

கென்காரா ஹோல்டிங்ஸ் (தனியார்) நிறுவனம்
154 B / 03 ஹோகந்தர வீதி, ஹோகந்தர.
மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்
உபாலி பெரேரா - 0761 414 478 / கிருஷாந்தனி - 0740 445 808





# சீரற்ற காலநிலையால் அறுவடையில் சிரமம்!

### வவுனியா விவசாயிகள் கவலை

வவுனியா, செப். 4

கடந்த சில நாள்களாக நிலவிவரும் சீரற்ற காலநிலை மற்றும் மழை காரணமாக நெல்லை அறுவடை செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக வவுனியா மாவட்ட விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்தகாலங்களில் எரிபொருள் மற்றும் உரத்தட்டுப்பாடு ஏற்பட்டது. எனினும் எமது வாழ்வாதார நெற்செய்கையைக் கைவிடாது மேற்கொண்டு வந்தோம். அத்துடன் சிறுபோகத்துக்கான ஒரு அந்தர் உரத்தை சுமார் 40 ஆயிரம் ரூபா வரையில் கொள்வனவு செய்தே நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் கடந்த சில நாள்களாக பெய்துவரும் மழை காரணமாக வவுனியா மாவட்டத்தில் 2 ஆயிரத்து 240 ஏக்கர் வரையில் நெல்லை அறுவடை செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளோம். ஆகவே நாம் எதிர்கொண்டுள்ள பல்வேறு இன்னல்களைக் கருத்திற்கொண்டு எமக்குரிய உதவித்தொகை அல்லது நிவாரணம் வழங்க உரிய அதிகாரிகள் வழிவகை செய்யவேண்டும் - என்றனர். (ச-110)

# யாழ்.மாவட்டத்தில் மழை தொடரும்

யாழ்ப்பாணம், செப். 4

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது நிலவும் மழையுடனான காலநிலை தொடர்ந்தும் நிலவும். அத்துடன் மேற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மழை ஓரளவுக்கு அதிகரிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தால் நேற்று வெளியிடப்பட்ட வானிலை அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யும். சப்ரகமுவ மாகாணத்திலும் கண்டி, நுவரெலியா மற்றும் களுத்துறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 50 மில்லிமீற்றருக்கு மேல் ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும்.

ஊவா மாகாணத்திலும் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் ஒரு சில இடங்களில் மாலை அல்லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளில் அவ்வப்போது மணிக்கு 50 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும்.

எனவே இடியுடன் கூடிய மழை, பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ள போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள் - என்றுள்ளது. (ம-14)



# நிலத்தில் விழுந்த நகை உரியவரிடம் ஒப்படைப்பு

### மீட்டுக்கொடுத்தோருக்கு பொலிஸாரால் பாராட்டு

யாழ்ப்பாணம், செப். 4

மாகியப்பிட்டிப் பகுதியில் நிலத்தில் விழுந்து கிடந்த கைச்சங்கிலியை எடுத்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தினூடாக உரிமையாளரிடம் ஒப்படைத்த மூவருக்கு மானிப்பாய் பொலிஸார் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளனர்.

சங்கானைப் பகுதியைச் சேர்ந்த மூவர் மாகியப்பிட்டி பகுதியூடாக கடந்த புதன்கிழமை சுன்னாகம் நோக்கிப் பயணித்துள்ளனர். அதன்போது நிலத்தில் விழுந்து கிடந்த 2 பவுண் கைச்சங்கிலியை அவதானித்துள்ளனர். அதனையடுத்து கைச்சங்கிலியை எடுத்துச்சென்று மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

அதே பகுதியைச் சேர்ந்த ஒருவரே தனது நகையை தவறவிட்டார் என்று மானிப்பாய்ப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய பொலிஸார் குறித்த நபரை அழைத்து, நகையைக் கண்டெடுத்த இளைஞர்கள் மூலமாகவே நகை உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டது.

அண்மைகாலமாக யாழ்ப்பாணத்தில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்ற நிலையில் குறித்த இளைஞர்களினது செயற்பாடு பாராட்டுக்குரியது என்று மானிப்பாய்ப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-14, 125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழங்கப்பட்டுள்ள காணிகளில் பயிர்ச்செய்கை மேற்கொள்க!

## துணுக்காய் பிரதேச செயலர் அறிவுறுத்து

விவசாயிகளுக்கு என வழங்கப்பட்ட காணிகளில், காணி அனுமதியைப் பெற்று பயிர்ச்செய்கையில் முழுமையாக ஈடுபட வேண்டும் என்று துணுக்காய்ப் பிரதேசசெயலர் ஆ.லதுமீரா தெரிவித்தார்.

அம்பலப்பெருமாள்குளம் கிராமத்தில் காணி ஆவணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்படாத காணிகள் தொடர்பான விவரங்களை தற்போது இராணுவத்தினர் திரட்டி வருகின்றனர். அவ்வாறு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாத காணிகளில் இராணுவத்தினர் பயிர்ச்செய்கைகளில் ஈடுபடவுள்ளனர். எனவே காணி உரிமையாளர்கள் தமது காணிகளில் முழுமையாக பயிர்ச் செய்கைகளில் ஈடுபடவேண்டும். அவ்வாறு செய்யாமல் இருந்துவிட்டு பின்னர் இராணுவத்தினர் அந்தக் காணிகளில் பயிர்ச் செய்கைகளில் ஈடுபடும்போது காணிப் பிணக்குகள் தொடர்பாக பிரதேச செயலகத்துக்கு வரவேண்டாம். தங்களுக்கு வழங்கப்பட்ட காணிகளில் பயிர்ச் செய்கைகளில் முழுமையாக ஈடுபட்டு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். அதற்காக அனுமதியற்ற புதிய காடுகளை அழித்து பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளக் கூடாது. காணி அனுமதிகளுடன் பயிர்ச்செய்கைகளில் ஈடுபடுங்கள்- என்றார். (ம-14,13)

# வேலைதேடும் இளையோருக்கு வவுனியாவில் நிகழ்ச்சித் திட்டம்

வவுனியா, செப். 4

மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம், வவுனியா பிரதேச செயலகம் ஆகியவற்றால் வவுனியாவில் வேலை தேடும் இளையோருக்கு விசேட நிகழ்ச்சித் திட்டம் வவுனியா பிரதேச செயலகத்தில்; நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது.

இதன்போது இளையோருக்கு உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புகள், திறன் விருத்தி தொடர்பான தெளிவுபடுத்தல்கள், எதிர்கால தொழில் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் என்பன வழங்கப்பட்டன. நிகழ்வில் வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன், மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் தொழில் தேடுநர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-110)

# வீரசிங்கம் வித்தியில் கல்விக் கண்காட்சி



மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயத் தின் 2022 ஆம் ஆண்டுக்கான கல்விக் கண் காட்சி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் க.இளங்கோவன் தலைமையில் இடம் பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்வி கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்விப் பணிப்பாளர் மு.ஜெகதாசன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்வி ஆரம்பக்கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-159)

### மோ. சைக்கிள்...

தனுசியன் (வயது - 18) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 25ஆம் திகதி பிறந்தநாள் கொண்டாட்டம் ஒன்றில் குறித்த நபர், தனது நண்பர்களுடன் பங்கேற்றுள்ளார். பின்னர் அங்கிருந்து நண்பருடன் மோட்டார் சைக்கிளில் கடைக்கு பயணித்துள்ளார். இதன்போது குறித்த நபரும் , நண்பரும் தலைக்கவசமும் அணியவில்லை. நண்பருக்கு சாரதி அனுமதிப்பத்திரமும் இல்லை . அத்துடன் நண்பர் மதுபோதையிலேயே சார்த்தியத்தை மேற்கொண்டுள்ளரெனவும் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

அதிவேகமாக மோட்டார் சைக்கிளில் அவர்கள் சென்றபோது, அது மதிலுடன் மோதியதாகவும் , பின்னால் பயணித்தவர் தூக்கி வீசப்பட்டார். அவர் மயக்கமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார். சாரத்தியம் மேற்கொண்டவர் காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ஒ-26)

### இரு கிராமங்கள்...

பருத்தித்துறை - துன்னாலை மேற்குப் பகுதியில் இரு கிராமங்களுக்கு இடையேயான மோதலில் 4 நாள்களாக நீடிக்கும் நிலையில் 15 வீடுகள் சேதமடைந்துள்ளன. இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 25க்கும் மேற்பட்டோர் தேடப்பட்டு வருகின்றனர் - இவ்வாறு நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

வாள்கள், கற்கள் மற்றும் போத்தல்களினால் மோதல்கள் இடம்பெறுவதாக பொலிஸார் கூறினர். சம்பவம் தொடர்பில் 7 முறைப்பாடுகள் நெல்லியடி பொலிஸ்நிலையத்துக்குகிடைத்துள்ளன என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

'நான்கு நாள்களுக்கு முன்னர் இரண்டு தரப்பினருக்கு இடையே ஏற்பட்ட முரண்பாடு மோதலாக மாற்றமடைந்தது. அது பின்னர் கிராமங்களுக்கு இடையிலான மோதலாக மாறியுள்ளது. சம்பவத்தில் 15 வீடுகள் சேதமடைந்துள்ளன. சிலர் காயமடைந்துள்ளனர். சம்பவ இடத்தில் பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். எனினும் மோதல்கள் தொடர்கின்றன.

நேற்று மாலை வரை இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் பெயர் குறிப்பிடப்பட்ட 25 பேர் தேடப்பட்டு வருகின்றனர்.

நேற்று நண்பகல் 12.30 தொடக்கம் மாலை 6.30 மணிவரை அடங்கியிருந்து, மோதல் மீண்டும் நேற்றிரவு பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது - என்று பொலிஸார் கூறினர். (அ-ஒ-26)

### நித்தியானந்தா...

கூறப்படும் செய்தியில் உண்மையில்லை என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தியாவில் பாலியல் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியுள்ள சாமியார் நித்தியானந்தா இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருப்பதாக இந்திய ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

தமக்கு மருத்துவ உதவி தேவைப்படுவதாகவும், அதற்காக அடைக்கலம் தருமாறும் அவர் கோரியுள்ளாரெனவும் அந்த செய்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மருத்துவத்துக்கான அனைத்துச் செலவுகளையும் தாம் வாழ்ந்துவரும் சொர்க்கப்பூமியான கைலாசம் ஏற்றுக்கொள்ளும் என்றும் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளாரென இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்தநிலையில் இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்று ஜனாதிபதி ஊடகப்பிரிவிடம் வினவியபோது, நித்தியானந்தாவிடம் இருந்து எந்தக் கடிதங்களும் கிடைக்கவில்லை. அத்துடன் இந்த செய்தியில் உண்மையில்லை என்றும் பதில் வழங்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

### கைது...

வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி பதவியைத் துறந்தமையால் கோத்தாபய ராஜபக்ச விடுபாட்டுரிமையை - சிறப்புரிமையை இழந்துள்ளார். அவரை நீதியின் முன்நிறுத்த வேண்டும் என கோத்தாபய ராஜபக்சவை பதவியிலிருந்து அகற்றிய ஆர்ப்பாட்டங்களுக்கு தலைமை வகித்தவர்களில் ஒருவரான இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கோத்தாவை ஏற்றுக்கொள்வதற்கு எந்த நாடும் தயாரில்லாத காரணத்தால்தான் அவர் நாடு திரும்பினார் என்று தெரிவித்துள்ள ஜோசப் ஸ்டாலின் அவர் மறைந்திருப்பதற்கு எங்கும் இடமில்லை என சுட்டிக்காட்டியுள்ளார்.

22 மில்லியன் மக்களுக்கு பெரும் துன்பத்தை ஏற்படுத்தியமைக்காக அவரை கைது செய்யவேண்டும். அவர் இழைத்த குற்றங்களுக்காக தண்டிக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டமையால் அவருக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்குகளிலிருந்து விடுவிக்கப்பட்டார். தற்போது அவர் சிறப்புரிமையை இழந்துள்ளமையால் அந்த வழக்குகளில் அவர் மீளவும் சேர்க்கப்படவேண்டும் என்றும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

### பாண் விலை...

கொழும்பில் பாண் விலை 300 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், யாழ். மாவட்டத்தில் விலை அதிகரிக்கப்படாது என்று யாழ். மாவட்டக் கூட்டுறவு வெதுப்பக உரிமையாளர் சங்கமும், ஒவ்வொரு பேக்கரி உரிமையாளர்களும் விலை தொடர்பில் தீர்மானம் எடுக்க முடியும் என யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கமும் தெரிவித்துள்ளன. இதனால் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.

'யாழ். மாவட்டத்தில் உள்ள வெதுப்பகங்களுக்கு பிறிமா நிறுவனம் அதிகரித்த விலையில் கோதுமை மாவை வழங்கவில்லை. எனவே இங்குள்ள வெதுப்பகங்கள் விலையை அதிகரிக்கத் தேவையில்லை. 200 ரூபாவை விட அதிகரித்த விலையில் வெதுப்பகங்கள் விற்பனை செய்தால் அவர்களுக்குரிய சலுகைகள் கேள்விக்குள்ளாக்கப்படும்' என்று யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கத் தலைவர் கந்தசாமி குணரட்ணம் தெரிவித்தார்.

இதேவேளை - 'பாணுக்கு கட்டுப்பாட்டு விலை இல்லை. எனவே வெதுப்பக உரிமையாளர்கள் தங்களுக்கு மா கிடைக்கும் விலையைப் பொறுத்து பாண் விலையை நிர்ணயம் செய்து கொள்ள முடியும்' என்று யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கச் செயலர் க.பாஸ்கரன் தெரிவித்தார், (அ-ஒ-5-26-27)

### தொலைபேசி...

தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு அனுமதிவழங்கியுள்ளது. இந்தக் கட்டணத் திருத்தம் நாளை முதல் நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கைத்தொலைபேசி, நிலையான தொலைபேசி, புரோட்பாண்ட் மற்றும் பிற முற்கொடுப்பனவு, பிற்கொடுப்பனவு சேவைகளுக்கான கட்டணங்கள் 20 சதவீதம் அதிகரிக்கப்படவுள்ளன.

இதேவேளை - அனைத்து தொலைக்காட்சி சேவைகளுக்கான கட்டணங்களும் 25 சதவீதம் அதிகரிக்கப்படவுள்ளன.

மேலும், அனைத்துக் கட்டண தொலைக்காட்சி சேவைகளுக்கான வற் வரி 12 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக உயர்த்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்த வழிபாட்டுக்குத் தடை? ரவிகரனிடம் வாக்குமூலம் பதிவு

**முல்லைத்தீவு, செப். 4**

**முல்லைத்தீவு - குருந்தூர்ப் பகுதியில் பௌத்த வழிபாடுகளுக்குத் தடை விதித்தார் என்ற குற்றச்சாட்டை அடுத்து, முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரனிடம் பொலிஸார் நேற்றுமுன்தினம் வாக்குமூலத்தைப் பதிவுசெய்தனர்.**

குருந்தூர்மலையில்பௌத்த மதக் கட்டுமானமொன்று முன்னெடுக்கப்படவிருந்த நிலையில், பொதுமக்களும் மக்கள் பிரதிநிதிகளும் இணைந்து மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தை அடுத்து அந்த முயற்சிகள் கைவிடப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர்களான வினோநோகராதலிங்கம், செல்வராசா கஜேந்திரன், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன் ஆகியோரும் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

இதையடுத்து, குருந்தூர் மலையில் மேற்கொள்ளப்பட்ட பௌத்த வழிபாடுகளை தடுக்கமுற்பட்டதாகத் தெரிவித்து, ஆலய நிர்வாகத்தினரோடும், பொதுமக்களோடும் மக்கள் பிரதிநிதிகளாக இணைந்து ஜனநாயகவழி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான வினோநோகராதலிங்கம், செ.கஜேந்திரன், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன் ஆகியோருக்கு எதிராக மணலாறு சப்புமல்தென்ன ஆராண்ய விகாராதிபதி கல்கமுவ சந்திரபோதி தேரர் உள்ளிட்ட ஏழு தேரர்களால் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் வாக்குமூலத்தைப் பதிவுசெய்வதற்காக மேற்குறிப்பிட்ட நபர்களுக்குப் பொலிஸார் அழைப்பு விடுத்தனர். இதையடுத்து, வடமாகாணசபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன் ஆகியோர் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்கு நேற்றுமுன்தினம் சென்று வாக்குமூலம் வழங்கியுள்ளனர். (ம-246)



வரலாற்று சிறப்புமிக்க தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலய வருடாந்த உற்சவத்தின் திருமஞ்சத்திருவிழா பெருமளவான பக்தர்கள் சூழ நேற்றுமுன்தினம் சிறப்பாக இடம்பெற்றது. (ச-27)

# மாவட்டச் செயலகத்தின் மாதாந்தக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 4

யாழ். மாவட்ட செயலக மாதாந்த கலந்துரையாடல் மற்றும் சிறந்த உத்தியோகத்தருக்கான சான்றிதழ் வழங்குதல் நிகழ்வு மாவட்ட செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்தக்கலந்துரையாடலில் கொரோனா மற்றும் டெங்கு தொடர்பான விழிப்புணர்வு, கொரோனா விடுமுறையை சுற்றறிக்கைக்கு அமைய நடைமுறைப்படுத்தல், மரநடுகைத்திட்டம், ஆளணியை சீர்ப்படுத்தல், அலுவலக வளங்களை சிக்கனமாக பயன்படுத்தல், அரச நிறுவனங்களுக்கு கிடைக்கும் மின்னஞ்சல், தொலைபேசி அழைப்புக்களுக்கு சுற்றறிக்கைக்கு அமைய உடனடியாக பதிலளித்தல், 60 வயதுக்கு உட்பட்ட அரச ஊழியர்களுக்கு ஓய்வு வழங்கல், செலவினங்களை கட்டுப்படுத்தல், வாடிக்கையாளர் சேவை குழுக்களை நியமித்தல், நலநோம்புத் திட்டங்கள் போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன. (ய-27)





புலமை பரிசுகள் 50% வரை

கனடா அவுஸ்திரேலியா இங்கிலாந்து மற்றும் மலேசியாவில் கல்விப் பயில...

DALHOUSIE UNIVERSITY

0774 777 000

2+2 கனேடிய பட்டம் இலங்கையில் ஒரே இடம்

- Bachelor Of Computer Science
- Bachelor Of Applied Computer Science

- UCL இல் உங்கள் பட்டப்படிப்பைத் தொடங்குவதன் மூலம் ரூ.20 மில்லியனுக்கு மேல் சேமிக்கலாம்.
- பட்டப்படிப்பு முடிந்த 6 மாதங்களில் PR வேலைவாய்ப்பு
- புலமைப்பரிசில்கள் 50% வரை
- கனடாவில் Google, Microsoft, Ubisoft, Dell, IBM, ISCO, HB Studios, Lockheed Martin, Tesla போன்றவற்றில் கட்டண பயிற்சி

MONASH College

0774 777 000

அவுஸ்திரேலியா மலேசியாவிற்கு பட்டப்படிப்பு வழிகள்

- Monash University Foundation
- Monash College Diploma

- உலகில் 57வது இடம் - டைம்ஸ் உயர் கல்வி
- 8 பல்கலைக்கழகங்களின் குழு
- முதலாம் ஆண்டு பட்டப்படிப்பை UCL இல் தொடங்கி, இரண்டாம் ஆண்டு படிப்பை Monash இல் முடித்தால் ரூ.10 மில்லியன் வரை சேமிக்கலாம்.

University of Central Lancashire UCLan

0774 110 000

இலங்கையில் பட்டப்படிப்பு முடித்தல்/ இங்கிலாந்துக்கு இடமாற்றம்

- BSc (Hons) Software Engineering
- BA (Hons) International Business
- BA (Hons) Business and Marketing

- சிறந்த சர்வதேச முகாமை மற்றும் பன்னாட்டு நிறுவனங்களில் 1 ஆண்டு இன்டர்ன்ஷிப் வழங்கப்படுகிறது.
- 2 வருட படிப்புக்குப் பின் இலங்கையிலோ அல்லது இங்கிலாந்திலோ வேலை விசா.
- UCL சர்வதேச அறக்கட்டளை ஆண்டுக்குப் பிறகு 90+ பல்கலைக்கழகங்களுக்கு மாற்றும் வசதிகள் உள்ளன.

NCC education Awarding Great British Qualifications

- UCL International Foundation Year (UIFY)
- UCL International Foundation Year Global

- UCL இரண்டு வருட பட்டப்படிப்பை முடித்து மூன்றாம் ஆண்டுக்கான படிப்பை இங்கிலாந்தில் தொடர்ந்தால் இரண்டு வருட கால வேலை விசாவை பெற்றுக்கொள்ளலாம்.

info@ucl.lk | www.ucl.lk | UCL : 503, Sri Jayewardenepura Mawatha, Sri Jayewardenepura


# காலாவதியான உணவுப்பொருள்: உரிமையாளர்களுக்கு அபராதம்

யாழ்ப்பாணம், செப். 4



காலாவதியான உணவுப்பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த விற்பனை நிலையங்களின் உரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இளவாலை பொதுச்சுகாதார பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள விற்பனை நிலையங்களில் இளவாலை பொதுச் சுகாதார பரிசோதகர் மற்றும் பண்டத்தரிப்பு பொதுச்சுகாதார பரிசோதகர் ஆகியோர் இணைந்து அண்மையில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது இரண்டு விற்பனை நிலையங்களில் காலாவதியான உணவுப் பொருள்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. அதனையடுத்து குறித்த இரு விற்பனை நிலையங்களுக்கும் எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கு நீதிமன்றில் கடந்த வியாழக்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இரு விற்பனை நிலைய உரிமையாளர்களுக்கும் தலா 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ம-14,159)

# நேர அட்டவணையின்படி காரைநகரில் குடிதண்ணீர்

காரைநகர், செப். 4

காரைநகர் பிரதேசத்தில் நேர அட்டவணைப்படி கடந்த முதலாம் திகதி முதல் குடிதண்ணீர் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என காரைநகர் பிரதேசசபை தவிசாளர் க.பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அதன்படி ஜே/47 பிரிவுக்கு திங்கட்கிழமையும், ஜே/46, ஜே/48 பிரிவுகளுக்கு செவ்வாய்க்கிழமையும், ஜே/40, ஜே/41 பிரிவுகளுக்கு புதன்கிழமையும், ஜே/45 பிரிவுக்கு வியாழக்கிழமையும் ஜே/44 பிரிவுக்கு வெள்ளிக்கிழமையும், ஜே/42, ஜே/43 பிரிவுகளுக்கு சனிக்கிழமைகளிலும் மாத்திரம் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிரட்டைக்கரி அடுப்புகள் விற்பனைக்கு**



விலை 6500/=

சிரட்டைக்கரி அடுப்புகள் விற்பனைக்கு உண்டு. உங்கள் வீடுகளுக்கு கொண்டுவந்து தரப்படும்.

077 885 2450

**Chemistry [இரசாயனவியல்]**

Repeat batch க்கான துரித மீட்டலும் மற்றும் கடந்தகால வினாக்களும் zoom ஊடாக கற்பிக்கப்படும்.

கட்டணம் Rs 3000/Month

076 778 1442

சீமாட்டி சிறுவர் மருத்துவமனையில்

## 40 வகை மருந்துகளுக்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு

கொழும்பு, செப். 4

கொழும்பு சீமாட்டி சிறுவர் மருத்துவமனையில் 40 வகையான மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது என்று மருத்துவமனையின் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஜே.விஜேசூரிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த பல நாள்களாகவே அதிகளவான மருந்து வகைகள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்குத் தட்டுப்பாடு நிலவி வந்தது. அதனை வெளிநாட்டுத் தூதுவர்களின் உதவியால் பெற்றிருந்தோம். அதேபோன்று தற்போது ஏற்பட்டிருக்கும் நிலைமையில் வெளிநாட்டுத் தூதுவர்களிடமிருந்து மருந்து வகைககளைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கையிருப்பிலுள்ள மருந்துகளைக் கொண்டு மருத்துவமனை நடவடிக்கைகள் முடிந்தளவு முகாமைத்துவம் செய்யப்படுகின்றது- என்றார். (ம-14.இ)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 33 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.

- நான்கு பரப்பாகவும், இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் பிரதான வீதி (காப்பெற் வீதி) முகப்புடன்.
- 784 இலக்க பாதை போக்கு வரத்து பேரூந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- பொன்னாலை ரவுண்டப் போட் சந்தியிலிருந்து 1 KM தூரத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி (Jaffna College) இருந்து 1 KM தூரத்தில்.
- ஒரு பரப்பின் (நிலபர்ப்பு) விலை 1½ லட்சம் 150,000/= மட்டும்.
- 20 அடிப் பாதையுடன்

தொடர்பு: 076 755 8606 077 911 6983

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

af பிரெஞ்சு மொழி

- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf )
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



021 222 8093 17, Kandy Road, Jaffna

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 04 பரப்பு (நிலபரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப் பட்ட நிலையில்.
- கைதடி சந்தியிலிருந்து 750 M தூத்தில்
- A09 வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்.
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
- 20 அடிப் பாதையுடன்

076 7558 606

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் புத்தூரில் 141 பரப்புக் காணி (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.

- இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலை யில்.
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 1/2 KM தூரத்தில்
- சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1 1/2 KM தூரம்
- புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காப்பெற் வீதியில் இருந்து இரண்டாவது காணி .
- 775 இலக்க வழி பேரூந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்.
விவசாயம் செய்வதற்கும், வீடுகள் அமைப்பதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் (1 நிலபரப்பு) விலை 1½ லட்சம் (150.000) மட்டும்.
20 அடிப் பாதையுடன்

தொடர்பு: 077 6585 999 076 4365 814 077 8748 135

**உடனடி வேலைவாய்ப்பு**

யாழ்.நகர் நவீன சந்தையில் இயங்கிவரும் புடவை விற்பனை நிலையத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை.

(cs.20486) (2.6)

077 472 9304

**மின்சாரம் துண்டித்து விட்டதா?**
**மின்சார கட்டணங்களும் பில் ஏறிவிட்டதா?**

இதோ இதற்கான தீர்வை நாங்கள் பெற்றுத் தருகிறோம்

சகல விதமான மின்சாரப் பொருள்கள் பாவிக்க கூடியவாறு SOLAR INVERTER மிகவும் மலிவான விலையில் பொருத்தி தரப்படும். மின்சார கட்டணமும் சேமிக்கப்படும் மற்றும் CCTV கேமராக்கள் பொருத்தி தரப்படும் J.J GROUP 021 222 8854

(CS 20204)(3/6) No. 603, K.K.S, Road, Jaffna 077 555 5100

**அபாக்கஸ் (ABACUS)**
**ஆசிரியர் பயிற்சி**

பகுதி நேரம் தொழில் தேடுவோருக்கும் சிறிய முதலீட்டுடன் தொழிலை ஆரம்பிக்க உள்ளவர்களுக்கும் ஓர் அரிய வாய்ப்பு

இந்தியாவிலிருந்து வருகை தரும் நிபுணரினால் அபாக்கஸ் பயிற்சி அளிக்கப்பட்டு வடபகுதி எங்கும் அபாக்கஸ் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட உள்ளன. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் , கிளிநொச்சி, வவுனியா போன்ற இடங்களில் உள்ள வீட்டு மனையாட்கள், முன் பள்ளி மற்றும் பாடசாலை ஆசிரியர்கள், சிறிய முதலீட்டுகளுடன் தொழிலை ஆரம்பிக்க உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

(CS 1024) (3/6)

0775574190 076 758 5920

**பணிப்பெண் தேவை**

யாழ்நகரிலுள்ள வீட்டில் வீட்டு வேலைகள் செய்வதற்கு பணிப்பெண் தேவை.

077 025 0339

**விற்பனைக்குண்டு**

Mahindra Bolero 4x4 (2017) விற்பனைக்குண்டு

077 757 1717

**விற்பனைக்குண்டு**

WagonR - Sting ray 2018 உடன் விற்பனைக்குண்டு

077 757 1717

**வீடு வாடகைக்கு**

யாழ். நகரின் மையப்பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.

(CS 46639) (3/6) T.P 072 699 5175

**ENGLISH CLASSES**

SPOKEN ENGLISH WITH GRAMMAR
யாழ் நகரில் தனி வகுப்பு
G.C.E O/L, A/L, பட்டதாரிகள் தொழில் புரிபவர் ஆர்வமுள்ளவர்களுக்கு
G.C.E O/L Literature

K.Ganesh B.A 077 766 8725

**A/L இரசாயனவியல் வகுப்பு** (Tamil / English Medium)

076 751 6379

**கருங்கல் சல்லி வகைகள் விற்பனைக்கு**

மதவாச்சியில் இருந்து கொண்டு வரப்பட்ட கருங்கல் சல்லி வகைகள் விற்பனைக்கு உண்டு. 5 நூல் சல்லி 3/4 இஞ்சி சல்லி டஸ்ற், கலவண் 6 x 9 கல் போன்ற பொருட்கள் டிப்பர் மூலமாக பெற்றுக் கொள்ளலாம். (CS 20614) (3/6)

075 079 9222, 075 579 9222 076 008 5751

**சிற்பகலை பணியாளர்கள் தேவை**

யாழ்.கோண்டாவிலில் இயங்கும் சிற்பக்கலை கூட்டத்திற்கு சிற்பவேலை உதவியாளர்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம், தங்குமிடம், உணவு வழங்கப்படும்.

077 115 4791 076 880 4881

**வீடு வாடகைக்கு தேவை**

சிறிய குடும்பத்திற்கு யாழ்நகர், நல்லூர் பகுதியில் வீடு வாடகைக்கு தேவை.

077 087 6729

**தேவை**

உடுப்பிட்டி நெசவாலை அருகில், உள்ள காணிக்கு சீமைகிளுவை (கிளிரிசியா) கிளுவை கட்டட இடிபாடுகள் (Rubbles) தேவை. Rubbles எமது வாகனத்தினாலும் எடுக்கப்படலாம்.

077 381 9855 (CS 46351) (3/6)

**கட்டடத்தின் மேற்பகுதி வாடகைக்கு**

யாழ்ப்பாணத்தில் இருந்து 3km. தூரத்தில் பலாலி வீதியில் வாடகைக்குண்டு. அலுவலகங்கள், ரீயூசன் சென்ரர், ஆய்வு கூடங்கள் நடாத்துவதற்கு உகந்த இடம்.

075 037 5429 (CS 20612) (3/6)

**வீடு வாடகைக்கு தேவை**

மருதனார்மடம், சுன்னாகம், மல்லாகம், தெல்லிப்பளை உட்பட்ட பகுதியில் இணைவீடு/தனிவீடு இருவர் கொண்ட குடும்பத்திற்கு வாடகைக்கு தேவை.

077 695 8586

**திருமாங்கல்யம் திருமண சேவை**

உள்நாட்டு வெளிநாட்டு திருமணத் தேடலுக்கு எம்மிடம் இணையுங்கள்

லண்டன் : + 44 3339981170
பிரான்ஸ் : + 33 187650108
கனடா : + 1 6474937077
சுவிஸ் : + 41 435500244
இலங்கை : + 94 217284433
+ 94 7712 046 51 (CS201615) (3/6)

www.thirumaangalyam.com
35, பலாலி வீதி, யாழ்ப்பாணம் (ஆரியகுளம் அருகாமை)

**வேலைவாய்ப்பு**

வடமாகாணத்தில் இயங்கும் முன்னணி பத்திரிகை நிறுவனத்திற்கு வடமராட்சி கிளையில் (நெல்லியடி) மாலை 5.00 மணிமுதல் இரவு 11.00 மணிவரை கடமையற்ற பணியாளர்கள் தேவை.

தகைமைகள்
- க.பொ.த. உயர்தரம் சித்தி
- கணினி அறிவு மற்றும் தொடர்பாடல் திறண்
- சுயவிபரக்கோவையுடன் நாளை (05.09.2022) திங்கட்கிழமை காலை : 09.00 - 1.00 மணிவரையும் மற்றும் மாலை : 4.00 - 7.00 மணிவரையும் நேரில் வரவும்.

உதயன் வடமராட்சி, பிரதேச காரியாலயம், மாலு சந்தி அல்வாய். (ce37968) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.09.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

போன மச்சான் திரும்பி வந்தான்
பூமணத்தோட
நாட்டில் உள்ள சனங்கள்
எல்லாமினி கோவணத்தோட!
- ஒட்டுக்குழுச் சித்தர்

Registered as a Newspaper

சஞ்சீவி

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2053 ஆவணி 19 ஞாயிற்றுக்கிழமை (04.09.2022) சிகரம் : 114

# அதிகரிக்கும் சிறுமிகளின் கர்ப்ப வீதம்

# சிதைந்து செல்கிறதா கிளிநொச்சியின் சமூக கட்டமைப்பு?

அதிர்ச்சி ரிப்போர்ட்

○ மு. தமிழ்ச்செல்வன்

13.08.2022 தென்னிலங்கையிலிருந்து வெளியாகும் ஊடகங்களில், கிளிநொச்சி தொடர்பிலான சுகாதார அமைச்சின் தகவல் ஒன்று அதிக முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதாவது 'பாடசாலை செல்லும் சிறுமிகள் கர்ப்பம் தரிக்கும் வீதமும் பாடசாலை செல்லும் சிறுமிகள் தற்கொலை செய்துகொள்ளும் வீதமும் கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக அதிகரித்து வருகிறது' என்பதே அந்த அதிர்ச்சியளிக்கும் செய்தியாகும்.


இது குறித்துத் தேடிப் பார்த்தபோது மேலும் சில முக்கியமான விவரங்கள் கிடைத்தன.


சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் தலைமையிலான உயரதிகாரிகள் குழுவினர் ஆவணி மாத ஆரம்பத்தில் வடக்குக்கு வந்து, நான்கு நாள்கள் தங்கி, சகல மாவட்டங்களுக்கும் சென்று ஆய்வு செய்துள்ளனர்.

இந்த வகையில் கிளிநொச்சி மாவட்ட ஆய்வின் போது, மாவட்ட சுகாதாரத்துறை உயரதிகாரிகள் காண்பித்த தரவுகளில் இருந்துதான், மாவட்டத்தில் நிலவும் சமூக மற்றும் பொதுச் சுகாதார அவலங்களை இனங்கண்டு மத்திய சுகாதார அமைச்சு கேள்வி எழுப்பியிருக்கிறது.

13 ஆவது திருத்தச் சட்டத்தின்படி சுகாதாரம், மாகாண அதிகாரங்களின் கீழ் வருகிறது. வடக்கில் யாழ்.போதனா மருத்துவமனை தவிர்ந்த சகல சுகாதார கட்டமைப்புகளும் மாகாண சுகாதார அமைச்சின் கீழேயே வருகின்றன. மாவட்டத்தில் பொதுச்சுகாதாரம் உட்பட சகல விடயதானங்களும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரது ஆளுகைக்கு உட்பட்டன.

மாவட்டத்தின் சுகாதார நிலை தொடர்பில் கிரமமாக ஆய்வு செய்து உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரது கடமை. மாகாணத்தின் சகல பிராந்தியங்களினது சுகாதார நிலைமைகள் குறித்து கண்காணித்து வழிப்படுத்தவேண்டியதும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரது கடமை. அப்படி இருக்கையில், மத்திய சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் அவரது குழுவினருடன் வருகை தந்து, மாவட்டத்தின் சுகாதார நிலை குறித்து கிளிநொச்சி மாவட்டத்துக்கும், வடக்கு மாகாணத்துக்கும் அறிவுரை சொல்லிச் சென்றிருக்கிறார் என்றால் அதன் கருத்து என்ன?மாவட்டத்திலோ அல்லது மாகாணத்திலோ சுகாதார நிலை சம்பந்தமாக கிரமமான ஆய்வுகள் நடக்கவில்லை அல்லது நடந்தாலும் அவை 'கூடிக் கதைத்துக் கலைந்து போவதாக' இருந்திருக்க வேண்டும் என்றல்லவா அர்த்தம்?




இதுபற்றி கிளிநொச்சியில் பல ஆண்டுகளாக கடமையாற்றும் மூத்த சுகாதார உத்தியோகத்தர் ஒருவரிடம் கேட்டபோது அவர் சொன்னார் "இதுகள் பெரிய இடத்து விசயங்கள். நாங்கள் கதைக்கேலாது. ஆனாலும் நீங்கள் கேட்டதில உண்மை இருக்கு. முந்தி எல்லாம் ஒவ்வொரு மாதமும் 'பப்ளிக் ஹெல்த் றிவியூ மீற்றிங்' (பொதுச் சுகாதார மீளய்வுக் கலந்துரையாடல்) எண்டு பிராந்திய சுகாதாரப் பணிமனையில நடக்கிறது. அதில வச்சே புள்ளிவிபரங்கள், தரவுகள் எல்லாம் அக்கு வேறு ஆணி வேறாய் ஆராய்ஞ்சு உரியவையள் உடனடியா நடவடிக்கையள் எடுப்பினம். ஆனால் இடையில எல்லாம் மாறிப்போச்சு".

"ஏன் மாறியது. யார் மாற்றினார்கள்?" என்று விடாமல் கேட்டபோது, தயக்கத்துடன் "யாழ்ப்பாணத்தில ஒவ்வொரு மாதமும் இப்பிடி செய்யிறேலயாம். காலாண்டுக்கு ஒருக்கா செய்தால் போதுமாம் எண்டு 2018 ஆம் ஆண்டில இருந்து மாத்திப்போட்டினம்" என்றார்.

"அதைவிட முந்தி எல்லாம் நிறைய பொதுச் சுகாதார கிளினிக்குகள் மாவட்டத்தில செய்தனாங்கள். உதாரணமா கரைச்சியில மாதத்துக்கு 40 தாய்சேய் கிளினிக்குகளுக்கு மேல செய்தனாங்கள். யாழ்ப்பாணத்தில அப்பிடி செய்யிறேலயாம். அதனால அதுகளையும் 2018 இல இருந்து குறைக்கச் சொல்லிப்போட்டினம். அதால இப்ப கன கிளினிக்குகளை மூடியாச்சு. யாழ்ப்பாணத்தில அநேகம்பேர் மத்திய தர வர்க்கம். அங்கை பிறைவேற்றுகள் (தனியார் மருத்துவ நிலையங்கள்) கூட. சனமும் பிறைவேற்றுக்குத்தான் போகும். இங்கை அப்பிடியே? சனம் அரசாங்க வைத்தியத்தைத்தானே நம்பி இருக்குது. அதுகளை விளங்காமல் எல்லாத்தையும் தலைகீழாக்கிப் போட்டினம்" என்று அடுத்த குண்டையும் போட்டார்.

"சரி. அதை விடுவோம். சுகாதார அமைச்சு வெளியிட்ட தகவல் சரியா?" என்று கேட்டபோது "அது சரியான தகவல்தான். 2019 இல் இருந்து 2021 வரையான காலப்பகுதிக்குள்ள பாடசாலைச் சிறுமிகள் கர்ப்பமடையிறது 1.2 வீதத்தால கிளிநொச்சில கூடியிருக்கு. 2021 ஆம் ஆண்டு மொத்த கர்ப்பவதியளில 7.2 வீதம் பாடசாலைச் சிறுமியள். அதாவது 2379 கர்ப்பவதியளில 171 பேர் பாடசாலைச் சிறுமிகள். இதில 6 சிறுமியள் 16 வயதைவிட குறைஞ்ச வயதுடைய ஆக்கள். கண்டாவளை, பூநகரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில தான் இப்பிடி கர்ப்பம் தரிக்கிறது கூடவாயிருக்கு" என்றார் அவர்.

"கனகாலமா 'மிஸ்ஸியாக்கள்' (பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள்) இல்லாமல் இருந்த கிராமங்களில வேற கிராமத்தில இருந்த மிஸ்ஸியாக்களின்ர மேற்பார்வையில கிராம சுகாதார உதவியாளர்கள் (கள அனுபவமும் பயிற்சியும் பெற்ற சுகாதாரப் பணி உதவியாளர்கள்) தாய் - சேய் நலன் சேவையளை வழங்கிக் கொண்டிருந்தவை. 2018 இல இவையளை பழையபடி ஆஸ்பத்திரியளுக்கு போகச் சொல்லிப் போட்டினம். கள வேலையள் தொய்ஞ்சு போக அதுகும் ஒரு காரணம்" என்றார் நீண்டகாலமாக மாவட்டத்தில் கடமையாற்றும் அலுவலர் ஒருவர்.

"ஏன் அந்தக் கிராமங்களுக்கு மருத்துவ மாதுக்களை நியமனம் செய்துவிட்டார்களா?" என்ற கேள்விக்கு " இல்லை. இப்பிடி கிராம சுகாதர உதவியாளர்கள் (RHA) வேலை செய்தால் அந்த இடங்களில மருத்துவமாது வெற்றிடங்கள் இல்லை எண்டு சொல்லி புதுசா மருத்துவ மாதுக்களை நியமனம் செய்யமாட்டினமாம் எண்டு காரணம் சொன்னவை.

இது எப்பிடி எண்டால் ஒரு ஆசுப்பத்திரியில டாக்குத்தர் இல்லை எண்டு சொல்லி அட்டென்டர் மருந்து குடுத்தாராம். திடீரெண்டு அட்டண்டரை தூக்கியாச்சாம். ஏனென்டால் அட்டெண்டர் மருந்து குடுக்குறதால டாக்குத்தர் ஆளணி நிரப்புப்பட்டு போகுதாம். கடைசியா டாக்குத்தரும் வந்தபாடில்லை. அட்டெண்டரையும் மாத்தியாச்சு. அதால சனம் மருந்துக்கு அலைஞ்சதாம் எண்ட கதை மாதிரித்தான். ரண்டும் வெவ்வேற ஆளணி எண்ட அடிப்படை விளங்காத பெரியவை செய்த வேலை. அதால இப்ப ஊரில சனத்துக்கு மிஸ்ஸியும் இல்லை. கிராம சுகாதார உதவியாளரும் இல்லை. உப்பிடியான பொதுச் சுகாதாரப் பிரச்சினையள் இஞ்சாலை கூடுறதுக்கு இதுகும் காரணம்" என்ற பதில் கிடைத்தது.

இவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த கள உத்தியோகத்தர் ஒருவர் சொன்னார் "நாங்கள் இதுகளைச் சொல்லக்கூடாது. சொன்னால் எங்களை எதிரியளாக் கணிப்பினம். எல்லா அரச உத்தியோகத்தருக்கும் நாலு வருசத்துக்கு ஒருக்கா இடமாற்றம் கட்டாயம் எண்டு சொல்லி மிஸ்ஸியாக்களையும் (களச் சுகாதார மருத்துவ மாதுக்களை) மாத்திச்சினம். அப்பிடி மாத்தேக்க அவையளை தலைக்கு தலை மாத்திச்சினமே தவிர அந்த உத்தியோகத்தின்ர அடிப்படையை ஒருத்தரும் கணக்கில எடுக்கேல. முகமாலையில நிண்ட மிஸ்ஸியை எடுத்து கரைச்சியில போட்டிச்சினம். கரைச்சியில நிண்ட ஆளைத்தூக்கி கண்டாவளையில போட்டிச்சினம். கடைசியில மிஸ்ஸிமாரின்ர வேலை நேரம் முடிய சனம் அவையளை சந்திக்கேலாம ஆக்கியாச்சு. முந்தி எண்டா மிஸ்ஸி ஊருக்குள்ள அல்லது பக்கத்து ஊரில இருப்பா. எந்த நேரமும் ஆபத்து அந்தரத்துக்கு கூப்பிடலாம். அவையும் ஊரில இருக்கிறதால எல்லாற்ற பிரச்சினையும் அவைக்குத் தெரியும். அதால சனத்துக்கு நல்ல உதவி. இப்ப அதெல்லாம் இல்லாமப் போச்சுது. உப்பிடி அடிப்படை விளக்கம் இல்லாமல் இடமாற்றம் செய்யிறதெண்டால் கிளாக்கர்மாரே நிர்வாகத்தை நடத்தலாமே. ஏன் டாக்குத்தர்மாரை வச்சு அரசாங்கம் நிர்வாகம் நடத்துது எண்டு விளங்கேல"

"இந்த மாதிரியான இடமாற்றம் எல்லாம் எப்போதிருந்து செய்யப்பட்டது?" என்று கேட்டதற்கு "2018 க்கு பிறகு" என்று பதில் வந்தது.

2010 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையிலான புள்ளிவிவரங்களை நோக்கும்போது ஒரு விடயம் தெளிவாகிறது. கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலைச் சிறுமிகள் கர்ப்பம் தரிக்கும் வீதமானது 2010 ஆம் ஆண்டில் 12 வீதமாகக் காணப்பட்டுள்ளது. இது படிப்படியாகக் குறைந்து 2018 ஆம் ஆண்டில் 5.3 வீதமாகக்

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
செப்டெம்பர் 2022

# இலங்கை மீண்டெழுவது கடன்வழங்கிய நாடுகளின் கைகளிலேயே உள்ளது!



சர்வதேச நாணய நிதியத்துடனான அதிகாரிகள் மட்ட இணக்கப்பாடு, இடைக்கால வரவு–செலவுத்திட்டம் என்பவற்றால் இனிமேல் இலங்கையில் பொருளாதார நிலையில் ஏற்படப் போகும் சாதக, பாதங்கள், நெருக்கடிகள் என்பன தொடர்பில், கொழும்பு பல்கலைக்கழகப் பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம். கணேசமூர்த்தி 'உதயன்–சஞ்சீவி' வாசகர்களுக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணல்

○ நேர்காணல்: த.பிரஸ்நோவ்

## சடுதியான விலையேற்றங்களால் இலங்கையின் சமூகமட்ட அடைவுகள் சரியும்!

**கே: இலங்கைக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையில் அதிகாரிகள் மட்ட ஒப்பந்தம் ஒன்று கடந்தவாரம் எட்டப்பட்டுள்ளது. எனினும் அந்த ஒப்பந்தத்தில் வழங்குவதாக உறுதியளிக்கப்பட்ட நிதி உடனடியாகக் கிடைக்காது என்று கூறப்படுகின்றதே?**

ப: ஆமாம். அதிகாரிகள் மட்ட ஒப்பந்தம் என்பது வெறும் ஆரம்பகட்ட நடவடிக்கையே. குறிப்பாக எதிர்காலத்திலே என்ன செய்யவேண்டும், எவ்வாறு இந்தக் கடன்களை மீளச்செலுத்தலாம் என்ற விடயங்கள் சம்பந்தமாகவும், சர்வதேச நாணய நிதியம் எவ்வளவு நிதி வழங்கலாம் என்பது சம்பந்தமாகவும் அதிகாரிகள் மட்டத்திலே இணக்கம் காணப்பட்ட விடயங்களுமே அதிகாரிகள் மட்ட ஒப்பந்தமாக மாறும். இது ஒரு முதற்கட்டம்.

தற்போது ஓர் இணக்கத்துக்கு இரு தரப்பினரும் வந்துள்ளனர். அந்த இணக்கப்பாட்டிலும் இன்னும் கையொப்பம் இடப்படவில்லை. ஆனால் இந்த இணக்கம் என்பதும் கூட இலங்கைக்கு கடன் வழங்கியவர்கள் கடன் மறுசீரமைப்பு தொடர்பாக முழுமையான இணக்கத்துக்கு வந்ததன் பின்னர்தான் முழுமையடையும். அதன் பின்னரே 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி கட்டம் கட்டமாக வழங்கப்படும் .

**கே: கடன் மறுசீரமைப்பு விடயத்தில் என்னென்ன சிக்கல்களை இலங்கை எதிர்நோக்குமென எண்ணுகிறீர்கள்?**

ப: சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தினை இலங்கை திவாலாக முன்னரே செய்திருக்கவேண்டும். அதாவது கடனை மீளச் செலுத்த முடியாது என்று அறிவிப்பதற்கு முன்னரே சர்வதேச நாணய நிதியத்திடம் நாம் சென்றிருக்கவேண்டும்.

அப்படி சென்றிருந்தால் இது இருபக்க உடன்படிக்கையாக மட்டும் இருந்திருக்கும். அதாவது கடன்வழங்கியோர் மூன்றாம் தரப்பாக இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என்ற நிபந்தனை இருந்திருக்காது. தற்போது இலங்கை திவாலாகி கடைசிக்கட்டத்திலே சென்றபடியால் ,கடன்வழங்கியவர்கள் தங்களுடைய இணக்கப்பாட்டினை வெளிப்படுத்தவேண்டும். இதில் மூன்று விதமான இணக்கப்பாடுகளை அவர்கள் வெளிப்படுத்தலாம். ஒன்று, கடன் செலுத்தும் காலத்தை நீடித்துக் கொடுத்தல், இரண்டு, கடனுக்கான வட்டியைக் குறைத்தல் , மூன்று, கடனின் ஒருபகுதியை கழித்தல் என்று கடன் மறுசீரமைப்பு இடம்பெறலாம்.

ஆனால் சிக்கல் என்னவெனில், இந்த மூன்று முறையிலான இணக்கப்பாடுகளையும் இலங்கை கோருகின்றபோது, இதில் ஒன்றுக்கேனும் கடன்கொடுத்தோர் விரும்பினால் மாத்திரமே இணக்கத்துக்கு வரமுடியும். கடன் வழங்கியவர்களில் ஒரு சிலராவது 'முடியாது' என்று கூறிவிட்டார்கள் என்றால் ,இந்த ஒப்பந்தம் சாத்தியமற்றதாக மாறிவிடும். இதுதான் இங்குள்ள முக்கியமான பிரச்சினை. இந்த ஒப்பந்தம் நடைமுறையாவது இப்போது சீனா உள்ளிட்ட இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகளின் கைகைளில்தான் உள்ளன.

**கே: சர்வதேச நாணய நிதியத்துடனான அதிகாரிகள் மட்ட இணக்கப்பாடு ஏற்பட்ட கையோடு, இடைக்கால வரவு- செலவுத்திட்டம் இலங்கையில் ரணில் அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டிருக்கின்றது. இந்த இடைக்கால வரவு- செலவுத்திட்டம் பற்றிய உங்கள் பார்வை என்ன?**

ப: வரவு- செலவுத்திட்டம் என்று வருகின்றபோது அது மக்களுக்குச் சாதகமான அம்சங்களோடு முன்வைக்கப்படுவதற்கான சாத்தியம் தற்போதைக்கு இல்லை. இதைத்தான் இந்த இடைக்கால வரவு-செலவுத்திட்டத்திலும் பார்க்க கூடியதாகவுள்ளது. ஏற்கனவே அத்தியாவசியப் பொருள்கள் எல்லாவற்றினதும் விலைகள் அதிகரித்துள்ளன. பல மானியங்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன அல்லது இடைநிறுத்தப் பட்டுள்ளன. குறிப்பாக பொதுமக்களை அதிகம் பாதிக்கக் கூடிய உணவுப்பொருள்கள், எரிபொருள், எரிவாயு , மின்சாரம், நீர் போன்றவற்றின் விலைகளும் இப்போது சந்தை விலைக்கு அதிகரிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை இவை சந்தை விலையா? இல்லையா ? என்ற வாதப்பிரதிவாதங்களும் உண்டு. ஏனென்றால் அந்த விலைகள் உண்மையிலே உற்பத்திச் செலவு, இலாபம் போன்றவற்றை அடிப்படையாக கொண்டு நிர்ணயிக்கப்பட்ட விலைகளா அல்லது சந்தையில் கொள்ளை இலாபம் அடிக்கவேண்டும் என்ற நோக்கில் நிர்ணயிக்கப்பட்ட விலைகளா என்றும் சந்தேகம் பலரிடம் உண்டு.

ஆனால் தற்போது இருக்கின்ற விலைகள், கட்டணங்கள் என்பவற்றுக்கு முன்னால் சாதாரண பொதுமக்களால் தாக்குபிடிக்க முடியாது. அவ்வாறான ஒரு சூழலிலில்தான் இந்த இடைக்கால வரவு - செலவுத்திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த வரவு-செலவுத்திட்டத்தில் சாதாரணமக்களுக்கு சாதகமான விடயமாகச் சொல்லப்படுவது வறியநிலையில் இருக்கும் 61 ஆயிரம் குடும்பங்களுக்கு பத்து ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதான முன்மொழிவுதான்.ஒரு குடும்பத்தில் நான்கு பேர் இருப்பார்கள் என்று வைத்துக்கொண்டால் கூட, இந்த நாட்டில் வறிய நிலையில் வெறும் 2 இலட்சத்து நாற்பதாயிரம் பேர்தான் இருக்கின்றார்களா என்ற கேள்வியும் எழுகின்றது.

உண்மையில் அதைவிட மத்தியதர வகுப்பிலே இருந்தவர்கள் பலர் இன்று வறுமையின் பிடிக்குள் வீழ்ந்திருக்கின்றார்கள். இந்த விலை அதிகரிப்புக்களை தாங்க முடியாதநிலையே அதற்கு முக்கியமான காரணம் . இந்த இடைக்கால வரவு- செலவுத்திட்டத்தில், யானை பசிக்கு சோளப் பொரி போல ஆங்காங்கே சிற்சில சாதக அம்சங்களைக் கொண்டிருந்தாலும் பாதக அம்சங்களே அதிகம்.

குறிப்பாக வரிகள் அதிகரிக்கப்பட்டமை பொதுமக்களை பாதிக்கக்கூடிய விடயம். அதிலும் வற்வரி 15 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இது 2019 இல் இருந்த வரிவீதம்தான். ஆனால் அப்போது இருந்த விலை மட்டங்கள், வருமான மட்டங்களுடன் ஒப்பீடு செய்கின்றபோது மக்களின் வருமான மட்டங்களில் எவ்வித அதிகரிப்பும் ஏற்படாத நிலையில், வருமானங்கள் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில், இந்த வரி அதிகரிப்பானது பொருள்கள் மற்றும் சேவைகள் மீது மீண்டும் ஒரு கணிசமான விலை அதிகரிப்பை ஏற்படுத்தப்போகின்றது. தற்போது முன்வைக்கப்பட்ட இடைக்கால வரவு - செலவுத்திட்டம் அரசாங்கத்துக்கு வருமானத்தை திரட்டுவதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டுள்ளதே தவிர பொதுமக்களுக்கு சார்பானதாக இல்லை என்பது என்னுடைய அபிப்பிராயம்.

**கே: அரசாங்கத்தின் செலவினங்களைக் கட்டுப்படுத்தல் என்ற காரணத்துக்கான அரச சேவையில் இருந்து பணியாளர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துதல், அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்தல் போன்ற நிபந்தனைகளை சர்வதேச நாணய நிதியம் விதித்துள்ளது. அந்த விடயம் இடைக்கால பட்ஜெட்டிலும் எதிரொலித்துள்ளது. அவை அவசியமான நடவடிக்கைகளா?**

ப: ஆமாம். இலங்கையில் உள்ள மூன்று அரசதுறை நிறுவனங்கள் மிகப்பெரிய வெள்ளை யானைகளாக [illegible]விலான [illegible] சபை, இலங்கைப் பெற்றோலியக்கூட்டுத்தாபனம், ஸ்ரீலங்கா எயார் லைன்ஸ் ஆகிய மூன்று நிறுவனங்களுமே மிகப்பெரிய நட்டத்தில் இயங்கும் நிறுவனங்கள். இந்த நிறுவனங்களை கட்டாயமாக மறுசீரமைக்கவேண்டிய தேவை உள்ளது. உதாரணமாக ஸ்ரீலங்கா எயார் லைன்ஸை, எமிரேட்ஸ் நிறுவனத்துக்கு வழங்கியிருந்தபோது இலாபகரமான விமான சேவையாக இருந்தது. இந்த நிறுவனங்களை நிச்சயம் இலாபகரமானதாக மாற்றமுடியும். அந்த நிறுவனங்களில் தற்போதிருக்கும் வினைத்திறனின்மை, அந்த நிறுவனங்கள் அரசியல் மயப்படுத்தப்பட்டமை போன்ற இன்னோரன்ன காரணங்களால்தான் இந்த நிறுவனங்கள் நட்டத்தில் இயங்குகின்றன. இலங்கை மின்சாரசபை, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் என்பவை பொருள்கள், சேவைகளை சந்தை விலைக்கே விற்கின்றன. ஆகவே தற்போது நட்டமடைவதற்கு எந்தத் தேவையும் சந்தை அடிப்படையில் இல்லை. அப்படியிருந்தும் நட்டம் ஏற்படுவதற்கு காரணம் அந்த நிறுவனங்களில் காணப்படும் ஊழலும், அரசியல் தலையீடுகளும் , வினைத்திறனின்மையும் என்று உறுதியாகச் சொல்லலாம்.

ஆகவே இந்த நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவதோ அல்லது முகாமையினை தனியார் மயப்படுத்துவதோ காலத்தின் தேவையே. இன்னுமோர் விடயமும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. இரண்டு அரச வங்கிகளின் குறிப்பிட்டளவு பங்குகளை அந்த ஊழியர்களுக்கே விற்கின்ற முறைமையே அது. அரசாங்கத்தின் நிதி அதிகளவில் வீண்விரயமாகின்ற இடங்களை அடையாளப்படுத்தி இருக்கின்றார்கள். இவ்வாறு அடையாளப்படுத்திய இடங்களிலே உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமாக இருந்தால் ஓரளவுக்கு நட்டத்தைக் குறைக்கக்கூடியதாக இருக்கும். ஆனாலும் அவ்வாறு குறைத்தாலும் கூட இருக்கின்ற மிகமுக்கியமான பிரச்சினை என்னவென்றால் அரச பணியாளர்களின் அதீத எண்ணிக்கை.

இலங்கை போன்ற சிறிய நாட்டுக்கு 15 இலட்சம் அரச பணியாளர்கள் தேவைதானா என்ற ஒரு கேள்வி இயல்பாகவே எழுகின்றது. இலங்கையில் வேலைவாய்ப்புக்களை வழங்குகின்ற மிகமுக்கியமான துறையாக அரசதுறையே இருக்கின்றது. ஆகவே அரசதுறை வேலைவாய்ப்புக்களை உருவாக்க வேண்டும் என்பதற்காக 2005 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ச்சியாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவந்தது. 2005 இல் அரச பணியாளர்களின் எண்ணிக்கை வெறும் 5 இலட்சம் மாத்திரம்தான். ஆனால் தற்போது அது 15 இலட்சம் வரை அதிகரித்துவிட்டது. அந்த 5 இலட்சம் பணியாளர்களை கொண்டும் அப்போது அரசசேவை சீராக இடம்பெற்றதுதான். தற்போது 15 இலட்சம் ஊழியர்களை கொண்டும் அதே அரச சேவைதான் நடக்கின்றது. ஆகவே அரச பணியாளர்களின் அளவு மிகஉயர்வானதாகவே இங்கு இருக்கின்றது. இங்கு ஓர் அரச பணி என்பதே சமூக அந்தஸ்து அதிகம் கொண்டதாக இருக்கின்றது. தனியார் துறையில் பணியாற்றுபவர்கள் கூட அரச பணிக்கு வருகின்றனர்.ஆகவே மிதமிஞ்சிய பணித் தொகுதியைக் குறைக்க வேண்டியதும் காலத்தின் தேவைதான். ஆனால் அதனைச் செய்வதற்குரிய சரியான வழிவகைகளை அரசு மேற்கொண்டுள்ளதாகத் தெரியவில்லை. தற்போது ஓய்வு வயது எல்லையை குறைத்துள்ளார்கள். அதேபோன்று சுயமாக விலகுவதற்கும் இடமளிக்க இருப்பதாகத் தெரியவருகின்றது. அதுதவிரவும் அரச பணியாளர்களுக்கு 5 வருடம் வெளிநாடு சென்று உழைக்கவும் விடுமுறையை வழங்கவும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. நீண்டகாலத்துக்கு அரசதுறைகளுக்கு பணியாளர்களை உள்ளீர்ப்பதையும் குறைக்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அரச பணியாளர்களை குறைப்பது தேவையும் யதார்த்தபூர்வமானதும்தான். ஆனால் அதைவிட முக்கியமான இன்னொரு விடயம், இலங்கையிலே மூன்று விதமான கட்டங்களிலே அரசு என்ற தன்மை உள்ளது. மத்திய அரசு, மாகாண அரசு, உள்ளூராட்சி சபைகள் என இந்த மூன்றிலும் உள்ள மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கையும் மிக அதிகமாகவே காணப்படுகின்றது.

(07 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரணில் வீசிய கொழுக்கி?

நிலாந்தன்

கனடாவில் உள்ள நண்பர் ஒருவர் கேட்டார்…. "தாயகத்தில் உள்ள தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கொண்ட மூன்று கட்சிகளையே எங்களால் ஒருங்கிணைக்க முடியவில்லை. இந்நிலையில், புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகளையும் நபர்களையும் ஒன்றிணைத்து தாயகத்தில் முதலீடு செய்வது நடக்கக்கூடிய காரியமா ?"என்று. ரணில் விக்கிரம்சிங்க புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் உள்ள சில அமைப்புக்கள் மற்றும் நபர்களின் மீது தடையை நீக்கியது தொடர்பில் நான் எழுதிய ஒரு கட்டுரை தொடர்பாகவே அவர் அவ்வாறு கேட்டிருந்தார். நியாயமான கேள்வி.தாயகத்தில் ஒரு சிறிய நிலப்பரப்புக்குள், மிகச்சிறிய சனத்தொகையின் மத்தியில் இயங்கிக் கொண்டிருக்கும் மூன்று கட்சிகளை ஒன்றாக்க முடியவில்லை. ஆனால் புலம்பெயர்ந்த தமிழ்ப் பரப்பு எனப்படுவது உலகம் முழுவதும் பரந்து விரிந்து சிதறிக்கிடக்கிறது. அது வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு மொழிகளைப் பேசுகிறது.வெவ்வேறு பண்பாடுகளில் ,வெவ்வேறு பொருளாதாரக் கட்டமைப்புகளில், வெவ்வேறு நிலையான பொருளாதார நலன்களோடு காணப்படுகிறது.தாயகத்தை நோக்கிய பிரிவேக்கம் என்ற ஒன்றைத்தவிர வேறு எதுவும் அந்த அமைப்புகளுக்கிடையில் இப்பொழுது பொதுவானதாக இல்லை.கடந்த 13ஆண்டுகளாக ஐக்கியப்பட முடியாத, ஐக்கியப்படுத்த யாருமில்லாத ஒரு புலம்பெயர் சமூகமாக தமிழ்ச் சமூகம் காணப்படுகிறது.

கடந்த 13 ஆண்டுகளில் ஐ.நா.வை நோக்கியும், உலகப்பொது மன்றங்களை நோக்கியும், நீதிக்காக அயராது உழைத்த ஒரு சமூகமாகவும்,இலங்கை அரசாங்கத்துக்கு தொடர்ச்சியாக நெருக்கடியைக் கொடுத்த ஒரு சமூகமாகவும் அது காணப்படுகிறது. தாயகத்தில் இருக்கும் கட்சிகளுக்கும், செயற்பாட்டாளர்களுக்கும் , தனிநபர்களுக்கும் நிதியை அள்ளி வழங்கிய காசு காய்க்கும் மரமாகவும் அது காணப்படுகிறது. உலகின் மிகவும் கவர்ச்சியான , செயல்திறன்மிக்க ஒரு புலம்பெயர் சமூகமாக அது தன்னை வெளிக்காட்டியிருக்கிறது. ஆனாலும் மிகவும் சிதறிப்போன,கூட்டுச் செயற்பாடு இல்லாத ஒரு புலம்பெயர் சமூகமாகவும் அது தன்னை நிரூபித்திருக்கிறது. கடந்த 13 ஆண்டுகளாக ஜெனிவாவில் பொருத்தமான வெற்றிகளைப் பெறத் தவறியதற்கு அதுவும் ஒரு காரணமா?

தாயகத்தில் இயங்கும் கட்சிகளுக்கும், செயற்பாட்டாளர்களுக்கும் நிதி உதவி புரியும் அதேநேரம் அந்த நிதி உதவிதான் கட்சிகளையும் , செயற்பாட்டாளர்களையும் பிரித்து வைத்திருக்கிறது என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அந்த நிதி உதவிகளால் தாயகத்தில் ஐக்கியத்தை ஏற்படுத்த முடியவில்லை. அல்லது மறுவளமாகச் சொன்னால் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் எவ்வளவுதான் காசு கொடுத்தாலும் அந்தக் காசினால் தாயகத்தில் கட்சிகளுக்கும் ,செயற்பாட்டாளர்களுக்கும் இடையே ஐக்கியத்தை ஏற்படுத்த முடியவில்லை. இதை இன்னும் கூர்மையாகச் சொன்னால் அவ்வாறு ஐக்கியம் ஏற்படாமைக்கு மேற்படி தனித்தனியான தூர இயக்கி-ரிமோட் கண்ட்ரோல்உ-தவியும் ஒரு காரணம் எனலாம். இவ்வாறான கூட்டுச் செயற்பாடற்ற ஒரு புலம்பெயர்ந்த சமூகத்தை நோக்கி இலங்கை அரசாங்கம் கொழுக்கிகளை வீசியிருக்கிறது என்பதே உண்மை. தங்களுக்கிடையே ஒற்றுமைப்படாத ஒரு சமூகம் இந்த கொழுக்கிகளில் சிக்கி உதிரிகளாகத் தன் வலையில் வந்து விழும் என்று அரசாங்கம் சிந்திக்கின்றது. அவ்வாறு சிந்திக்கத்தேவையான கொழுத்த அனுபவம் ரணில் விக்கிரமசிங்கவுக்கு உண்டு. கடந்த 2015இல் ஆட்சி மாற்றத்தின் பின் அவர் அதைச் செய்தார். அப்பொழுதும் இதே அமைப்புகள்மீதும்,நபர்கள் மீதும் தடைகள் நீக்கப்பட்டன.இப்பொழுது இருப்பதைப்போல பொருளாதார நெருக்கடி என்ற விவகாரம் அப்பொழுது இருக்கவில்லை. ஆனால் ஜெனிவாவைக் கையாள்வது, புலம்பெயர்ந்த தமிழ்ச்சமூகத்தின் பலத்தை உடைப்பது போன்ற நிகழ்ச்சிநிரல்கள் இருந்தன.அந்த நிகழ்ச்சிநிரலை முன்வைத்து குறிப்பிடத்தக்களவுக்கு ரணில் விக்கிரம சிங்கவின் அரசாங்கம் முன்நகரக் கூடியதாகவும் இருந்தது.

குறிப்பாக ஐ.நா.வில் நிலைமாறு கால நீதியை நோக்கி புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தின் ஒரு பகுதியை ஈர்த்தெடுப்பதில் அரசாங்கம் குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேறியிருந்தது.தாயகத்தில் கூட்டமைப்பும் அப்பொழுது அந்த நிகழ்ச்சி நிரலுக்கு உட்பட்டு, நிலை மாறுகால நீதியை ஆதரித்தது. இதனால் கூட்டமைப்பு மற்றும் தடை நீக்கப்பட்ட புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் போன்றன இணைந்து நிலைமாறு கால நீதிக்குரிய நிகழ்ச்சிநிரலைப் பலப்படுத்தின.இதுவிடயத்தில் தடைநீக்கப்பட்ட தமிழ் புலம்பெயர் அமைப்புகள் சில பெருமளவுக்கு தாம் வாழும் நாடுகளில் உள்ள அரசாங்கங்களின் நிலைமாறு கால நீதிக்கான நிகழ்ச்சி நிரலை அதிகபட்சம் முன்னெடுத்தன.அக்காலகட்டத்தில் புலம்பெயர்ந்த தமிழ்அமைப்புகள் நிலைமாறு கால நீதியா ?அல்லது பரிகார ரீதியா ? என்று ஜெனிவாவில்,தங்களுக்கிடையே பிரிந்துநிற்கும் ஒரு நிலை தோற்றுவிக்கப்பட்டது.அல்லது புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகங்கள் வாழும் நாடுகளில் உள்ள அரசாங்கங்கள் ஐ.நா.வில் முன்னெடுத்த தமிழர் தொடர்பான நிகழ்ச்சிநிரலைப் பெருமளவுக்குப் பிரதிபலித்த தமிழ் அமைப்புகள்,அல்லது பிரதிபலிக்க மறுத்த தமிழ்அமைப்புகள் என்று புலம்பெயர்ந்த தமிழ் சமூகத்தின் மத்தியில் பல்வேறு நிலைப்பாடுகள் தோற்றுவிக்கப்பட்டன.

இப்பொழுது மறுபடியும் ரணில் ஆட்சிக்கு வந்திருக்கிறார். அவர் தன்னுடைய நல்லாட்சி என்று அழைக்கப்பட்ட ஆட்சிக் காலத்தில் முன்னெடுத்த அதே நிகழ்ச்சி நிரலை அதாவது தமிழ் புலம்பெயர்ந்த அமைப்புகளின் உதவியோடு ஜெனிவாவைக் கையாள்வது என்ற நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கக்கூடும். அதைவிட மேலதிகமாக நாட்டில் இப்பொழுது நிலவும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதற்கு புலம்பெயர் தமிழ் முதலீடுகள் என்ற நோக்கு நிலையில் இருந்தும் செயற்பட முடியும். இப்பொழுது வந்திருக்கும் தடைநீக்கம் ரணில் விக்ரமசிங்கவின் முன்னெடுப்பு மட்டுமல்ல.அது ஏற்கனவே கோத்தாபயவின் காலத்தில் தொடங்கப்பட்டது.ரணில் அதை முடித்து வைத்திருக்கிறார்.கோத்தாவும் ரணிலைப்போல முன்கண்ட இரண்டு நிகழ்ச்சி நிரல்களை மனதில் வைத்திருந்தார்.ஒன்று ஜெனிவாவைக் கையாள்வது, இரண்டு பொருளாதார நெருக்கடியைக் கையாள்வது.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை ஜெனிவாவைக் கையாள்வது என்பது, புலம்பெயர் தமிழ்ச்சமூகத்தை பிரித்துக் கையாள்வதன் மூலம், புலம்பெயர்ந்த தமிழ்ச்சமூகம் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக அனைத்துலக அரங்கில் முன்னெடுத்து வரும் நீதிக்கான கோரிக்கைகளை பலவீனப்படுத்துவது தான். தடை நீக்கப்பட்டால் ஒரு தொகுதி புலம்பெயர்ந்த தமிழர்கள் நாட்டுக்குள் வந்து போகும் நிலைமை திறக்கப்படும். அவர்கள் தாயக கள யதார்த்தத்தோடு நெருங்கி உறவாடும் ஒரு நிலைமை தோன்றும். இவ்வாறு தாயகத்துக்கு வந்து போகக்கூடிய வாய்ப்புக்கள் அதிகரிக்கும் பொழுது, அந்த வாய்ப்புகளை எப்படிப் பாதுகாப்பது என்றுதான் ஒரு தொகுதி புலம்பெயர்ந்த தமிழர்கள் சிந்திப்பார்கள்.தாயகத்துக்கு வந்து போகும் நிலைமைகளைப் பாதுகாப்பது என்பது அதன் தக்க பூர்வ விளைவாக தாயகத்துக்கு வெளியே அரசாங்கத்துக்கு எதிராக செயற்படும் தீவிரத்தை குறைப்பதுதான், அரசாங்கத்துக்கு எதிராக நீதியைக் கோரும் போராட்டத்தின் தீவிரத்தை குறைப்பதுதான்.எனவே தடை நீக்கத்தின்மூலம் வெளியரங்கில் தனக்கு எதிராகச் செயற்படக்கூடிய தமிழ் அமைப்புகள் மற்றும் நபர்களின் தீவிரத்தை அரசாங்கம் குறைக்க முடியும். இது கடந்த நல்லாட்சி என்று அழைக்கப்பட்ட ஆட்சிக்காலத்திலும் அவதானிக்கப்பட்டது.

ஏன் கடந்த சில ஆண்டுகளாகவும் அதைக் காண முடிகிறது. குறிப்பாக கடந்த ஆண்டு ஜெனிவாவில் ஒப்பீட்டுளவில் குறைந்தளவு பக்க நிகழ்வுகளே இடம்பெற்றதாக ஒரு செயற்பாட்டாளர் தெரிவித்தார்.அதற்குக் காரணம் பக்க நிகழ்வுகளுக்கு நிதியுதவி புரியும் ஒரு தமிழ்ப் பெருவணிக நிறுவனம் அந்த நிதி உதவியைக் குறைத்தமைதான் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். ஏனெனில் அந்த பெருவணிக நிறுவனம் தாயகத்தில் முதலீடுகளைச் செய்யத் தொடங்கிவிட்டது.குறிப்பாக தென்னிலங்கையில் வங்குரோத்தான ஒரு சிங்களக் கொம்பனியை அது விலைக்கு வாங்கியிருக்கிறது.தாயகத்தில் தனது முதலீடுகளை பத்திரமாக முன்னெடுப்பதற்கு அந்த நிறுவனம் அரசாங்கத்துக்கு எதிரான அதன் போக்கில் தளர்வுகளை ஏற்படுத்த வேண்டியுள்ளது.அதன் விளைவாகத்தான் கடந்த ஆண்டு பக்க நிகழ்வுகளில் அந்த நிறுவனத்தின் நிதிப் பங்களிப்பு குறைவாக காணப்பட்டது என்று மேற்படி செயற்பாட்டாளர் தெரிவித்தார்.


இதைத்தான் அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. தடை நீக்கப்பட்ட அமைப்புகளும் நபர்களும் புலம்பெயர்ந்த தமிழ்ப்பரப்பில் அரசாங்கத்துக்கு எதிராக செயற்படும் தீவிரம் குறையும். இது முதலாவது இலக்கு. இரண்டாவது இலக்கு முதலீடு.

கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தை முன்வைத்து உரையாற்றிய பொழுது ரணில் விக்கிரமசிங்க "புலம்பெயர் நிதியம்" ஒன்றை உருவாக்குவது தொடர்பாக யோசனையை முன் வைத்துள்ளார்.வெளிநாடுகளில் வாழ்கின்ற இலங்கையர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதற்கு ஒருங்கிணைப்பு மையமாக தொழிற்படுகின்ற வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுக்கான அலுவலகமொன்றினை ஸ்தாபிக்கப் போவதாக அவர் கூறியுள்ளார். அதாவது புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்கள் என்ற பொதுவான ஒரு பதத்தினை அவர் பயன்படுத்துகின்றார்.தமிழ் முதலீடு என்ற வார்த்தையை அவர் பயன்படுத்தவில்லை. ஆனால் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் தாயகத்தில் முதலீடு செய்யும்பொழுது அதன் இனரீதியான பரிமாணத்தை அகற்றிவிட்டு வெறும் முதலீடாகச் செய்வது சரியா? அல்லது ஒரு தேசமாக சிந்தித்து தாயகத்தில் தமிழ்த் தேசத்தைக் கட்டியெழுப்புவது என்ற அடிப்படையில் முதலீடு செய்வது சரியா?

புலம்பெயர்ந்து வாழும் தமிழ்மக்கள் உதிரிகளாக வந்து தாயகத்தில் முதலீடு செய்தால் என்ன நடக்கும் ?அது வழமையான திறந்த சந்தைப் பொருளாதாரக் கட்டமைப்புக்குள் நிகழும் ஒரு முதலீடு என்ற பொருளாதார பரிமாணத்தைத்தான் அதிகமாக கொண்டிருக்கும்.மாறாக அதற்கு தாயகம் நோக்கிய தமிழ்முதலீடு என்ற இனரீதியிலான பரிமாணமும், பண்பாட்டு ரீதியிலான பரிமாணமும் அல்லது தமிழ்த்தேசிய நோக்கு நிலையிலான பரிமாணமும் குறைவாகவே இருக்கும்.

புலம்பெயர்ந்த தமிழ் முதலீடுகளுக்கு எப்பொழுது தமிழ்த் தேசிய பரிமாணம் அதிகரிக்கிறது என்றால் புலம்பெயர்ந்த தமிழ் முதலீட்டாளர்கள் ஒரு தேசமாகச் சிந்தித்து முடிவெடுக்கும் போதுதான். ஒரு தேசமாக சிந்திப்பது என்றால் என்ன? ஒரு மிகப்பெரிய மக்கள்திரளாகச் சிந்திப்பதுதான். தாயகத்துக்கு வெளியே அவ்வாறு சிந்திப்பது எப்படி? தாயகத்தில் தமிழ்மக்களை ஒரு பெரிய தேசமாகக் கட்டியெழுப்புவது என்ற அடிப்படையில் முதலிடுவதுதான்.அதாவது தாயகத்தில் தேசநிர்மாணத்தின் ஒரு பகுதியாக முதலீடு திட்டமிடப்பட வேண்டும். மாறாக தனித்தனி வள்ளல்களின் உதவிகளோ,அல்லது தனித்தனி முதலாளிகளின் உதிரியான முதலீடுகளோ, தாயகத்தை கட்டியெழுப்புவது என்ற சமூகப்பொருளாதார அரசியல் பரிமாணத்தை கொண்டிருக்கப் போவதில்லை.

எனவே இப்பொழுது இக்கட்டுரை தொடங்கிய இடத்துக்கே வரலாம். எனது நண்பர் கேட்டது போல , புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் முதலீட்டை ஒரு கூட்டுச் செயற்பாடாக செய்வதற்கான வாய்ப்புகள் அநேகமாக இல்லை. புலம்பெயர்ந்த தமிழ்ச்சமூகம் ஒரு தேசமாக சிந்தித்து முதலீடு செய்யப் போவதில்லை என்ற எதிர்பார்ப்பில்தான் அரசாங்கம் இந்தக் கொழுக்கியை வீசியிருக்கிறது. புலம்பெயர்ந்த தமிழ் முதலாளிகள் உதிரிகளாக நாட்டுக்குள் முதலீடு செய்ய வேண்டும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது. அதாவது ரணில் விக்கிரமசிங்க புலம்பெயர்ந்த தமிழர்களை நோக்கி ஒரு பொறியை வைத்திருக்கிறார் என்று பொருள். அந்தப் பொறிக்குள் தமிழ் நிதி உதிரியாக வந்து சிக்குமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஐ.எம்.எப். ஒப்பந்தமும் சீனாவும்

○ அ.நிக்ஸன்

இந்தியா ஆறு மாதங்களுக்குள். இலங்கைக்கு வழங்கிய சுமார் நான்கு பில்லியன் அமெரிக்க டொலரையும் விட அரைவாசித் தொகையை மாத்திரமே ஐ.எம்.எப் எனப்படும் சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கவிருக்கின்றது. அதுவும் இலங்கை அரசாங்கம் உறுதியளித்தபடி தனது பொருளாதார சீர்திருத்தங்களை தொடர்ந்தால் மாத்திரமே தீர்மானிக்கப்பட்ட நிதியை வழங்க முடியுமென ஐ.எம்.எப் மூத்த அதிகாரி பீற்றர் ப்ரேயர் (Peter Breuer) கூறுகிறார். இது நீண்ட பாதையின் ஓர் ஆரம்பம் மாத்திரமே எனவும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். ஆகவே 2.9 பில்லியன் டொலரை வழங்குவதற்கான இணக்கப்பாடு ஒன்றைச் செய்தாலும், மெதுவான எச்சரிக்கை ஒன்றையும் ஐ.எம்.எப் இலங்கைக்கு விட்டுச் சென்றிருக்கின்றது. இதனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்துள்ள வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்கள் குறைவடைந்துள்ளன.

அதுவும் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்க, பிரதான எதிர்க்கட்சிகள் இணங்காத ஒரு சூழலில், ஐ.எம்.எப். பரிந்துரைகள் மற்றும் அதனூடான வரவு-செலவுத்திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்த ரணில் விக்கிரமசிங்க பெரும் சவால்களை எதிர்கொள்ள நேரிடும் .

## கட்சி அரசியலா? தேசத்தைக் கட்டியெழுப்புதலா?

## சிங்களக் கட்சிகள் தீர்மானிக்க வேண்டிய இறுதிச் சந்தர்ப்பம்

ஐ.எம்.எப். மற்றும் இலங்கை அதிகாரிகள் 2.9 பில்லியன் அமெரிக்க டொலரின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் (Extended Fund Facility EFF) கீழ் 48 மாத ஏற்பாட்டுடன் இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகளை அதிகரிப்பதற்கான அதிகாரிகள் மட்டத்திலான உடன்பாட்டை எட்டியிருந்தாலும், இந்த நிதி கிடைப்பதற்கு மூன்று அல்லது ஆறு மாதங்கள் வரை செல்லும்.

இலங்கையுடனான நாணய நிதியத்தின் கடந்தகாலச் செயற்பாடுகளை நோக்கும்போது நிதி கிடைக்கக்கூடிய கால எல்லையை நிர்ணயிக்கக்கூடியதாக உள்ளது.

EFF எனப்படும் வசதியின் கீழ் திட்டங்களை ஏற்பாடு செய்தல், நிதி ஸ்திரத்தன்மையைப் பாதுகாத்தல், ஊழல் பாதிப்புகளைக் குறைத்தல் மற்றும் இலங்கையின் வளர்ச்சித் திறன் தன்மைகளை ஊக்குவித்தல் போன்ற பரிந்துரைகள் மேற்படி ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளன. இதற்கு இலங்கை அதிகாரிகள் உடன்பட்டிருப்பதாகவும் ஐ.எம்.எப். கூறுகின்றது

இலங்கையின் உத்தியோகபூர்வ கடனாளர்களிடமிருந்து நிதியைப் மீளக் கையளிப்பதற்கான உறுதிமொழிகளைப் பெறுதல் மற்றும் ஒரு கூட்டு முயற்சியை அடைவதற்கான நம்பிக்கையின் அடிப்படையில், தனியார் கடனாளிகளுடன் ஒப்பந்தம், இலங்கையின் கடனாளிகளிடமிருந்து கடன் நிவாரணம் மற்றும் பலதரப்பு பங்காளிகளிடமிருந்து கூடுதல் நிதியுதவி போன்ற விவகாரங்களில் இலங்கை கடுமையான நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

இது குறித்தும் ஐ.எம்.எப் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. போதுமான வெளிப்புற உதவிகள் மற்றும் நீடிக்க முடியாத பொதுக் கடன் மாறும் தன்மை காரணமாக இலங்கைக்குப் பாதிப்புகள் அதிகரித்துள்ளன.

ஏப்ரல் மாதத்தில் ஏற்பட்ட கடுமையான பொருளாதார நெருக்கடியால் இலங்கையின் பொருளாதாரம் 8.7 சதவீதம் சுருங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மற்றும் பணவீக்கம் சமீபத்தில் 60 சதவீதத்தை தாண்டியது. ஏழைகள் மற்றும் நலிவடைந்த மக்கள் மத்தியில் பணவீக்கம் பல தாக்கங்களைச் செலுத்தியிருந்தாகச் சுட்டிக்காட்டியுள்ள ஐ.எம்.எப், தமது ஒப்பந்தத்தின் மூலம் பொருளாதார மீட்சிக்கான சாதகமான சூழல் உருவாகும் என்ற நம்பிக்கையையும் வெளிப்படுத்தியுள்ளது. ஆனால் கடந்த ஆறு மாதங்களுக்குள் இந்தியா வழங்கிய நான்கு பில்லியன் அமெரிக்க டொலர், அதிகளவில் எரிபொருள் இறக்குமதிக்கே பயன்படுத்தப்பட்டது. நான்கு பில்லியன் டொலரை இந்தியா வழங்கியிருந்தும், அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் வேறு அவசியமான பொருள்கள் எதனையும் இறக்குமதி செய்வதற்கு இலங்கையிடம் டொலர் இருக்கவில்லை.

இதன் பின்னணியில் ஐ.எம்.எப். வழங்கியுள்ள 2.9 பில்லியன் டொலர் மூலம், ஐ.எம்.எப். தனது அறிக்கையில் கூறியுள்ள பொருளாதார மீட்சியை எப்படி எட்ட முடியும் என்ற கேள்விகள் இயல்பாகவே எழுகின்றன.

**ஐ.எம்.எப். திட்டத்தின் முக்கியமான கூறுகள் வருமாறு -**

- நிதி ஒருங்கிணைப்பை ஆதரிக்க நிதி வருவாயை உயர்த்துதல்.
- உலகின் மிகக் குறைந்த வருவாய் மட்டங்களில் ஒன்றிலிருந்து தொடங்கி, இந்தத் திட்டம் பெரிய வரிச் சீர்திருத்தங்களைச் செயற்படுத்தும். இந்தச் சீர்திருத்தங்களில் தனிநபர் வருமான வரியை மேலும் முற்போக்கானதாக மாற்றுவது மற்றும் பெருநிறுவன வருமான வரி மற்றும் வற் (VAT) ஆகியவற்றுக்கான வரித்தளத்தை விரிவுபடுத்துவது ஆகியவை அடங்கும்.
- 2024 ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.3 சதவீத முதன்மை உபரியை எட்டுவதை இந்த திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது.
- அரசுக்கு சொந்தமான நிறுவனங்களில் இருந்து எழும் நிதி அபாயங்களைக் குறைக்க எரிபொருள் மற்றும் மின்சாரத்துக்கான செலவு-மீட்பு அடிப்படையிலான விலையை அறிமுகப்படுத்துதல். அதிகாரிகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட கணிசமான வருவாய் நடவடிக்கைகள் மற்றும் எரிசக்தி விலை சீர்திருத்தங்கள் வரவேற்கப்பட்டுள்ளன.
- சமூக செலவினங்களை உயர்த்துவதன் மூலம் ஏழைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்கள் மீதான தற்போதைய நெருக்கடியின் தாக்கத்தைத் தணித்தல் மற்றும் சமூக பாதுகாப்பு வலையமைப்புத் திட்டங்களையும் பொருளாதார இலக்குகளையும் மேம்படுத்துதல்.
- தரவு - உந்துதல் பணவியல் கொள்கை நடவடிக்கை, நிதி ஒருங்கிணைப்பு, பண நிதியளிப்பை படிப்படியாக நீக்குதல் மற்றும் நெகிழ்வான பணவீக்க இலக்கு. இலங்கை மத்திய வங்கியின் அரசியல் தலையீடுகள் அற்ற சுயாட்சித் தன்மை,புதிய மூலோபாயம் ஆகியவற்றின் மூலம் விலை ஸ்திரத்தன்மை மீளமைக்கப்படுவதை ஐ.எம்.எப். எதிர்பார்க்கிறது.
- இந்தத் திட்டத்தின் கீழ் விரிவான கொள்கைத் தொகுப்பால் ஆதரிக்கப்படும் சந்தை நிர்ணயிக்கப்பட்ட மற்றும் நெகிழ்வான மாற்றுவீதத்தை மீட்டெடுப்பதன் மூலம் வெளிநாட்டு இருப்புக்களை மீண்டும் கட்டியெழுப்புதல்.
- ஆரோக்கியமான மற்றும் போதுமான மூலதன மயமாக்கப்பட்ட அரச வங்கியமைப்பை உறுதிசெய்வதன் மூலம் நிதி ஸ்திரத்தன்மையைப் பாதுகாத்தல், மற்றும் திருத்தப்பட்ட வங்கிச் சட்டத்துடன் நிதித்துறைப் பாதுகாப்பு வலையமைப்பு மற்றும் ஒழுங்குமுறை தரநிலைகளை மேம்படுத்துதல்.
- நிதி வெளிப்படைத்தன்மை மற்றும் பொது நிதி நிர்வாகத்தை மேம்படுத்துவதன் மூலம் ஊழல் பாதிப்புகளை குறைத்தல், வலுவான ஊழலுக்கு எதிரான சட்டக் கட்டமைப்பை அறிமுகப்படுத்துதல் மற்றும் ஐ.எம்.எப். வழங்கும் தொழில்நுட்ப உதவியால் பலவீனமான திட்டங்களைக் கண்டறிதல் ஆகியவை ஐ.எம்.எப். எனப்படும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதான எதிர்பார்ப்புகள்.

ஆனால் இவற்றை முழுமையாக செயற்படுத்தக்கூடிய மனோநிலை இலங்கை அதிகாரிகள் மற்றும் அரசியல் தலைவர்களிடம் இருப்பதாகக் கூற முடியாது. ஏனெனில் ஐ.எம்.எப்பிடம் இருந்து ஆகக் குறைந்தது நான்கு பில்லியன் டொலரை இலங்கை எதிர்பார்த்தது. வேறு வகையான திட்டங்களுக்குரிய ஒத்துழைப்புகள் இலகுக் கடன், நன்கொடை போன்றவற்றையும் இலங்கை ஐ.எம்.எப்பிடம் இருந்து எதிர்பார்த்திருந்தது.


கொழும்பில் நடத்தப்பட்ட பேச்சுக்களில் இந்த விடயங்களை இலங்கை அதிகாரிகள் பகிரங்கமாக ஐ.எம்.எப். அதிகாரிகளிடம் வெளிக்காட்டியிருக்கின்றனர். ஆனால் ஐ.எம்.எப். அதிகாரிகள் அதற்கு உடன்படவில்லை. மேற்படி ஒப்பந்தத்தில் முன்வைக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளைச் செயற்படுத்தி நம்பிக்கையை உருவாக்கினால் மாத்திரமே நான்கு பில்லியன் டொலரும் .மேலதிகமாக குறைந்த வட்டி வீதத்தில் வருடத்துக்கு இரண்டு பில்லியன் குறைந்த மற்றும் நீண்டகாலக் கடன்களைப் பரிந்துரைக்க முடியும் எனவும் ஐ.எம்.எப். அதிகாரிகள் கூறியிருக்கின்றனர். இலங்கை அதிகாரிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களில் பரிந்துரைக்கப்பட்ட மற்றும் இலங்கை அதிகாரிகளினால் முன்வைக்கப்பட்டு மறுக்கப்பட்ட விடயங்கள் எதனையும் ஐ.எம்.எப். தனது அறிக்கையில் கூறவில்லை. ஊடகங்களுக்கும் வெளிப்படுத்தவில்லை. ஆனால் உள்ளகத் தகவல்களின் பிரகாரம், கூடுதல் நிதியைப் பெறுவதற்கு இலங்கை அதிகாரிகளினால் முன்வைக்கப்பட்ட முன்மொழிகள் பலவற்றை ஐ.எம்.எப். அதிகாரிகள் நிராகரித்துள்ளனர் என்றே அறிய முடிகின்றது. அதிகாரிகள் மட்டத்தில் மூன்று கட்டப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டிருக்கின்றன. இதில் கடன் மறுசீரமைப்புத் தான் மிக முக்கியமான பிரச்சினையாக இருந்தது. நிதி வழங்கும் ஐ.எம்.எப்பின் உறுப்பு நாடுகளுடன் இலங்கை பேச்சுக்களை நடத்தி முடித்துள்ளது. ஆனால் சீனாவுடன் மாத்திரமே இலங்கை இன்னமும் பேசி முடிக்கவில்லை.

இலங்கைக்கு வழங்கிய கடன்களை மீளப் பெறுவதிலும், கடன்களுக்குரிய வட்டி வீதங்களைக் குறைப்பதற்கும் சீனா விட்டுக் கொடுப்பதாக இல்லை. இதனால் ஐ.எம்.எப்பின் கடன் வழங்கும் திட்டத்திலும் இழுபறி ஏற்பட்டுள்ளது. இதனாலேயே 2.9 பில்லியன் டொலரை மாத்திரம் பரிந்துரைத்திருக்க முடிந்தாக ஐ.எம்.எப். வட்டாரங்கள் கூறுகின்றன. சர்வதேச நாடுகளிடம் இருந்து பெற்றுக் கொண்ட கடன்களை எவ்வாறு மீளத் திரும்பிச் செலுத்துவது என்ற விடயத்தில் இலங்கை தெளிவான நிலைப்பாட்டை எடுக்கும்போதுதான் கடன் மறுசீரமைப்புக்கான சிறப்பு ஏற்பாடுகள் இயல்பாகவே உருவாகும்.

புவிசார் அரசியல் நோக்கில் கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளும் இந்தியாவும் இலங்கையோடு இணக்கத்துக்கு வரக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. ஆனால் சீனா அவ்வாறு வரக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாகத் தெரியவில்லை. இதனால் எழப்போகும் புவிசார் அரசியல் விவகாரங்களையும், பொருளாதார நெருக்கடிகளையும் இலங்கை எவ்வாறு சமாளிக்கப் போகின்றது என்ற கேள்விகள் எழுகின்றன. அதுமாத்திரமல்ல ஐ.எம்.எப். முன்வைத்த திட்டங்களை எதிர்க்கட்சிகள் அரசியலாக்கி மக்கள் மத்தியில் தவறாகப் பிரசாரம் செய்தால், அதனால் எழக்கூடிய சவால்களையும் ரணில் விக்கிரமசிங்க சமாளிக்கமுடியாமல் திணறவேண்டியிருக்கும். ஆகவே கட்சி அரசியலைவிட தேசத்தைக் கட்டியெழுப்புதல் என்ற சிந்தனை சிங்கள அரசியல் தலைவர்களிடம் உருவாகாதவரை இந்த நெருக்கடி தொடரும். அதேவேளை, இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வு முன்வைக்கப்படாதவரை புலம்பெயர் தமிழ் அமைப்புகளிடம் இருந்தும் நிதியை எதிர்பார்க்கவே முடியாது. இனப்பிரச்சினைக்கான நிரந்தர அரசியல் தீர்வு பற்றி அதிகாரபூர்வமற்ற முறையிலும், இலங்கைத்தீவில் மீள் நல்லிணக்கம் என்பதை அதிகாரபூர்வமாகவும் ஐ.எம்.எப். முன்வைத்ததாகவும் உள்ளகத் தகவல் கூறுகின்றது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு, எதிர்க்கட்சிகளைக் கையாளுதல் ஆகியவற்றில் ரணில் தனக்குச் சாதகமான அரசியலிலேயே ஈடுபடுகின்றார் என்ற தொனியையும் ஐ.எம்.எப். அறிக்கை மறைபொருளாகச் சுட்டி நிற்கின்றதெனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விஜயனும் தமிழ்நாயும்




O கோகுலராகவன்

பரியேறும் பெருமாள்'
இப்படி ஒரு திரைப்படம் தமிழ்சினிமாவில் 2018 இல் வெளிவந்தது. இதில் என்னைக் கவர்ந்த விடயம் அதில் நடித்த நடிகர்களை விட அதில் நடிக்க வைக்கப்பட்ட ஒருநாயே. முதலில் நாய்தானே என நான் பெரிதாக அதைக் கவனத்தில் எடுக்கவில்லை. ஆனால் அது தமிழ்நாட்டைக்குரிய ஒருவகை நாய்இனம் என அறிந்து கொண்ட போது அதை அறியும் ஆவல் ஏற்பட்டது.

இந்தியாவுக்குரித்தான இருபத்தைந்து நாய் வகைகள் இருப்பதாக தியடோர் பாஸ்கரன் தனது "இந்தியாவின் நாயினங்கள்," எனும் நூலில் தகவல் தருகிறார்.

தமிழ்நாட்டின் பிரபல்யமான நாய் இனம் இராஜபாளையம் நாய். பல திரைப்படங்களில் இந்த இனம் நடிக்க வைக்கப்பட்டது. தமிழ்நாட்டுக்குரித்தான நாயினங்களாக இராஜபாளையம், கோம்பை, பட்டி, கன்னி, சிப்பிப்பாறை என பலவகை இருக்கின்றன.

பரியேறும் பெருமாள் படத்தில் "கறுப்பி", எனும் பாத்திரத்தில் நடித்தது "சிப்பிப்பாறை" எனும் நாய் இனம். இதுவும் தமிழ்நாட்டுக்குரிய நாய் இனம்தான். மெலிந்த தோற்றம் கொண்டது. வேகமாக ஓடக்கூடியது. கட்டளையை இலகுவில் புரியக்கூடிய விவேகம் கொண்டது.

தனது எஜமானுக்கு தீவிர விசுவாசமானது. மதுரை நாயக்க மன்னர்களாலும், திரு நெல்வேலி மன்னர்களாலும், இராமநாதபுரம் மன்னர்களாலும் அந்தப்பகுதி பாளையக்காரர்களாலும் அவர்களது காவல், வேட்டை போன்ற தேவைகளுக்காக இந்த வகையிலான நாய்கள் வளர்க்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

முயல்வேட்டைக்கு உகந்த நாயாக இது பயன்பட்டு வருகிறது. அதைவிட மந்தைக் காவலுக்குப் பயன்படுத்த கூடிய நாயும் இதுவே. ஒரு சிப்பிப்பாறை நாய் 100 மந்தைகளைக் காவல் காக்கும் என்கிறார்கள் .(மந்தைக் காவலுக்கு 'பட்டி 'எனும் நாயும் பயன்படுகிறது) மூர்க்கமாக யாரையும் தாக்கும் வீரம் கொண்டது. பயம் எள்ளளவும் கிடையாது. வேகமாக, களைக்காமல் ஓடக்கூடிய ஆற்றலும் இந்த சிப்பிப்பாறை நாய்களிடம் உண்டு. மோப்ப சக்தி அதிகம் கொண்டதாலும் வேட்டைக்காரர்கள் விரும்பி வளர்த்தார்கள்; வளர்க்கிறார்கள். எஜமானோடு மட்டும் சேரக்கூடியது.

வேறு யாரோடும் சேரமாட்டாது. மற்றவர்களை எதிரியாகவே தாக்கும். பிஸ்கட் போட்டாலும் வாலாட்டாது. அந்நியன் என்றால் குரல் வளையைக் கடித்து குதற மட்டுமே இந்த நாய்க்கு தெரியும். ஆகவே ஆபத்தான நாய்தான்.

இதற்கு ஏன் சிப்பிப்பாறை எனப் பெயர் வந்தது ? தமிழ்நாட்டில் விருதுநகர் மாவட்டத்தில் சிப்பிப்பாறை என்ற ஊரில் அதிகம் வளர்க்கப்பட்டதால் இந்த நாய் இனம் சிப்பிப்பாறை என அழைக்கப்படுகின்றது.

நானும் அல்ஷேசன் நாய்தான் பயங்கர நாய் என நினைத்தேன். நாலு இராஜபாளையம் நாய் சேர்ந்தால் ஒரு புலியைக் கொன்று விடக்கூடி யவை. சிப்பிப்பாறையும் அந்தளவுக்கு ஆற்றல் கொண்டதுதான். அண்மையில் இந்திய பிரதமர் மோடி சிப்பிப் பாறை நாயின் பெருமையைப் பேசி இருக்கிறார். இதனால் இந்த நாயின் மவுசு அதிகரித்து இருக்கிறது.

இந்தியாவின் சுதேச நாயினங்கள் அழிவு நிலைக்கு வந்து விட்டதாக சொல்கின்றார்கள். வெளிநாட்டு நாயினங்களின் வருகையே இதற்கு காரணம். இவை உள்ளூர் நாயினங்களுடன் இனக்கலப்பு செய்யும்போது சுதேச இனங்கள் மாற்றம் அடைந்து விடுகின்றன. ஆனால் இதற்கான பண்ணைகள் அமைக்கப்பட்டு சுதேச நாயினங்கள் உருவாக்கப்படுகின்றன என்பது ஆறுதலான விடயம்.

இலங்கையில் 4500 ஆண்டுகளுக்கு முன்னர்

**விஜயன் இலங்கைக்கு வரும்போது நாய்குரைக்கும் சத்தத்தைக் கொண்டு நாயின்பின்னே சென்று பூர்வீகப் பெண்ணான குவேனியை கண்டான் என்கிறது மகாவம்சம். ஆகவே அது தமிழ் நாய்தான், சிங்கள நாய் அல்ல.**

'பெல்லன் பதி பெல்லச' குகையில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எலும்பு எச்சத்தோடு, நாய் எலும்பு எச்சங்களும் காணப்பட்டன. அப்போதே இலங்கையரால் நாய்கள் வளர்க்கப்பட்டிருக்கின்றன. எனவே இங்கும், இலங்கைக்குரித்தான நாய் வகைகள் இருந்திருக்கக்கூடும்.

இலங்கைக்கான சுதேச நாயினங்கள் என்றால் சிங்கள வேட்டை நாய் (Singala hound) எனும் வகைதான் இப்போதுண்டு. இது அவுஸ்ரேலிய டிங்கோ, ஆபிரிக்க நாய், பப்புவா நியூகினி நாய் போன்றற்றின் சாயலில் இருக்கிறது. இலங்கை முழுவதும் சாதாரண வளர்ப்பு நாயாக ,தெருநாயாகத் திரிவதும், உருவகிக்கப்படுவதும் இந்த நாயினம் மட்டுமே.

விஜயன் இலங்கைக்கு வரும்போது நாய்குரைக்கும் சத்தத்தைக் கொண்டு நாயின்பின்னே சென்று பூர்வீகப் பெண்ணான குவேனியை கண்டான் என்கிறது மகாவம்சம். ஆகவே அது தமிழ் நாய்தான், சிங்கள நாய் அல்ல.

மற்றபடி இலங்கையில் வளர்க்கப்படும் நாய்கள் அநேகம் வெளிநாட்டு நாய்கள்தான்.

பரியேறும் பெருமாள் படத்தில் வரும் சிப்பிப்பாறை நாய் தண்டவாளத்தில் வலுக்கட்டாயமாக கட்டப்பட்டு கொல்லப்படுகிறது. காரணம்_ திரைப் படத்தை பாருங்கள் புரியும். வளர்க்கப்படும் இடம் கூட நாயையும் பாரபட்சம் ஆக்கி விடுகிறது என்பது மகாதுயரம், தாங்க முடியாதது.




பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா

O இராகவன்

இந்த ஊர்ப்புதினத்தை பெரிய பெரிய ஆக்களெல்லாம் வலுசீரியஸாய் வாசிச்சினமெண்டதில எனக்குச் சரியான புளுகு. அண்டைக்கு ஞாயிற்றுக்கிழமை ஊர்ப்புதினம் (52) வாசிச்சுப்போட்டு இவர் ஐ.சாந்தன் எனக்குக் கோலெடுத்துக் கதைச்சார்.

"நான் ஐ.சாந்தன் கதைக்கிறன். ஊர்ப்புதினம் 52 இல நீங்கள் 'எங்கடை சனம் ஒப்பீஸர் எண்டதை ஓவசியர் எண்டு மாத்தின மாதிரி இதையும் 'அரிக்கன் லாம்பு' எண்டு மாத்திப் போட்டுதுகளாம்' எண்டொருவரி எழுதியிருக்கிறியள். அதிலயொரு மிஸ்ரெக் இருக்கு. ஒப்பீஸர் எண்டது ஓவசியர் ஆகேல்ல. overseer எண்டொரு சொல்லு ஆங்கிலத்தில இருக்கு. அதை எங்கடை சனம் மாத்தேல்ல. சரியாத்தான் பாவிச்சிருக்குதுகள். Overseer எண்டால் தமிழில மேற்பார்வையாளர் (Supervisor) எண்டு அர்த்தம். இதை விட்டுட்டு நீங்கள் டொக்டர் எண்டது டாக்குத்தர் ஆனதையும் செக்கரட்டரி எண்டது சக்கடத்தார் ஆனதையும்


ஐ.சாந்தன்

புறொக்டர் எண்டது பிரக்கிராசி ஆனதையும் அட்வகேட் எண்டது அப்புக்காத்து ஆனதையும் குறிப்பிட்டிருக்கலாம்" எண்டொரு நீண்ட விளக்கந்தந்தார். உண்மையில நானிதை எதிர்பாக்கேல்ல. ஆனால் எனக்குச் சரியான புளுகு.

ஐ.சாந்தன் ஆரெண்டு உங்களுக்குத் தெரியுந்தானே? இவர் மஹாகவி எப்படிக் குறும்பாவில விண்ணனோ அதேமாதிரி ஐ.சாந்தன் குறுங்கதை யில விண்ணன். இங்கிலீசிலயும் தமிழ்லயும் சரிக்குச்சரி எழுதிற உலகத்தரமான எழுத்தாளன். அப்பிடிக்கொத்த ஆள் ஊர்ப்புதினத்தை வாசிக்கிறது பெரிய சந்தோசம் தானே.

55




வாசிச்சது மட்டுமில்லாமல் அதைப் பற்றிக் கோல் எடுத்து என்னோட டிஸ்கஸ் பண்ணினது அதைவிடப் பெரிய விசயமெல்லோ?

இதேமாதிரித்தான் ஊர்ப்புதினம் எழுதத் தொடங்கின புதிசில எங்கட கரவெட்டி மண்ணின்ர மைந்தரும் எங்கடை பழையாக்கள் ஈழத்துக் கருணாநிதியெண்டும் செல்லமா அழைக்கிறவருமான பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவோட கோல் பண்ணிக் கதைக்கேக்குள்ள "நீ என்னெண்டு என்னைக் கேளாமல் கரவெட்டியாக்களைப் பற்றி எழுதுவாய்? இப்ப கரவெட்டியாக்களின்ரை அடிவாறெல்லாம் தெரிஞ்ச ஒரேயாள் நான்தான்" எண்டு உரிமையோடை முசுப்பாத்தியாக் கோவிச்சுக் கேள்வி எழுப்பினார். பிறகு "எடேய்! நான் எழுத நினைச்சிருந்ததையெல்லாம் நீ எழுதிறாய். எனக்கது வலுசந்தோசம். திண்ணைவேலிப்பக்கம் வந்தால் ஒருகால் என்ரை வீட்டை வாடாப்பா! கரவெட்டியாக்களைப் பற்றி எழுதிறதுக்கு உனக்குத் தேவையான விசயமெல்லாம் சொல்லுறன்" எண்டும் சொன்னார். எனக்கு அவர் அப்பிடிச்சொன்னதில வலுசந்தோசம். 'கட்டாயம் வாறன் ஸேர்' எண்டு சொல்லியிருக்கிறன். அதால இனிவரப் போற ஊர்ப்புதினமெல்லாம் நல்ல களைகட்டும் எண்டு நீங்கள் எதிர்பார்க்கலாம்.

இதிலை எங்கடை பேராசிரியர் சிவலிங்கராஜாவைப் பற்றி எழுதிறதுக்கே கனக்க விசயமிருக்கு. எழுதேக்குள்ள பாருங்கோவன். மற்றது இன்னுமொண்டு. ஊர்ப்புதினம் 52 ஐ வாசிச்சுப் போட்டு ஐ.சாந்தன் கோல் எடுத்துக் கதைச்சமாதிரியே கிருஷ்ணபிள்ளை மாஸ்ரரின்ர மூத்தமகன் ரவிக்குமார் அண்ணையும் (இவரைப் பற்றி ஏற்கனவே உங்களுக்குச் சொல்லியிருக்கிறன்) என்னோட கதைச்சவர். அவர் தகப்பனைப் பற்றி இன்னும் நிறைய விசயங்கள் சொன்னவர்.

அதையெல்லாம் கட்டாயம் இதில பதிவு செய்ய வேணும். மற்றது இன்னொரு திருத்தமும் சொன்னவர். தன்ரை கடைசித் தம்பி ராஜ்குமார் சுடுபட்டுச் செத்தது 1999 இலயாம். 2000 ஆம் ஆண்டு இல்லையாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மொழியாகும் இந்தி!

முப்பதாண்டு வேள்வியினை
முடித்து வைத்த தேசத்தார்
முடுக்கி விட தடுக்கி விழும்
தரங்கெட்ட இனமோ தமிழா?

தணியாத தாகத்தை
தணிக்குமாம் இந்தி மொழி!
கணிக்கிறான் ஒரு நம்பி!
தமிழர் தம் உணர்வுகளை
தன்னலனுக் கிரையாக்கி
உமிழ்ந்து போட்டவரின்
அமிழ்தமாம் இந்தி!

உளவுத் தகவல்களும்
உருக்கும் திரவங்களும்
உதவிய மண்ணிற்காய்
உருகும் சிலர் இந்துக்கள்!

குற்றுயிராய் கிடக்கும் தம்
மாகாண சபை தன்னை
உற்று நோக்கவும் உளமில்லை!
காணி பொலிஸ் அதிகாரம்
பேணித் தர வலியில்லை!
பறிபோகும் காணிகளை
தடுத்திடவும் வழியில்லை!

சீறி வரும் சீனத்துடன்
மோதி உயிரை விடும்
அடிவருடிகளை ஆக்க
அமர்ந்து விட்டாளே இந்தி!

விக்கிரமன்

# இறைவா வழி செய்...!

கடையில பொருள் கூட விலைக்கு விற்கிறாங்க
நாங்க என்ன பண்ணட்டும்
கொரோனாவை தடுக்க முடியுமா?
பெற்றோல் விலையும் கூட்டுறாங்க
நாங்கள் என்ன பண்ணட்டும்
கறண்டையும் அடிக்கடி நிப்பாட்டுறாங்க
வேலையில பணமும் குறைய குடுக்கிறாங்க
நாங்க என்ன பண்ணட்டும்
இறைவா! நீயே வழிசெய்...!



அ.சர்விகன்,
தரம்- 3
யாழ்ப்பாணக்
கல்லூரி.

சி.கதிர்காமநாதன்

அக்கா குசினியை விட்டு முற்றத்துக்கு ஓடி வந்தார். "தம்பி ஓடிவா பெரிய பிளேனடா. இரண்டு பக்கத்தாலையும் சுத்துது. இப்பிடிப் பிளேனை நாங்கள் கண்டதில்லை. பாகிஸ்தானில இருந்து வந்து குண்டு போடப்போறாங்களோ? " அக்கா நடுங்கிக்கொண்டு சொல்லிக்கொண்டு போக, மற்றவர்களும் அச்சத்துடன் நின்றனர்





02

# எனது ஊரிலும்தான்...

பின்னேரம் வீடு திரும்பும் போது கிளாக்கர் இதனைத்தான் கதைத்தார். என் வீட்டிலுள்ளவர்கள் என் வித்தியாசமான கோலத்தைக் கண்டுபிடித்து விட்டார்கள்.

" என்ன தம்பி? வேலைக்குப் போய் வாறதிலை பிரச்சினையாகக் கிடக்கே எங்களுக்கும் நீ வரும் வரையும் நெஞ்சிடி தான். நீ போன கையோட துவக்குச் சத்தம் கேட்டா அவ்வளவு தான்.......... ஏன் வெள்ளைக்கொடி எடுத்துக்கொண்டு போகேல்லையே? " என்றாள் அம்மா.

"வெள்ளைக்கொடியும், ஐடெண்டி காா்ட்டும் இல்லாமல் ஆர் வெளியாலை வெளிக்கிடுகினம்? வழியிலை வாற பிரச்சினை எல்லாருக்கும் வாற பிரச்சினை தானே."

" அது சரி ஏன் இப்பிடி ஒரு மாதிரி இருக்கிறாய்?"

அம்மா இனி விடமாட்டாள். இனி மறைக்க முடியாது . வீடு இருளில் மூழ்கிக் கிடந்தது. மூலைக்கு மூலை எல்லோரும் யோசனையில் இருந்தார்கள். சண்டைக்குப் பின் மின்சாரம் இல்லாமற் போய்விட்டது. இனி எப்போது வருமோ? அம்மா மீண்டும் என்னைக் கேள்வியாற் துளைத்தாள்.

" அம்மா! அவசரப்படாதேங்கோ. இது தான் விசயம். என்ர முதலாளியின்ர மகன் தன்னோட இந்தியாவுக்கு வரட்டாம்." இந்தியா என நான் சொன்னதைக் கேட்டு மூலையில் யோசனையில் இருந்தவர்கள் எல்லோரும் உடன் எழுந்துவந்து என்னைச் சுற்றி இருந்து விட்டார்கள்.

" என்னடா இது! இந்தியா எண்டதும் ஓடி வந்திட்டியள்"

" இந்தியா எண்டால் எங்க வேலை?" அண்ணா ஒரு மாதிரி இழுத்தார்.

"தமிழ்நாட்டிலை தான்"

"தமிழ் நாட்டிலையே வேலை? நல்லதாப் போச்சுது" அக்காவின் குரலிலே சந்தோஷம் இழையோடியது. அந்த விளக்கு வெளிச்சத்தில் அவர்களின் முகங்களிற் தெரிந்த மலர்ச்சியை என்னால் உணர முடிந்தது. இந்தச் சந்தோஷ உணர்வு ஏன் வருகிறது.? எங்களுக்குத் துணைக்கு நல்ல பக்கத்து வீடு இருப்பது போல நல்ல நம்பிக்கை ஏற்பட்டு விடுகின்றது. முருகனின் படத்துக்குக் கீழே எழுதியிருக்கும் 'யாமிருக்கப்பயமேன்' என்ற வாசகம் நினைவுக்கு வந்தது.

எங்கள் மொழி பேசும் இனம் அங்கு இருப்பதனால் தான் இந்த உணர்வு ஏற்படுகிறது. இந்த உணர்வு பெருகிப் பெருக்கெடுத்து உணர்ச்சி மேலிட ,அந்த நாளை வாழ்க்கையில் யாரும் மறக்கமாட்டார்கள். அப்போது பின்னேரம் நாலுமணிக்கு மேல் இருக்கும். நான் வேலைக்குப் போய்வந்து தேநீர் குடிக்கும் போது அந்த இரைச்சல் கேட்டது.

'அது என்ன சத்தம்?'

வாழ்க்கையில் நாங்கள் கேட்டு அனுபவித்திராத சத்தம். எங்கள் எதிரிகளே நிலை கலங்கி நின்ற சத்தம். துன்பப் படுபவர்களைச் சந்தோஷத்திலே பூரிக்க வைக்கின்ற சத்தம்.

எங்கும் ஒரே ஆரவாரமாக இருந்தது.

அக்கா குசினியை விட்டு முற்றத்துக்கு ஓடி வந்தார். "தம்பி ஓடிவா பெரிய பிளேனடா. இரண்டு பக்கத்தாலையும் சுத்துது. இப்பிடிப் பிளேனை நாங்கள் கண்டதில்லை. பாகிஸ்தானில இருந்து வந்து குண்டு போடப்போறாங்களோ? " அக்கா நடுங்கிக்கொண்டு சொல்லிக்கொண்டு போக, மற்றவர்களும் அச்சத்துடன் நின்றனர். வீதியிலே சனங்கள் ஓடிவந்தார்கள். சந்திக்குப் பக்கத்தில் அமைந்திருந்த கல்லூரி விடுதியிலே தங்கிப்படிக்கும் பெண்கள் அலறிக்கொண்டு ஓடிவருவது தெரிந்தது. ஓட்டம், இரைச்சல், ஆரவாரம், திகைப்பு, படபடப்பு. இத்தனைக்கும் யாருக்கும் என்ன காரணம் என்று தெரியவில்லை. எல்லோரும் வானத்தை அண்ணாந்து பார்த்தார்கள். மறுபடியும் அந்த இரண்டு விமானங்களும் கரணம் அடித்துச் சாகசம் புரிந்து சுற்றிவந்தன. அந்த நேரத்தில் பூவால் மாலை கோர்த்தது போல ஒன்றன்பின் ஒன்றாக வரிசையாக அந்த இராட்சத விமானங்கள் வெளிப்படத்தொடங்கின. எல்லோரும் வானத்தைப் பார்த்தபடி நின்றோம். முதலில் வெளிப்பட்ட விமானம் செல்ல, அதிலிருந்து பரசூட்டிலே பெட்டியாகக் கட்டியபடி ஏதோ கீழே விழுந்தது. அதைப்போல மற்ற விமானங்களும் பொதிகளைத் தள்ளியபடி சென்றன.

"உது ஏழாலைப் பக்கமெல்லோ போய் விழும்"

"ஆமிக்காரங்களைத் தான் இறக்கிறாங்கள் போலக்கிடக்கு."

'ஆமிக்காரங்களை இறக்கிறாங்கள்' என்று யாரோ சொல்ல, றோட்டிலே குழுமி நின்றவர்கள் அலறிக்கொண்டு ஓட முற்பட்டார்கள். அக்கா அழுதபடி உள்ளே ஓடினாள்.

'என்ன நடந்தது? உண்மையாகவே தோட்டவெளிகளில் ஆமியை இறக்கி விட்டார்கள் தானா.?' ஒன்றும் புரியவில்லை. அந்த நேரத்தில றோட்டிலே 'பெடியன்களை' ஏற்றியபடி வாகனங்கள் விரைந்து சென்றன.

"ஐயோ! கடவுளே! சண்டைதான் தொடங்கப்போகுது."

எல்லோர் எண்ணமும் அதுதான்.

இந்த வேளையில் தான் அந்தச்செய்தி காதில் விழுந்தது.

" இந்தியாவிலை இருந்து பிளேனிலை சாப்பாட்டுச்சாமான்கள் போட்டுட்டுப் போயினமாம்"

நாங்கள் எதிர்பாராதது நடந்து விட்டது. யாரும் இப்படி நடக்குமென்று நினைக்கவில்லை. உணவுச்சாமான்கள் போட்டதோடு அடுத்தடுத்து சடுதியாக மாற்றங்கள். ஒப்பந்தம் என்ற பெயரில் துருப்புக்கள் இறக்கப்பட்டன. ஒரு நாள் முழுக்க எத்தனை விமானங்கள் ஏறிஇறங்கின. அவற்றின் சத்தமும் இரைச்சலும் எமக்குப் புது அனுபவத்தைக் கொடுத்தன. வரிசை வரிசையாக அவர்கள் கனரக வாகனங்களில் வீதிகளில் நகரத்தொடங்கிய போது மனம் குதூகலித்தது. வீதிகளிலே போவோர் வருவோர் எல்லோரும் கைகளை அசைத்து நல்வரவு கூறினார்கள்.

'இவ்வளவு வாகனங்களோடை இவ்வளவு பேர் வந்திருக்கிறார்களே! எத்தனை விதமான வாகனங்கள்!' அவர்கள் வீதியால் வரும்போதெல்லாம் இந்தக் கதை தான்.

'பெரிய அடுக்குகளோடை வந்திருக்கினம். உடனை போய்விடுவினமோ?'

எல்லோர் மனதிலும் இந்த எண்ணம் எழத்தான் செய்தது. 'அமைதிப்பணி முடிந்ததும் உடனே போய்விடுவார்கள்.' என்ற செய்தியும் வந்துகொண்டு தான் இருந்தது.

சந்திகளில் வாகனங்களை விட்டு அவர்கள் இறங்கி நின்றபோது அவர்களைச் சுற்றி ஒரு கூட்டம் கூடிநிற்கும். அதிலும் ஓரிரு தமிழ் பேசும் உயிர்கள் அந்தப் பச்சை உடைக்குள் இருந்தால், கேட்கவேவேண்டாம். சின்னப்பிள்ளைகளைப் போலத் தோளில் ஏறாத குறைதான். பலநாள் வீட்டுக்கு வராத உடன்பிறந்தவர்கள் திடீரெனச் சொல்லாமல் கொள்ளாமல் வந்தால் என்ன சந்தோஷம் ஏற்படுமோ அந்த நிலைதான். அவர்களின் பேச்சு, சிரிப்பு, கும்மாளம் அதைத்தான் காட்டின. என்ன? உண்மையாகவே பிரச்சினைக்குத் தீர்வு வந்துவிட்டதா? இனிமேல் 'ஷெல்லுக்கும்' துப்பாக்கி வேட்டுக்கும், வானிலிருந்து வீசப்படும் குண்டுகளுக்கும், 'ஆமிக்காரங்கள் வந்திட்டாங்கள்' என்ற கூக்குரலுக்கும் அஞ்சத்தேவையில்லையா? இரத்தம் பீறிடும் உடல்களைச் சுமந்தபடி அலறிக்கொண்டு விரையும் அம்புலன்ஸ் வண்டிகளுக்கு ஓய்வு கிடைத்துவிடுமா? வேலைக்கு, ஆஸ்பத்திரிக்கு, பள்ளிக்கூடத்துக்கு என்று புறப்பட்டு இடையில குண்டுகளினாற் துண்டுதுண்டாக, சதைக்கூளமாக மாறும் எமது அவல வாழ்வுக்கு முடிவு வந்துவிட்டதா? போரினால் நலிந்து, இடிந்து நொருங்கிய கட்டடங்கள் நிறைந்த வீதிகளிலே, வீட்டுக்கு வீடு நடைப்பிணமாகத் திரிந்த இந்த மனித ஜீவன்களுக்குக் கடைசியிலே தீர்வு வந்துவிட்டதா? கடைசியில் மோதல் தானாகத் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

# போராட்டங்கள் எதிர்காலத்தில் தீவிரமாகும்



ஆகவே அது தொடர்பிலும் நீண்டகால அடிப்படையில் ஏதாவது திட்டம் வருமா என்று பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். வெறும் 22 மில்லியன் மக்களைக் கொண்ட சிறிய நாட்டுக்கு இவ்வளவு பெரிய அரசாங்கம் தேவையில்லை என்பதுதான் என் கருத்து. யதார்த்தமும் அதுதான்.

**கே: கோத்தாபய அரசாங்கத்தில் அரச பணியில் ஓய்வுபெறும் வயதெல்லை 65 ஆக உயர்த்தப்பட்டது. பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கவே அவ்வாறு செய்ததாக அப்போதைய அரசாங்கம் விளக்கமளித்தது. இப்போது ரணில் அரசாங்கம், தனது இடைக்கால பட்ஜெட்டில் ஓய்வுபெறும் வயதெல்லையை மீண்டும் 60 ஆக குறைத்துள்ளது. இதுவும் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க என்று சொல்கிறார்கள். இதில் எது சரியானது? இல்லையேல் பணித்தொகுதியைக் குறைப்பதற்கான மறைமுக முயற்சியாக இதனைக் கொள்ளலாமா?**

ப: அவ்வாறும் பார்க்கலாம். ஆனால் அதில் இன்னொரு விடயமும் இருக்கின்றது. 60 வயதுடன் ஓய்வுபெற அனுமதித்தால் பல அரச ஊழியர்கள். ஓய்வூதியக்காரர்களாக மாறுவார்கள். அரசாங்கத்தின் ஓய்வூதியத்துக்கான செலவு அதிகரிக்கும். ஆகவே ஓய்வு வயதெல்லையை 60 ஆகக் குறைத்தமை எவ்விதமான பொருளாதாரப் பங்களிப்பையும் செய்யாது. செலவு அதிகரிக்கும் நிலைமையே ஏற்படும். அதேநேரம் இவர்கள் தொடர்ந்தும் பணியில் இருந்தால், அவர்களின் அனுபவம் பொருளாதாரத்துக்கு பங்களிப்புச் செய்யும். இதனாலேயே கோத்தாபய அரசாங்கம் ஓய்வூதிய வயதெல்லையை அதிகரித்திருந்தது. இப்பொழுது அரச பணியாளர்களின் எண்ணிக்கையை குறைக்கவேண்டும் என்ற அடிப்படையில் வயதெல்லை குறைக்கப்படுகின்றது. அப்படி 60 ஆக குறைத்ததும் தவறான விடயம் இல்லை. ஏனென்றால் ஏற்கனவே இருந்த ஓய்வுபெறும் வயதெல்லை 55 தான். அதுபோன்று எல்லாப் பணிகளுக்கும் தற்போதைய ஓய்வூதிய வயதெல்லை சரியானதா என்ற கேள்வியும் உண்டு. ஆகவே ஓய்வூதிய வயதெல்லைக் குறைப்பை மோசமானதாகவும் பார்க்கமுடியாது.

**கே: அரச பணித்தொகுதியைக் குறைக்கும் முதல் நடவடிக்கையாக ஓய்வு வயதெல்லையைக் குறைத்ததைப் போன்று, கல்வியை தனியார்மயப்படுத்தலில் முதற்படியாக கொத்தலவலை பல்கலைக்கழகத்தின் புதிய கிளைகள் திறக்கப்படவுள்ளதைப் பார்க்கமுடியுமா அல்லது கல்வியை இராணுவமயமாக்கும் முயற்சியாகக் கொள்ளவேண்டுமா?**

ப: இந்த நாட்டைப் பொறுத்தவரை இலங்கையில் பெரும்பாலான பொருளாதாரச் செயற்பாடுகளில் இராணுவத்தின் பிரசன்னம் இருப்பதை அவதானிக்கமுடியும். இதற்குக் காரணம் இராணுவத்தினர் எல்லா செயற்பாடுகளிலும் ஈடுபடக்கூடிய அளவுக்கு பயிற்றப்பட்டிருக்கின்றார்கள் என படை அதிகாரிகள் குறிப்பிடுவார்கள். அவர்களின் கருத்தின் படி தாங்கள் எல்லா நிலைமைகளுக்கும் தயாராக இருப்பதாக எண்ணுகிறார்கள். தற்போது கல்விச் செயற்பாடுகளிலும் இராணுவப் பிரசன்னம் இடம்பெற்று வருகின்றது. பொதுவாக பாதுகாப்பு துறைசார்ந்த உயர் கல்வி, அல்லது பாதுகாப்பு துறைசார் கற்கைகளை கொண்ட பல்கலைக்கழகங்கள் மட்டுமே பாதுகாப்பு துறையின் கட்டுப்பாட்டினுள்தான் உலக நாடுகளில் இருக்கின்றன. ஆனால் இலங்கையில் பொதுத்துறைசார்ந்த மருத்துவம், முகாமைத்துவம், பொறியியல்துறை என அனைத்து பட்டப்படிப்புக்களையும் பாதுகாப்புத்துறைக்குள் உள்ளடக்கும் வகையிலே கட்டமைப்பு மாற்றப்பட்டிருக்கின்றது.

என்னைப் பொறுத்தவரையில் அந்த கட்டமைப்புகுள் பல்கலைக்கழகங்கள் வருகின்றபோது, அவற்றின் செயற்பாடுகள் தனித்துவமானவையாக இருக்கும். பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவுக்குள் வந்தாலும் அவற்றினால் சுயாதீனமாகச் செயற்படமுடியும். ஆகவே இந்த முறையில் பல கருத்து முரண்பாடுகள் இருந்தாலும் கூட, தற்போது இலங்கையில் உயர்கல்வியை வழங்கும் முக்கியமான நிறுவனமாக கொத்தலாவல பல்கலைக்கழகம் இருந்து வருகின்றது. அதனைத் தாண்டியும் தனியார் கல்வியை ஊக்குவிக்கின்ற வழிமுறைகள் இப்போது அதிகரித்திருப்பதை தற்போது அவதானிக்கக்கூடியதாக உள்ளது. தற்போது உயர்தரத்தில் தோற்றிய மாணவர்களில் 70 வீதமானோர் பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியைப் பெற்றிருக்கின்றார்கள். ஆனால் இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு 30 தொடக்கம் 35 ஆயிரம் மாணவர்களைத் தான் உள்வாங்கக்கூடியதாக இருக்கின்றது. ஆகவே தனியார்துறையின் உள்வருகை தவிர்க்கமுடியாதது. அரச பல்கலைக்கழகங்களை விரிவுபடுத்தி எல்லோரையும் உள்ளீர்ப்பது என்பது இப்போதைக்கு சாத்தியமானதாக இருக்காது. அதற்குரிய வளங்களும் கிடையாது. தற்போதுள்ள பல்கலைக்கழகங்களுக்கு வளங்களை ஒதுக்குவதே மிகச் சிரமமானதாக இருக்கையில், மேலதிகமாக வள ஒதுக்கீடு என்பது சாத்தியமில்லை. ஆகவே அரசதுறை மற்றும் தனியார்துறை இணைந்ததான முயற்சிகளே இனிமேல் கல்வித்துறையில் சிறந்ததாக இருக்கும். இப்போதுள்ள கல்வியற் கல்லூரிகள் போன்று தனியார் துறை பல்கலைக்கழகங்களை உருவாக்கமுடியும். இதன் மூலம் அதிக மாணவர்களை உள்வாங்கமுடியும். இதுதொடர்பான கலந்துரையாடல்கள் முன்னோக்கி கொண்டு செல்லப்படவேண்டும். தற்போது பாதுகாப்புத்துறை பல்கலைக்கழகம், அரச பல்கலைக்கழகங்களுக்கு போட்டியாக செயற்படுவதை அவதானிக்க முடிகின்றது. தற்போது பல்கலைக்கழகம் சார்ந்து வருகின்ற விளம்பரங்களில் அந்தப் போட்டியை அவதானிக்கமுடியும்.

**கே: தனியார் மயமாக்கல், அரச பணியாளர்களைக் குறைத்தல் போன்ற நடவடிக்கைகளால் பாதிப்புற்றவர்கள் போராட்டங்களில் ஈடுபட்டால் அதுவும் பொருளாதாரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் தானே?**

ப: :அரசதுறையில் மேற்கொள்ள இருக்கும் பணியாளர்களைக் குறைக்கும் தீர்மானம் பல தரப்புக்களிடமிருந்து எதிர்ப்புக்களை சந்திக்கவே செய்யும். அதேபோன்று இதற்கு எதிராக தொழிற்சங்கங்களும் போராட்டங்களை முன்னெடுக்கும் என்பது வெளிப்படை. தொடர்ச்சியான போராட்டங்கள் பொருளாதாரத்தில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதில் எவ்வித ஐயமும் கிடையாது. இலங்கை போன்ற நாடுகளில் தொழிற்சங்கங்களின் போராட்டங்களுக்கு பஞ்சமும் இல்லை. சில தொழிற்சங்கங்கள் மிகமிக வலுவானதாக இருக்கின்றன. மின்சாரசபை தொழிற்சங்கங்கள், பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தொழிற்சங்கங்கள், போக்குவரத்துத்துறை தொழிற்சங்கங்கள் போன்றவை மிகப் பலம்வாய்ந்தவை. அரசாங்கம் மேற்கொள்ளும் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு எதிராக பலம் வாய்ந்த தொழிற்சங்கங்கள் போராடுமாக இருந்தால், அரசாங்கம் கருதுகின்ற பொருளாதார வளர்ச்சியை அடையக்கூடியதாக இருக்காது. தற்போது நடைபெறுகின்ற விடயங்களைப் பார்க்கின்றபோது தொழிற்சங்க நடவடிக்கைகள் மற்றும் போராட்டங்களை இரும்புக்கரம் கொண்டு அடக்குகின்ற போக்கு தொடங்கி இருக்கின்றது. ஏனைய தொழிற்சங்கங்களும் போராட்டங்களை முன்னெடுத்தால் இவ்வாறான கடும் நடவடிக்கையே எடுக்கப்படும் என்பதற்கான சமிக்ஞையே இது. ஆனால் மறுபுறம் இத்தகைய கடும் நடவடிக்கைகள், போராட்டத்தை வலுவாக்கவும் செய்துவிடும்.

**கே: மக்களின் வாழ்க்கைத் தரம் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்துள்ளது. பொருள்களின் விலைகள் 4 மடங்குக்கும் மேலாக அதிகரித்துள்ளன. ஆனால் வருமானமோ, சம்பளமோ அதிகரிக்கப்படவில்லை. இதனால் இனிமேல் எத்தகைய பாதிப்புகளை நாடு எதிர்கொள்ளப்போகின்றது?**

ப: இதுவரை இலங்கை பெற்றுக்கொண்ட சமூக அடைவுகளின் பெறுமதிகளை இந்த விலை அதிகரிப்பு தலைகீழாக்கப்போகின்றது. இலங்கையில் ஆயுள் எதிர்பார்க்கை அதிகமாக இருக்கின்றது. பிறப்பு இறப்பு வீதம் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றது. இறப்பு வீதம் குறைவாக இருக்கின்றது. குறிப்பாக வளர்ச்சியடைந்த நாடுகளுடன் ஒப்பிடக்கூடியளவுக்கு இந்தச் சமூக அடைவுமட்டங்கள் இருக்கின்றன. அதேபோன்று போஷாக்கு தொடர்பான அடைவுகளும் இதுவரைகாலமும் திருப்திகரமானதாக இருந்தன. ஆனால் தற்போது யுனிசெப் போன்ற அமைப்புக்கள் வெளிப்படையாகவே சொல்லும் விடயங்கள் அபாய எச்சரிக்கையை விடுக்கின்றன. 'இலங்கைச் சிறுவர்கள் மத்தியில் போஷாக்கு மிகமிக மோசமான நிலையிலே இருக்கின்றது ' என்பதே அந்த அபாய அறிவிப்பு. இதன் அடுத்தகட்டமாக வளர்ந்தோர் மத்தியிலும் போஷாக்கு மட்டம் குறைவடைந்து கொண்டு செல்கின்றது. இந்த நிலைமையின் எதிர்கால விளைவாக, இப்போது இருக்கின்ற ஊழியர்களின் போஷாக்கு மட்டம் மிகமிக குறைவு மட்டத்துக்கு செல்லும். அவர்களால் சிந்திக்கமுடியாத நிலை ஏற்படும். அவர்களால் உடல் ரீதியாக மேற்கொள்ளவேண்டியவற்றை செய்யமுடியாமல் போகும். இதைவிட மோசமானது . அடுத்துவரும் சந்ததியினர் போஷாக்கற்ற நோஞ்சான் குஞ்சுகளாக வரக்கூடிய வாய்ப்புக்கள் தான். இந்த சூழ்நிலை வெளிப்படையாகத் தெரிகின்றது. ஆகவே இதுதொடர்பில் அதிக அக்கறை காட்டப்படவேண்டும். இதுதொடர்பில் பலரும் சுட்டிக்காட்டிக்கொண்டே இருக்கின்றார்கள். குறிப்பாக போதியளவு புரதச் சத்தோ, புரதச்சத்து வாய்ந்த உணவுகளோ இல்லை. விற்றமின்கள் சத்துக்கள் சார்ந்த உணவுகள் இல்லை. பலர் தங்களின் ஒருவேளை உணவினை தவிர்க்கத் தொடங்கியிருக்கிறார்கள். இரண்டுவேளை உணவு அல்லது ஒருவேளை உணவைத்தான் உண்கின்றார்கள். அவ்வாறு இல்லை என்றால் செலவு குறைந்த உணவுகளுக்கு மாறி இருக்கின்றார்கள்.

முன்னர் முட்டை, நெத்தலி என்பவற்றினை வறிய மக்கள் தங்களின் புரதச்சத்துக்காக சாப்பிட முடிந்தது. ஏனெனில் அவற்றின் விலை ஏழைகளும் வாங்கக்கூடிய அளவில் இருந்தது. ஆனால் தற்போது அனைத்துமே அதிகரித்து இருக்கின்றது. அத்தியாவசியப் பொருள்கள் அனைத்தினதும், மிகையான விலையேற்றம் இலங்கையர்களது வாழ்க்கைத் தரத்தினை மிக மோசமாகப் பாதிக்கும். அவர்களின் உடல்தேறுநிலையையும் பாதிக்கும். மனிதவளத்தின் பெறுமதியைக் குறைக்கும். தற்போதுள்ளதை விட, எதிர்காலத்தில் மிகப்பெரிய ஒரு பாதிப்பை நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். அதாவது சீரமைக்க முடியாத பாதிப்பாக இது அமையும். இதுதொடர்பில் அரசின் அதிகூடிய கவனம் தேவை. வெறுமனே வரிகளை உயர்த்துவதால் , மானியங்களை நீக்குவதால் உடனடியாக அரசுக்கு சில நிவாரணங்கள் கிடைத்தாலும் கூட , சமூகம் என்ற அடிப்படையில், இலங்கையின் எதிர்காலம் என்ற அடிப்படையில் மிக மோசமான பாதிப்புக்களை இது எதிர்காலத்தில் உருவாக்கப் போகின்றது.

**கே: இடைக்கால வரவு- செலவுத்திட்டம் எப்படி அமைந்திருந்தால் மக்களின் எதிர்பார்ப்புக்கள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கும் என்று நீங்கள் கருதுகின்றீர்கள்?**

ப: மக்களின் வருவாய்க்கான வழிகளை அதிகரிக்க வேண்டிய செயற்திட்டங்கள் நிச்சயம் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். அரச மற்றும் தனியார் துறையில் சம்பளத்துக்கு பணியாற்றுபவர்களுக்கு வேறுவாய்ப்புக்கள் இல்லை. வேறுவாய்ப்பு என்பது வீட்டுத்தோட்டமோ அல்லது வேறு ஒரு வியாபாரமோ செய்யக்கூடிய நிலை இப்போதைய கட்டமைப்பில் இல்லை. சாதரணமாக சுயதொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்களின் நாளாந்த நடவடிக்கைகளும் பாதிப்படைந்திருக்கின்றன. ஆகவே நாளாந்த நடவடிக்கைகளை மீளக் கட்டியெழுப்பக் கூடிய திட்டங்கள் வரவு - செலவுத்திட்டத்தில் சொல்லப்பட்டிருக்கவேண்டும். குறிப்பாக விவசாயிகள், மீனவர்கள், சிறுகைத்தொழிலில் முயற்சியாளர்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பும் திட்டங்களை உள்ளடக்கியிருக்க வேண்டும்.

அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினையைத் தீர்க்கவேண்டிய பொறுப்பு அரசுக்கு இருந்தது. அவ்வாறு செய்வதன் ஊடாகத்தான் பொருளாதாரத்தில் உற்பத்தி நடவடிக்கையை அதிகரிக்க முடியும். அரச மற்றும் தனியார் துறை பணியாளர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு வேறு வழிகிடையாது. ஆகவே அவர்களின் சம்பளத்தை அதிகரிக்காமல், வரிகளை உயர்த்துவது அவர்களின் வாழ்க்கை தரத்தில் மோசமாக பாதிப்பை ஏற்படுத்தும். வரியை உயர்த்தல், மானியங்களைக் குறைத்தல் என்பன கட்டங்கட்டமாக மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். ஒரே இரவில் மானியங்களை நீக்கிவிட்டு சந்தை விலைக்கே அவற்றை விற்க முற்படுவது அவர்களின் வாழ்க்கையில் ஓர் அடியாகவே விழும். இந்த அடி இனிமேல் மிகப்பெரிய அடியாக மாறப் போகின்றது. எதிர்காலத்தில் வரிகள் உயர்வடைகின்ற போது அதனை செலுத்துபவர்களும் கடன்பெற்றிருப்பார்கள். ஆகவே அவர்களுக்கும் அது கஷ்டமான விடயமாகத்தான் இருக்கும். ஏனனில் அவர்களுக்கு கடன் செலுத்த வேண்டிய தேவையும் இருக்கின்றது. இந்த இடைக்கால வரவு-செலவுத்திட்டம் என்பது அரசுக்கு வருவாயைப் பெறும் நோக்கில் உருவாக்கப்பட்டதே தவிர, மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் நோக்கில் உருவாக்கப்பட்டதல்ல.

---

## அதிகரிக்கும்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறைந்து, பின்னர் 2019 தொடக்கம் இந்த வீதமானது ஏறுமுகத்தில் சென்று 2021 இல் 7.2 வீதத்தினை எட்டியுள்ளது.

எனவே சுகாதார உத்தியோகத்தர்கள் கூறியவாறு, 2010 இல் 12 வீதமாக் காணப்பட்ட சிறுமிகளின் கர்ப்பவீதம் , 2018 ஆம் ஆண்டில் 5.3 வீதமாக குறைந்ததற்கு 2010 தொடக்கம் 2017 வரை நடைமுறையில் இருந்த பொறிமுறைகளே காரணமாக இருக்க வேண்டும். பின்னர் அது 2019 இலிருந்து ஏறுமுகமாகச் செல்வதற்கும் 2018 ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டதாகச் சொல்லப்படும் "சிஸ்டம்' காரணமாதல் வேண்டும்.

இதன் கருத்து கிளிநொச்சியில் அறிமுகப்படுத்தப்பட்ட "சிஸ்டம்" தவறான "சிஸ்டம்"என்பதல்ல. ஏனெனில் அது வேறொரு பிரதேசத்தில் வெற்றிகரமாக செயற்படும் சிஸ்டமாகவே இருக்க வேண்டும் என்பது புள்ளிவிவரங்கள் வழியாக தெரிய வருகிறது. 2010 இலிருந்து 2021 வரையாக காலப்பகுதியில் யாழில் பாடசாலைச் சிறுமிகள் கர்ப்பம் தரிக்கும் வீதமானது 4.4 வீதத்துக்கும் 3.3 வீதத்துக்கும் இடையிலேயே உள்ளது. அதாவது யாழ். மாவட்டம் இலங்கையிலேயே பாடசாலைச் சிறுமிகள் கர்ப்பம் தரிக்கும் வீதம் குறைந்த ஒரு மாவட்டமாக தொடர்ந்து தன் இடத்தைத் தக்கவைத்துக்கொண்டுள்ளது. ஆனால் கிளிநொச்சியில் அது உயர்வடைந்துள்ளது. அப்படியானால் தவறு எங்கே?

விஞ்ஞானபூர்வமாக நோக்கும்போது கிளிநொச்சியில் 2018 இல் அறிமுகப்படுத்தப்பட்ட "சிஸ்டம்" கிளிநொச்சிக்குப் பொருந்தாது என்பதும், அது யாழ்ப்பாணத்துக்கே பொருத்தமானது என்பதும் இதன் மூலம் தெளிவாகின்றது. இதேவேளை சுகாதார அமைச்சின் செய்திக் குறிப்பின்படி, பாடசாலை செல்லும் சிறுமிகள் கர்ப்பம் தரிக்கும் வீதம் 2019 இலிருந்து 2021 ஆண்டு வரையான காலப்பகுதியில் தேசிய மட்டத்தில் 0.5 வீதத்தினால் குறைவடைந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

வேறு என்ன விடயங்கள் சுகாதார அமைச்சு உயரதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டன என்று அறிய மேலும் சில சுகாதார உத்தி[illegible] [illegible] கருத்துகளை ஆர் கேக்கப் போகினம்? கொழும்பில இருந்து வாறவை எங்களுக்குப் புத்தி சொல்லுற நிலைக்கு வந்திட்டம். கிளிநொச்சியில காசநோய், தொழுநோய் எல்லாம் பரவிக் கொண்டிருக்கு. 2021ஆம் ஆண்டு 53 தற்கொலை மரணங்கள். இந்த வருசம் இன்னும் ஆறுமாதம் முடியேல அதுக்குள்ள 25 க்கு மேல தற்கொலையள். இதில பள்ளிக்கூடம்போற பிள்ளையளும் அதிகம். ஆரும் அதில அக்கறைப்படுகிற மாதிரி தெரியேல. கொழும்புக்காரர் கவனியுங்கோ எண்டு சொல்லிப்போட்டுப் போட்டினம். இங்கை உள்ளவை செய்ய வேணுமே?. இவையள் ஆளாளுக்குள்ள அடிபட்டு அரசியல் செய்யினமே தவிர சனத்தைப் பற்றி சதத்துக்கும் சிந்தனை இல்லை" என்று அங்கலாய்த்தார் ஒரு உத்தியோகத்தர். "அது உண்மைதான். கிளிநொச்சி சுகாதார சேவைகள் பணிப்பாளரா இப்ப இருக்கிற ஐயா பொதுச் சுகாதாரத்துறையில பெரிய படிப்பு படிச்சவராம். தகுதியானவராம். ஆனால் அவரால கூட உதுகளை நேர காலத்தில கண்டு பிடிக்க முடியாம போச்சுதே" என்றார் இன்னொருவர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் 'பொது அமைப்புகளுக்கும்' 'சமூக அக்கறை கொண்ட சிவில் சமூகக் கண்ணியவான்களுக்கும்' இது சமர்ப்பணம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம் போட்டி

99

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 4 | 5 | 6 | 7 |
| 8 | | | 9 | | | | |
| ■ | | ■ | 10 | | ■ | | ■ |
| 11 | | 12 | | ■ | 13 | | 14 |
| 15 | | | ■ | 16 | | | |
| 17 | | ■ | 18 | | | ■ | |
| | ■ | 19 | | | ■ | 20 | |
| ■ | 21 | | ■ | 22 | | | |

அனுப்புபவர் பெயர்:..............................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..............................................................

கையொப்பம்:..............................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. தண்டிகை 4. சர்பத்துக்குப் போடுவார்கள் 8. பதில் உதவி 10. வாயினால் கவ்வு 11. சான்று 13. தகைமை பற்றிய நிலைமை 15. செதுக்கும் கலையில் வல்லவர் 16. நீதிகேட்டு கண்ணகி வந்தது இக்கோலத்தில்தான் 17.மேல்நாட்டுக் குடிவகை ஒன்று. 18. நிலைவரம் பற்றிய தன்மை 19. இல்லாள் 20. பல அல்ல 21. அரைவாசி 22. சடப்பொருள்களின் மூன்று நிலைகளுள் ஒன்று

## மேலிருந்து கீழ்

1. புறாவுக்காகத் தனது சதையை அறுத்துக் கொடுத்த சக்கரவர்த்தி 2. காமநோய் 3. சிறைப்பிடிக்கப்பட்டவன் 4. தேசிய விளையாட்டுக்களில் ஒன்று. 5. தோழன் 6. கைகூப்பு 7. ஏவுகணை ரகம் 9. மிகநீண்டகால அளவீடு 11. ஒன்றை வரவேற்று உதவுவது 12. ஒரு பெண் 13. ஒன்றை வழிப்படுத்தும் பொறுப்பு 14. மூன்று முனை கொண்ட வேல் 16. தலையில் எழுதப்பட்டது 18. மறக்காமல் ஞாபகம் கொள் 19. நிலா 20. சைவர்கள் வாயில் ஒலிப்பது

**சொற்சிலம்பம் போட்டி 98 க்கான விடைகள்**

**இடமிருந்து வலம்**

1.சகவாசம் 5.சக 7.மருங்கு 8.சதிர் 9. கனிதல் 11. துகில் 13. விலாசம் 15. வலி 17: பனி 18. பதிகம் 21. மதியம் 22. ஊண் 23. மதில் 24. பிரதானி

**மேலிருந்து கீழ்**

1.சமத்துவம் 2.கரு 3. வாங்கல் 4. சகுனி 5. சதி 6. கர்வம் 8. சல்லாபம் 10. தவி 12. கிலி 14. சனி 16. புதிய 18. பதில் 19. கம்பி 20.கன்னி 21. மதி 22. ஊதா

**சொற்சிலம்பம் போட்டி இல.99**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு
**09.09.2022** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

**போட்டி இலக்கம் 98 இல் வெற்றி பெற்றோர் விவரம்**

**1 ஆம் பரிசு**
**திருமதி. க.இரவிச்சந்திரன்**
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி

**2 ஆம் பரிசு**
**மேரிராணி இரட்ணராஜா**
இல.12, மூளாய் ஒழுங்கை

**3 ஆம் பரிசு**
**சி.பாலசுந்தரம்**
சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.

**4 ஆம் பரிசு**
**ச.ஜசிந்தன்**
இலக்கணாவத்தை ,
உடுப்பிட்டி.

**5 ஆம் பரிசு**
**திருமதி.புவனா தில்லை**
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

# யாழ்ப்பாண வரலாறு

1505-1948 வரை

ந.பரமேஸ்வரன்



கடந்த நாற்பது வருடங்களில் இந்தக்கோயில் (மானிப்பாய் மருதடிப் பிள்ளையார்) இந்த நாட்டிலுள்ள பல்லாயிரக்கனக்கான பக்தர்கள் ஒன்றுகூடும் ஆலயமாக மாறி விட்டது. இந்தக்கோயில் எமது தேவாலயத்துக்கு எதிர்ப்புறமாகத்தான் அமைந்துள்ளது.

எமது தேவாலய வளாகம் இந்தக்கோயிலின் வளர்ச்சிக்கு உதவ முற்பட்டாலும் சைவர்கள் தமது எதிர்ப்பைக் காட்டுகின்றனர். யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள எட்டுப் பெரிய கோயில்களில் இதுவும் ஒன்று. இதைவிட 500 சிறிய கோயில்களும், ஒவ்வொன்றுக்கும் தனித்தனி பூசகர்களும் இருக்கின்றனர் . இவற்றைவிட சிலர் தமது வீடுகளிலும் கோயில்களை கட்டி வழிபட்டு வருகின்றனர்.

பன்னிரண்டு நாள் திருவிழாவின்போது , தினமும் காலை ஆறுமணிக்கு , கோயில் மணி ஒலித்தவுடன் அனைவரும் கோயிலில் ஒன்று கூடுகின்றனர். கருங்கல்லால் அமைக்கப்பட்ட பிள்ளையார் விக்கிரகம், யானைத் தலையுடன் நான்கு கைகளையும் பெரிய வயிறையும் கொண்டதாக துருக்கிய பாணியில் அமர்ந்திருப்பது போன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த விக்கிரகம் பால், பன்னீர் என்பவற்றால் அபிஷேகம் செய்யப்பட்டு பின்னர் ஆடைகளாலும் நகைகளாலும் அலங்காரம் செய்யப்படுகிறது. நெற்றியில் திருநீறு பூசப்படுகிறது.இது சிவனின் மூன்றாவது கண்ணைக் குறிக்கிறது. மக்கள் பழங்களையும் அரிசியையும் காணிக்கையாக கொண்டு வந்து கொடுக்கின்றனர். அரிசியை, பொங்கிப் படைப்பதை ஐயர்மார் மட்டுமே செய்கின்றனர்.இசைக்கருவிகளுடன் பாடல்களை பாடுவதுடன் திருவிழா முடிவடைகிறது.

அடுத்ததாக கொடியேற்றம் கோயிலின் நடுவே நடைபெறுகிறது.விபூதியும் சந்தனமும் பக்தர்களுக்கு வழங்கப்படுகிறது. அவர்கள் நெற்றி,கழுத்து,மார்பு,தோள், முதுகு என்பவற்றில் சிவனைக் குறிக்கும் கோடுகளாகப் பூசிக்கொள்கின்றனர்.இவை யாவும் உயர் சாதியினருக்கே முதலில் வழங்கப்படுகின்றன. பித்தளை விக்கிரகத்தின் பின்புறம் உள்ள பூக்கள் அனைவருக்கும் ஒவ்வொன்றாக வழங்கப்படுகின்றன. காலையும் மாலையும் பக்தர்கள் கல், மண் என்பவற்றின் மேலால் கோவணத்துடன் வீதியில் அங்கப்பிரதட்சணம் செய்கின்றனர். பெண்களும் கைகளை நிலத்தில் ஊன்றி, முகத்தை மண்ணில் வைத்து, கால்களை மடித்து, எழுந்து, வலம் வருகின்றனர்.

நண்பகல் வேளையில் மறுபடியும் திருவிழா நடைபெறுகிறது. பித்தளை விக்கிரகத்தை எலி வாகனத்திலோ மயில் வாகனத்திலோ வைத்து கவனமாக தோளில் சுமந்தவாறு உள்வீதியை சுற்றிக்கொண்டு வருகின்றனர். தினமும் ஒவ்வொரு வாகனத்தில் வீதியுலா நடைபெறுகிறது. மேளம்,நாதஸ்வரம்,தாளம் என்பவற்றுடன் பல்வேறுவிதமான வாணவேடிக்கைகளுடன் திருவிழா இடம்பெறுகிறது. நள்ளிரவு திருவிழாவின் போது ஒடுக்கப்பட்ட யுவதிகள் விக்கிரகத்தின் முன்னே (சின்னமேளம்)நடனமாடுகின்றனர்.

இறுதி நாளான பன்னிரண்டாம் நாள் தேர்த் திருவிழா. காலை எட்டு மணிக்கே பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் பல்வேறு இடங்களிலிருந்தும் கால்நடையாகவும், குதிரைவண்டி,மாட்டு வண்டி என்பவற்றிலும் ஒழுங்கைகள் வழியாகவும் வயல்வெளிகள் ஊடாகவும் ஒன்றுகூடுகின்றனர். திறந்த வெளியில் பானைகளை வைத்து பொங்குவதால் வானம் ஒரே புகை மண்டலமாக காணப்படுகிறது.பொங்கலை பூசகர்களுக்கும் யாசகர்களுக்கும் வழங்கிவிட்டு, வீட்டுக்கும் எடுத்துச்செல்கின்றனர். குறைந்த சாதிக்காரர்கள் ஆலயத்தின் உள்ளே சென்று வழிபடுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. உயர்சாதியைச் சேர்ந்த ஒருவரே பொங்கலை எடுத்து வந்து அவர்களுக்கு வழங்குகிறார். ஆலய வாசலில் உள்ள சேறு நிரம்பிய புனித குளத்து நீரை பக்தர்கள் குடிப்பதற்கும் குளிப்பதற்கும் துணி துவைப்பதற்கும் காணிக்கை செலுத்துவதற்கும் பயன்படுத்துகின்றனர். மாடுகளை குளிப்பாட்ட வும், மாடுகள் கட்டுமிடத்தின் வெக்கையை தணிப்பதற்கும் இந்த குளத்து நீர் பயன்படுத்தப்படுகிறது. காவடிகளை தோளிலும் தலையிலும் சுமந்து வருகின்றனர்.இந்தக் காவடிகள் மயிலிறகு, பூக்கள் என்பவற்றால் அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளன. காவடிகள் வீடுகளிலிருந்து எடுத்து வரப்படுகின்றன. நோய், நொடி என்பன ஏற்பட்டால் நேர்த்திக்கடன் வைத்து காவடி எடுக்கின்றனர். காவடி எடுப்பவர்கள் சில நாள்கள் விரதமிருந்தே காவடி எடுக்கின்றனர். காவடி எடுப்பதை புனிதமாக கருதி இசையுடன் பாடி ஆடிக்கொண்டு வருகின்றனர். கடந்த வருடம் ஆனைக்கோட்டையிலிருந்து வந்தவர்களுக்கும் வட்டுக்கோட்டையிலிருந்து வந்தவர்களுக்குமிடையே சச்சரவு ஏற்பட்டது. உடனே விக்கிரகத்தை தூக்கிக் கொண்டு உள்ளே சென்றுவிட்டனர். ஆனைக்கோட்டையிலிருந்து வந்தவர்களை உள்ளே அனுமதிக்கவில்லை. அவர்கள் வேலியில் இருந்த தடிகளை பிடுங்கி தாக்குதல் நடத்தினார்கள். காயமடைந்த இருவரைத் தூக்கிக்கொன்டு எமது மருத்துவமனைக்கு வந்தனர்.நாங்கள் எமது முறைப்படி சிகிச்சை அளித்தோம். காயமடைந்தவர்களில் ஒருவர் அடுத்த நாள் இறந்துவிட்டார். நாங்கள் இந்த விடயத்தை அவர்களுக்கு ஒரு எச்சரிக்கையாக விடுத்தோம். அதாவது ஸஎல்லாவற்றையும் செய்து விட்டு புனித நீரில் குளிப்பதால் பிரயோசனமில்லை' என எடுத்துரைத்தோம். எமது அறிவுரை அடுத்த வருடம் பிரதிபலிக்கும் என நாங்கள் நம்புகிறோம். உருட்ட முடியாத சில்லுகளுடன் கூடிய பழைய பெரிய தேர் பூக்களாலும், கொடிகளாலும், துணிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.பல பிராமணர்கள் கூடியிருந்தனர் தேரின் முன்னே சாம்பிராணி எரிந்து கொண்டிருந்தது.

*(வரலாறு நீளும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org